469

Regd. No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR

வை. மு. கோதைநாயகி அம்மாள்

(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

16 MAR

# JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 6



தனிப் பிரதி அணா 3.

...ன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

3L
...211, M124.5Y
M30'7'6
2/8023

...வாரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

# ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட "**சாருலோசனா**" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும்; இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். "**சாருலோசனா**" வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் **எட்டணா** கூடச் சேர்த்து ரூ. **2** அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

## சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகு மாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் **புதிய நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**மானேஜர்.**

16MAR19



என்ற கடிதத்தை எழுதி உறையிலிட்டு அதை அன்றே தபாலில் அனுப்பிவிட்டான். கடிதம் குறித்த நேரத்தில் சாருகாஸனின் கரத்தையணுகிற்று. சாருகாஸன் அக்கடிதத்தை வெகு ஆவலோடு படித்துப் பேரானந்தமடைந்தான். ஏற்கெனவே ஜெயமணியின் கடிதத்தைப் படித்து மனம் தாங்காது விசனக்கடலில் ஆழ்ந்திருந்த சமயம் சந்திரகாஸனின் கடிதம் சிறிது ஆறுதலையளித்தது. தன்னை ஜெயமணி பார்க்கவேண்டுமென்ற ஆவல்கொண்டிருப்பதைப் படித்ததும் அவன் மனத்திலும் அதே நினைவு சுறக்கவாரம்பித்தது. ஏற்கெனவே ஜெயமணியைப் பார்க்க மிகுந்த அவா உண்டாகி இருந்த தருணம் அவ்வாவலைத் தூண்டிவிட்டதுபோலாய்விட்டதால் அவனுடைய மனத்துயரம் பன்மடங்கு பெருகி அதிகரித்துவிட்டது. 'ஜெயமணியை எப்போது பார்ப்போம், பார்த்து என்று மனங் களிப்போம்' என்கிற ஏக்கம் அவனைக் கப்பிக்கொண்டுவிட்டதால், பயித்தியம் பிடித்துவிட்டவன்போல "ஜெயமணீ! ஜெயமணீ! நீ என் அன்பார்ந்த—காதல் நிறைந்த—கற்பகமணியல்லவா! நீ என் இன்பமணியல்லவா! ஆ...........இல்லை! இல்லை! நீ யாரோ அன்னிய மாதரசி! நான் யாரோ பாபாத்மா! நீ என் கண்மணி என்று கூறினால் எனது நா புழுத்துவிடுமல்லவா! நீ கங்காதரரின் கண்மணியல்லவா! கங்காதரரின் அதிருஷ்டமணியல்லவா! கங்காதரரின் அருந்தவத்தினாலுதித்த அமுதச் சுடர்மணி யல்லவா! கங்காதரர் சதா கண்டு களிப்புறும் பாக்யத்தை யளிக்க ஜனித்த காரிகைமணி யல்லவா! அன்னியரின் பொருளாகிய உன்னை நான் மனத்தில் நினைப்பது கூடுமா! கண்டு களிக்க எண்ணுவது பொருந்துமா! தகுமா? ஒருபோதும் தகாது; தகாது. பாழும் மனத்தில் இந்த உறுதியானது ஒரு வினாடியும் நிலைக்காமல் நிலைபுரண்டுப்போய் என்னை முற்றிலும் பித்தனாக்கிவிடுகின்றதே! வைராக்யமென்பது என் மனத்தில் நிலைத்து என்னைக் காப்பாற்றலாகாதா! வைராக்யத்தையே உணவாக நான் கொள்ளவேண்டும் என்று முயன்று வருகையிலும் என் மனமும் எண்ணமும் ஜெயமணி என்கிற பெயரையும் அவளுடைய அழகிய ரூபத்தையும் மறக்கக்கூடவில்லையே! ஹா, என் கண்மணி! ஜெயமணி! நான் உன்னைக் காண்பதற்காக ஆவல்கொண்டு வந்தபோதிலும் முன்போல உன் வீட்டிற்கு நேரில்

210023

வந்து உன்னைக் கண்டு களிக்கும் பேறு உண்டா! அதில்லையே! உன் தமையரின் முகத்திலும் நான் விழிப்பதில்லை என்கிற ப்ரதிக்ஞையை மோதிரத்தை நீ என்னிடம் திருப்பிய அச்சமயமே கொண்டேன். ஆகையால் உன் வீடு வருவதற்கும் இல்லை. உம். விதிதான் செய்யும் கூற்றை வெல்வதற்கொருவர் இவ்வுலகில் இருக்கின்றாரா? இல்லை! இல்லை!!" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டும் புலம்பிக்கொண்டும் பித்தன்போலானான். 'தான் போவதா, வேண்டாமா!" என்கிற கேள்வியை அவனையறியாது அவன் மனமே அவனைக் கேட்கவாரம்பித்தது. இவ்விதமான கேள்விகளுக்குச் சரியானவாறு பதிலளிக்கமாட்டாது தியங்கிக்கொண்டே குப்புறப் படுத்துவிட்டான்.

தினந்தோறும் ஜெயமணியின் புகைப்படத்தை எடுத்து வைத்துக்கொள்வதும், தன் மனம் போனவாறு பித்தன்போல பிதற்றுவதும் கண்ணீர் விட்டுக் கலங்குவதுமாக தனது பொழுதைத் தொலைத்துக்கொண்டே வருகிறான். ஊருக்குப் போவதற்கு விருப்பும், வெறுப்பும் பாதிப்பதில் அதுவிஷயத்தில் மிக்க யோசித்த வண்ணமே இருந்தான். இவ்விதம் ஒருமாதகால மாகிவிட்டது. அவன் பிதாவிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. அவைகளுக்குப் பதிலே எழுதாமல் தள்ளிவிட்டான். சந்திரகாஸனுக்கும் சோமநாதனுக்கும் அவ்வப்போது கடிதமெழுதிக்கொண்டே இருக்கிறான். இவ்விதமாக இருக்கும் நாளையில் ஜெயமணிக்கு ஏதோ தேக அசகம் நேர்ந்துவிட்டதாயும், தடபுடலாகப் படுத்திருப்பதாயும், உடனே வரும்படியாயும் சந்திரகாஸனிடமிருந்து தந்தி வந்தது கண்டு மனம் துடித்துக் கலங்கினான். எவ்வாறேனும் சென்று ஜெயமணியைப் பார்த்துவிட்டு வருவதென்று தீர்மானித்து அப்பொழுதே லீவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டான். இவன் இரயிலடிக்குச் சென்று டிக்கட்டு பெற்றுக்கொண்டு இரயிலேறுவதற்குள் இரயில் புறப்பட ஆயத்தமாகிவிட்டதால் தடபுடலாக ஓடிவந்து இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறினான். மறுவினாடியே வண்டி புறப்பட்டுவிட்டது. சாருகாஸன் வண்டியிலேறி தனது பெட்டியை வைத்துவிட்டு உட்கார்ந்தவாறு வண்டியைச் சுற்றி ஒரு முறை பார்த்தான். அப்படியே திடுக்கிட்டுத் தம்பம்போலாய்விட்டான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை, இவ்வாறு மாறுதலடைவதற்குக் கார

ணம் பாதெனில் இவன் ஒரு சிறிதும் எதிர் பாராவிதமாக அதே வண்டியில் பத்மலோசனு இளைத்து, மெலிந்து, துரும்புபோல உட்கார்ந்திருந்ததேயாகும்.

அவ்வாறு உட்கார்ந்திருக்கும் பத்மலோசனுவிடம் தான் எவ்விதம் பேசுவது? பேசுவதா, வேண்டாமா?" என்கிற கேள்விகளை அவன் மனமே அவனைக் கேட்கத் தலைப்பட்டுவிட்டதால் தத்தளித்தவாறு தலை குனிந்துகொண்டு உட்கார்ந்துவிட்டான். அங்கு அமர்ந்திருக்கும் பத்மாவோ தலை நிமிரவே இல்லை. தலை குனிந்தவாறிருப்பினும் சாருகாலனைக் கண்டதும் அவனை அன்புடன் வரவேற்பதற்கு அவளுடைய இருவிழிகளினின்றும் நீர்த்துளிகள் முதன்மையாகக் கிளம்பிவிட்டன. அந்தப்பாவை தன் கரத்திலிருக்கும் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொண்டாள்.

அவளுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமாக ஆய்விட்டது. சாருகாலன் ஏற்கெனவே வருந்திக்கொண்டிருப்பதோடு இந்த கோரக் காட்சியையும் கண்டு மனந்தாங்காமல் 'நாம் ஏன் இந்த வண்டியில் ஏறினோம்?' என்று வருத்தமுற்றான். இருவரும் 10-நிமிட நேரம்வரையில் ஒருவரோடொருவர் பேசாமல் மவுனமாகவே இருந்தார்கள்.

பத்மலோசனு புலம்பும் கன்றாவியைக் கண்டு சகிக்கமாட்டாத சாருகாலன் வருந்தியவாறு பேசத்தொடங்கி "அம்மணி! பாவி நான் உன்னை வருத்தும்பொருட்டு தெரியாமல் இவ்வண்டியில் ஏறிவிட்டேன். அடுத்த ஸ்டேஷனில் இறங்கி வேறு வண்டியில் ஏறுகிறேன். புலம்பாதே! இன்னும் நீ மனத்துயரத்துடன் இருப்பதனால் பயன் உண்டா! வேண்டாம்; புலம்பவேண்டாம்! எந்த ஊருக்குப் பிரயாணம்? டிக்கட் வாங்கிக்கொண்டாயா!" என்று சம்பாஷணையை வேறு வழியில் திருப்பிக் கேட்டான்.

அது கேட்ட பத்மலோசனுவின் துக்கம் அதிகரித்தது. பேசுவதற்கு வாயெடுத்தும் பேசவொட்டாமல் நாத்தடுமாறி நெஞ்சில் துக்கம் அடைக்கின்றது. அவ்வாறே சில நிமிஷநேரம் புலம்பிப் பின்னர் சற்று தேற்றிக்கொண்டவளாய்ப் பேசத்தொடங்கி "டாக்டர்! எல்லா

விதத்திலும் தான் என்னுடைய துர்ப்பாக்கியம் தாக்கிவிட்டது. சகலருக்கும் பொதுவாகிய இந்த இரயில் வண்டியில் தெய்வச் செயலாக ஏறிச்செல்வதற்கும் பஞ்சமா! பாவி நான் அதற்கும் பாக்யம் செய்யவில்லையா! என் கண்ணுல் காண்பதற்குக்கூட கறுப்பு வந்து விட்டதா! உம். அவ்வாருன அதிர்ஷ்டஹீனமும் நேர்ந்தாலும் நேரும். இங்குத் தமக்கு உட்காருவதற்குச் சம்மதமில்லை எனில் தாராளமாகச் செல்லலாம். என்னுடைய விதியே எனக்கு முற்றிலும் துணை இருப்பதுபோல இப்போதுமிருக்கின்றது. என்னுடைய பிறவி இவ்விதம் பாழாகிவிடுமென்று தெரிந்திருந்தால் நான் இப்பூத உடலை இவ்விதம் வளர்த்திராமல் ஆதியிலேயே எனக்கோர் வழி செய்து கொண்டிருப்பேன். உம். இனி எதைக் கூறி யாது பயன்?" என்று கண்ணீர் வழிந்தோடியவாறு கூறினுள்.

இம் மொழிகளைச் செவியுற்ற சாருகாலன் மிகவும் மனங் கலங்கிவிட்டான். "ஐயோ! நம்மால் எத்தனை உயிர்கள் தான் வதை படவேண்டும் என்ற ஓர் வெறுப்புடன் கண்ணீர் பெருகிவிட்டது. அச்சமயம் அவன் அந்த மின்னுளுக்கு என்ன பதில் பேசுவதென்பதை அறியாது சிறிதுநேரம் தயங்கிப் பின் பேசத் தொடங்கி "அம்மா! பத்மலோசனு! உனது மொழிக்கு யான் யாது பதிலளிப்பேன்? என் மனம் அம் மொழியால் உருகுகின்றதேயன்றி உறுதி யளிக்க முன் வரவில்லையே! நான் என்ன செய்வேன்? நானே என்னுடைய பிறவியை வெறுக்கின்றேன். ஏன் இவ் வுயிரைத் தாங்கி உடலைச் சுமக்கவேண்டும் என்கிற கேள்வியை என் மனமே பல காலும் கேட்பதுண்டு. ஆனுல் அச்சமயம் என் கண்மணி போன்ற ஜெயமணியின் அன்றலர்ந்த நளின மலர் போன்ற வதனமும், உலகத்தையே ப்ரமிக்கச் செய்யும் பார்வையும் என் முன் தோன்றி என்னைத் தடுத்துவிடுகின்றன. என்னுல் பிறருக்கும் சுகமில்லை. என் ஜீவனுக்கும் சுகமில்லை. பூபாரமாக இருப்பது தான் ஒன்று. மற்றபடி யான் ஓர் மனிதனே யல்ல; என்னைச் சவமாக எண்ணிவிடலாம். என்னை விவாகம் செய்துகொள்ளும்படியாக என் பெற்ருேர் செய்த சூட்சிகள் ஒன்றிரண்டல்ல. அவைகளைக் கூறுகிறேன் கேள். (தன் பெற்ருேர்கள் செய்த எல்லா விஷயங்களையும்

கூறி) இவ்விதம் முடிந்துவிட்டது. என் மனத்தை நான் ஓரிடத்தில் பறி கொடுத்த பிறகு அந்த மனத்தை மறு பிறவியில் தான்மாற்றக் கூடும். இம்மையில் இல்லை. நீ அவ்வெண்ணத்தை மறந்துவிடுவதே நலம். உன் விருப்பப்படி நான் இந்த இரயிலிலேயே ப்ரயாணம் செய்கின்றேன். நீ எங்கு செல்கிறாய்?" என்று மெல்லக் கேட்டான்.

இதுகேட்ட பத்மலோசனா மெல்லப் பேசத் தொடங்கி "எனக்கு உடம்பு சரியாக இல்லை. என்னால் வேலை செய்யக் கூடிய நிலைமையில் என் வினை என்னை வைக்கவில்லை. எனக்கு எவ்விடத்திலிருப்பினும் ராஜபோகத்திலிருக்கக் கூடிய செல்வத்தைக் கடவுள் அளித்திருந்தும் நான் விளையாட்டாக பொழுது போக்கின் பொருட்டு இத் துறையில் படித்து இவ் வூரில் வேலைக்கும் அமர்ந்தேன். நான் பூமிக்குப் பாரம் என்று கூறவேண்டிய வார்த்தைகளைத் தாங்களே கூறிவிட்டீர்கள். கஷ்டத்துடன் காலத்தைக் கடத்த வேண்டிய பாவி யான் எந்த விடத்தில் இருந்தால் என்ன! என்று தீர்மானித்து என் தாய் வீட்டிற்கே செல்கிறேன். வேலையை ராஜீநாமா செய்துவிட்டேன். என் பெற்றோருக்குள்ள செல்வத்திற்கு நானே வாரிஸுதாரி. ஆகையால் இன்னும் ஏன் நான் உழைக்க வேண்டும்? இவ்விதமே தொலைத்தால் காலம் தொலைகின்றது. தாங்கள் எங்கு செல்கின்றீர்கள்?" என்று பணிவாகக் கேட்டாள்.

சாரு:—நான் சென்னைக்குச் செல்கிறேன். அங்கு எனது காதலி ஜெயமணிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்தது. அதற்காகச் செல்கிறேன். பாவி என்னுடைய அதிர்ஷ்டஹீனத்தினால் அந்த மின்னாளை உயிருடன் கண்டு களிப்பேனோ! அன்றி சவமாகக் கண்டு கலங்குவேனோ! தெரியவில்லை. அந்த விசாரமே மனத்திலிருப்பதால் பேசுவதற்கும் என்னால் கூடவில்லை. வயிற்றில் ஏதோ வதை செய்கின்றது. தாங்க இயலாத சங்கடம் உண்டாகின்றது. மகா பாபியாகிய என் செவியில் என்ன செய்தி எட்டுமோ! எவ்விதமாகுமோ! தெரியவில்லை.

பத்ம:—ஐயோ, பாவம்! அந்தம்மாளுக்கு என்ன உடம்பு?— என்று சிறிது வருத்தமடைந்து தேறுதல் கூறினாள். சாருகாஸ

னின் மனம் தத்தளிக்கின்றது. "ஐயோ! ஜெயமணிக்கு உடம்பு சற்று குணம் என்கிற வார்த்தையை எப்போது கேட்போம்? நமது மனம் எப்போது நிம்மதி படையும்? நம்மைக் கண்டு ஜெயமணி அவள் குயில் போன்ற குரலினுல், "சாருகாஸா! வந்தாயா!" என்று எப்போது அழைக்கக் கேட்டு மகிழ்வோம்?" என்பதுபோன்ற விஷயங்கள் மனத்தில் போராடுகின்றன. "ஜெயமணீ! ஜெயமணீ!" என்று பிதற்றியவாறு தவிக்கின்றுன். கடவுளை எல்லாம் வேண்டு கின்றுன். இவ்விதம் மனந் தவித்தவாறே இரயில் ப்ரயாணத்தை முடித்துக்கொண்டு சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தான்.

அங்கு யார் என்னவிதமான செய்தியைத் தனக் குரைத்து விடுவார்களோ! என்கிற பெருங் கலக்கத்துடன் இறங்கி இரண்டு வாடகை மோட்டார் பேசி பத்மலோசனுவை ஒரு வண்டியில் இராய புரத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் ஒரு வண்டியிலமர்ந்து நேரே அடையாற்றுக்கு, சோமநாதன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அப்போது வீட்டில் சோமநாதன் இல்லை என்பதை வீதியிலிருந்த வேலைக்காரனுல் தெரிந்துகொண்டு உடனே உள்ளே சென்றுன்.

இவனைக் கண்டதும் சந்திரகாஸன் ஓடிவந்து சாருகாஸனை அன்புடன் தழுவிக்கொண்டு கைலாக்குக் கொடுத்து அழைத்துச் சென்றுன். சாருகாஸன் வெகு ஆத்திரத்துடன் "நண்பா! ஜெய மணியின் உடம்பு எப்படி இருக்கிறது? என் செவியில் நல்மொழி விழுமா!" என்று கேட்டான்.

சந்தி:—நண்பா! கவலைப்படாதே! நீ முதலில் ஜெயமணியின் பங்களாவிற்கு வா! நாம் போய் நேரில் பார்க்கலாம். இன்னமும் ப்ரக்ஞை இல்லை. திடீரென்று மயக்கமாக கீழே விழுந்துவிட்டாள்; ஒருவிதமான இசிவு வந்துவிட்டது. உடனே சோமநாதன் சென்று எத்தனையோ முறைகளில் மருந்து கொடுத்துப் பார்த்தான். நினைவு உண்டாகவில்லை. அன்றே ப்ரமாதமாக ஜ்வரம் வந்துவிட்டது. அந்த கோரமான நிலைமையிலும் அவள் இரண்டொரு தரம் உன் பெயரை தன்போக்காகக் கூறக் கேட்டதும் எனக்கு மிகுந்த விசன மும், பயமும், தாங்க வியலாத துக்கமும் வந்துவிட்டன. உடனே

உனக்குத் தந்தி கொடுத்தேன். அவளுக்கு எப்போதேனும் சற்று நினைவு வருகின்றது; உடனே மாறிவிடுகின்றது. சோமநாதனும் இன்னும் வேறு பெரிய மருத்துவர்களும் வயித்தியம் செய்கிறார்கள். நீ வந்திருக்கும் சேய்தியைக் கேட்டால் அவளுக்குத் தெளிவு ஏற்படலாம்; நீ உடனே கிளம்பு" என்றான்.

இம் மொழிகளைக் கேட்ட சாருகாஸன் கண்ணீர் விட்டுக் கலங்குகின்றான். தான் உடனே சென்று பார்க்கவேண்டு மென்கிற பெருத்த ஆசை ஒரு புறம் பாதிக்கின்றது. பின்னும் அங்கு ஜெய மணியின் தாயார் இருப்பதால் அவள் முகத்தில் விழிப்பதற்குப் பிடிக்காமையால் சற்று மனம் குழம்புகின்றது. இந்நிலையில் அவன் சந்திரகாஸனை நோக்கி, "நேசா! இதுவரையில் ஜெயமணி உயிருடன் இருக்கிறாள் என்கிற சந்தோஷச் செய்தியை நான் காதால் கேட்கப் போகிறேனு என்று ஏங்கினேன். கடவுளின் கருணையால் இம் மொழியைக் கேட்டுக் களித்தேன். ஜெயமணியைப் பார்க்க வேண்டு மென்கிற ஆவல் மட்டும் நிரம்பியுள்ளதெனினும் அவள் தாயார் அங்கிருப்பதால் எனக்கு வருவதற்கு மனம் கூசுகின்றது; வெறுப்புற்று வேகுகின்றது. ஆகையால் என்ன செய்வதென்று தெரியவில்லை." என்றான்.

சந்தி:—சாருகாஸா! நீ சொல்கிறபடி அவ்விடத்தில் வித்யாசமாக யாருமில்லை. சொர்ணம்பாள் உன்னைப் பற்றி மிகவும் விசனிக்கின்றாள். என்னிடத்திலேயே பலதரம் உன் விஷயமாக வருத்த முற்றுக் கண்ணீர் உதிர்த்துக் கூறி யிருக்கிறாள். உன்மீது அந்தம்மாளுக்கு வெறுப்போ, அத்ருப்தியோ எதுவு மில்லை. தன் பொருட்டாகவே தனது மகள் கதியும் உன் கதியும் அதோ கதியாகிவிட்டது என்று நிரம்பவும் வருத்தத்துடன் கூறி தன்னையே நொந்து கொள்வது முண்டு. ஆகையால் அவைகளை சற்றும் எண்ணாமல் உடனே வா.—என்றான். இது கேட்ட சாருகாஸன் சந்திரகாஸனுடன் ஜெயமணியின் வீட்டிற்குச் சென்றான்.

அப்போது ஜெயமணி கட்டிலின் மீது சவம் போலக் கிடத்தப்பட்டிருந்தாள். ஐஸ்பை (Ice bag) தலைமீது வைக்கப்பட்டிருந்

தது. சோமநாதனும் கங்காதரனும் தனித்தனி ஆசனங்களில் அமர்ந்து ஜெயமணியை வெகு ஜாக்ரதையாகக் கவனித்து வந்தார்கள். அவ்வமயம் உள்ளே வந்த சாருகாஸனைக் கண்ட அவ்விருவரும் நிரம்பவும் சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். சாருகாஸன், ஜெயமணியைப் பார்த்ததும் மனம் தாங்காத துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்துவிட்டதால் யாருக்கும் எதுவுமே பதில் பேசாது வந்தனம் செய்து விட்டு நேரே கட்டிலண்டையில் சென்று கட்டிற்காலைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டான். இவன் புலம்பும் பரிதாபத்தைக் கண்ட எல்லோரும் கண்ணீர் விட்டுவிட்டார்கள்.

அச்சமயம் அங்கு தற்செயலாக வந்த ஜெயமணியின் தாயார் சாருகாஸனைக்கண்டு வியப்புற்றாள்! அவன் நின்று புலம்பும் கோரமான காக்ஷியினால் அவள் மனம் உருகிக் கருகிவிட்டது. கண்ணீர் பெருகியவண்ணம் திரும்பிப்போய்விட்டாள். சாருகாஸனைத் தேற்றக்கூடிய நிலைமையில் யாருமே இல்லாமலிருப்பதால் அவன் தன் மன வருத்தம் தீர புலம்பிப் பின் தன்னையே தான் தேற்றிக்கொண்டு ஜெயமணியை உற்றுக் கவனித்தவாறு நின்றான். இந்த பரிதாபத்தைக் கண்டு சகிக்கமாட்டாத கங்காதரரும், சந்திரகாஸனும், சோமநாதனும் தலைமீது கை வைத்துக்கொண்டு சாய்ந்துவிட்டார்கள்.

சாருகாஸன் சுமார் 10 நிமிடங்கள் வரையில் எதுமே பேசாது மவுனமாக விழிக்குவேலை கொடுத்தவாறிருந்து பின்னர் "ஜெயமணி! ஜெயமணீ!" என்று அழைத்தான். ஜெயமணிக்கு அப்போதும் மயக்கம் அதிகரித்தவாறிருந்தமையால் அசைவற்றுக் கிடந்தாள். சாருகாஸனுக்குத் தன் துக்கம் தீரக் கதறுவதற்கும் இடம் சரியில்லை. மனிதர்களோ நிறைந்திருக்கிறார்கள். விசனமோ தாங்கக்கூடாமல் பொங்குகின்றது. அவ்விடத்திலேயே நின்றவாறு "என் அன்பார்ந்த ஜெயமணி! கண்மணி! பாவி நான் வந்திருப்பதை யறியாமல் படுத்திருக்கின்றாயே! உனது நினைவு உனக்கிருந்தால் இவ்விதமிருப்பாயா! "சாருகாஸா! வா" என்று ஆவலுடன் அழைக்கமாட்டாயா! என் கண்ணே ! ஜெயமணி ! நீ உயிருடன் க்ஷேமமாக இருப்பதைக்

கேட்டும்—கண்டும்—ஆநந்தித்துக்கொண்டிருக்கும் பாவி எனக்கு அவ்வானந்தமும் தகாதென்ற நோக்கங்கொண்டு கடவுள் உன்னைப் பொறுக்கி எடுத்துத் தம் பொன்னடியில் சேர்த்துக்கொள்வாரா! உலகத்திற்கே ஒப்பிலாத மணியாகிய உன்மேல் கடவுளும் கண் வைத்துவிடுவாரோ! ஹா! நான் என்ன செய்வேன், சகலவிதத்திலும் அபாக்யவானாகிய எனக்கு இவ்விதமான விசனத்தையும் கடவுள் கூட்டிவைத்துவிடுவாரோ! ஐயோ! நான் உன்னை இழந்தபின்னருமா உலகில் வாழுவேன்! உயிர் தரித்திருப்பேன்? ஊனுடலைச் சுமப்பேன்! உபயோகமற்றலைவேன்? உதவாக்கட்டை என்றுலாவுவேன். சிச்சீ! உயிர் தரியேன்! உயிர் தரியேன். தக்ஷணத்திலேயே என்னுயிரையும் மாய்த்துக்கொள்வேனேயன்றி என் தங்கக்கட்டியைத் தணலாகச் செய்துவிட்டு, என் செல்வக்கிளியைச் சாம்பலாக ஆக்கிவிட்டு—என் அன்பார் அமுதை அனலுக்கு இரையாக்கிவிட்டு, என் தீஞ்சுவைக் கனியைத் தீக்குத் துணையாக்கிவிட்டு பாவி நான் உயிர் பெற்றிருப்பேனா! இல்லை! இல்லை!! உயிரற்ற பிணமாகக் கிடப்பேன். என் அன்பே! ஆரமுதே! இன்பே! இசைக்குயிலே! கண்ணே! கருமணியே! விண்ணோர் தவமணியே! மண்ணோர் மகிழ் மாமணியே! அஞ்சுகமே! அருந்தேனே! என்னெஞ்சம் பதறச் செய்துவிடுவாயோ! பாவி என்னை இவ்வகையிலும் மோசம் செய்து விடுவாயோ! ஹா! என்ன செய்வேன்?'' என்று தனக்குள்ளாக மனம் கருகியுருகி பாகாயோடியவண்ணம் தாங்கமாட்டாத அபாரமான துக்கத்தினால் தம்பித்து நின்றுவிட்டான்.

பிறகு சற்று தேறியவனாய் கங்காதரனை நோக்கி "அன்பீர்! தமது கண்மணியை நான் பார்க்கலாகுமா! உத்தரவளிப்பின் பார்க்கின்றேன்'' என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டான். இது கேட்ட கங்காதரர் மனமிளகிப்போய் "நண்பரே! இதென்ன கேள்வி கேட்கிறீர்கள்? உமது சோதரிக்கு நீர் வைத்தியம் செய்வதற்கு என்னைக் கேட்கவேண்டுமோ! தாராளமாகச் செய்து என் கண்மணியை உயிர்ப்பித்தால் போதும்'' என்றார். பிறகு சாருகாலன் ஜெயமணியின் நாடி முதலியன பார்த்துப் பின் சோமநாதனை அழைத்து என்ன மருந்து கொடுத்தாய் என்பதை விசாரித்

துக்கொண்டு தானும் அவனோடு கலந்து வேறு மருந்துகளை வாங்கி வரச்செய்து வெகு கனிகரத்துடன் ஜெயமணிக்குக் கொடுத்தான். அவளுக்கு வழக்கம்போல சற்று தெளிவு உண்டாகத் தொடங்கியது. அச்சமயத்தில் சோமநாதன் "ஜெயமணீ! இதோ யார் வந்திருக்கிறார் பார்" என்று மெல்ல கூறினான். அதே க்ஷணத்தில் சாருகாஸன் ஜெயமணியின் அருகில் அமர்ந்து முகத்தருகில் தன் முகத்தை வைத்துக்கொண்டு "ஜெயமணி! ஜெயமணி! கண் திறந்து பார். என் செல்வமே! உனக்கு என்ன செய்கிறதம்மா!" என்று அபாரமான வாஞ்சையுடன் தேனொழுகக் கேட்டான்.

அப்போது சற்று தெளிவுபெற்றுக் கண்திறந்த ஜெயமணி ஒரு முறை தலையை நிமிர்ந்து பார்த்தாள். சாருகாஸன் தன்னருகில் இருப்பதையும் அவன் விழிகள் நீரைக் கக்குவதையும் கண்ட நிமிடமே தாங்கவியலாத சோகத்தினால் "ஹா! சாருகாஸா! சாருஹாஸா! என் ப்ராணநாதர் எங்கே! நாதா! நாதா!" என்று கூவினாள். உடனே கங்காதரன் ஓடிவந்து அவள் பக்கலில் அமர்ந்து என் கண்ணே, ஜெயமணி! உன்னை முற்றிலும் பாழ்படுத்திய பாவி இதோ இருக்கிறேன். என் என்ன வேண்டும்?" என்று கேட்டான். ஜெயமணி ஏதுமே பதில் பேசாது தன் கரத்திலொன்றை கங்காதரன் மடியிலும் மற்றொன்றைச் சாருகாஸனின் மடியிலும் போட்டவாறு கண்ணில் நீர் பெருக மீண்டும் மூர்ச்சையாகி மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

இந்த கோரக் காட்சியைக் கண்ட சாருகாஸனின் வயிறும் மனமும் பற்றி எரிகின்றன. "ஜெயமணி! உன் உடம்புக்கு என்ன செய்கின்றதம்மா! வாய்விட்டுக்கூறமாட்டாயா! ஏன் உனது கண்ணில் நீர் பெருகுகின்றது? உனக்கு என்னவேண்டும்? உன் மனத்திலுள்ளதைக் கூறிவிடு. என் செல்வமே!" என்று பயமாயும் விசனத்துடனும் கேட்டான். பதில் கிடைக்கவில்லை. அவளுடைய பக்கத்தில் உட்கார்ந்தபடியே சோமநாதனின் உதவியால் தனக்குத் தெரிந்தவரையில் பலவிதமான முறைகளில் வயித்தியம் செய்து கொண்டே இருக்கிறான். அவன் தனது ஒருவேளை போஜனத்தையும் அடியோடு மறந்தான். அன்று பூராவும் ஜெயமணிக்குத்

தெளிவு உண்டாவதும், மயக்கம் வருவதுமாகவே இருந்தது. மறுநாளும் அப்படியே இருந்தது. மூன்ருவது நாள் விடியற்காலம் ஏதோ ஆவேசம் வந்தவளைப்போல அலறியவாறு "நாதா! நாதா!" என்று பிதற்றியதும் கங்காதரன் அருகிலேயே இருந்தமையால், "என்ன! என்ன! என்ன வேண்டுமம்மா!" என்று கேட்டார்.

அதுகேட்ட ஜெயமணி அவருடைய இரு கரங்களையும் பற்றிக்கொண்டு "நாதா! மகா பாவியாகிய யான் இறக்கப்போவதில்லை; எனினும் ஒருக்கால் என்னவோ தெரியவில்லை. என்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவீர்களா? அவ்வொன்றிலாவது எனது கோரிக்கை ஈடேறுமா! வெகுநாளாக மனத்தினுள்ளேயே வேலை செய்துகொண்டிருந்த என்னுடைய அவாவைத் தீர்க்க முன் வருவீர்களா! என்னுடைய ஆவி ஒருக்கால் நீங்கியபோதும் என் மனோபீஷ்டம் நிறைவேருமலிருந்தால் என் மனம் நிம்மதியே அடையாது. என்னுடைய பாப ஜென்மத்திற்குப் பரிகாரமாக நான் கோருவதை நிறைவேற்றவேண்டும்" என்று மிகுந்த விசனத்துடன் கூறினுள்.

இதுகேட்ட கங்காதரர் கண்ணீர் பெருக்கியவாறு பேசத்தொடங்கி, ஜெயமணியை ஒருகரத்தினுல் அணைத்தவண்ணம் "என் கண்ணே! பங்கசலோசனு! பாவி, சாண்டாளனுகிய என்பொருட்டாக உன் பிறவியே பாழ்பட்டது. அதற்கு நான் கர்த்தாவாக ஏற்பட்டேன். உன்னுடைய சுகபோகத்திற்கும் சந்தோஷமான வாழ்விற்கும் கொடிய பாவியாகிய நான் சத்ருவாகிவிட்டேன். அத்தகைய என்னிடம் நீ உனது மனோபீஷ்டத்தைத் தெரிவித்தும் நான் அதை நிறைவேற்றுதுபோனுல் என்னைப்போன்ற த்ரோகிகள் உலகில் உண்டா! என் கண்ணே! உனது கோரிக்கை யாதாயினும் பயமின்றித்தெரிவி. நான் அதை நிறைவேற்றுகின்றேன். இது சத்தியம், சத்தியம்; சத்தியம். என் வாக்கை நம்பு. என் அன்பாரணங்கே! உன் மனத்திலுள்ளவற்றை சற்றும் கூசாமல் தெரிவி." என்று தைரியமான தொனியுடனும் அன்பாகவும் கூறினுர்.

அதே நிமிடத்தில் சாருகாலன் ஜெயமணியை நோக்கி "என் செல்வமணி! மகா பாபியாகிய யானும் உன் பக்கலிலேயே இருக்

கின்றேன். உன்னுடைய கோரிக்கையை நான் அறியலாமாயின் நானும் என்னால் கூடியவரையில் அதை நிறைவேற்ற உன் பார்த்தாவுடன் ஒத்துழைக்கத் தயாராக விருக்கிறேன். அந்த ஒரு சிறு பேறேனும் கிடைக்கட்டும். எந்த விதமான விருப்பமோ தெரிவிப்பாய் மணி!" என்று உருக்கமாகக் கூறினான்.

இவைகளைக்கேட்ட ஜெயமணி ஆச்சரியம் நிறைந்த பார்வையுடன் "ஹா! என்....சா....ரு....காஸா!...சா....ரு....ஹா....ஸா!....நீ....யா !....எ....ன்....பக்...க....லி....ல்....உ....ட்....கா....ர்....ந்... தி...ரு....க்....கி....றா....ய்...உ...ண்மை....யி...ல்....நீ.... சா ... ரு ...கா...ஸ....ன்.... தானா!?....டா....க்....டா....ர்....சாரு...கா...ஸ....ன்....தானா !....நா ன்....காண்....பது....கன....வா....நி...னை... வா. . உ....ன....க்....கு....த ந்....தி....கொ....டு...த்....து....வ....ர....ச்....செ....ய்....ய....எ.... ண் .... ணி....னே....ன்....நீ....எ....வ்....வா....று....வ....ந்...தா....ய்.... சா....ரு கா....ஸா....பா....வி....நா....ன்....இற....ந்....து....வி....டு.... வே.... ன்.... எ....ன்....று....எ....ண்....ணி....ப....ய....ந்....து....வி....டா....தே !....உ லக....த்....தி....ல்....எ....ன்....னை....ப்....போ....ன்....ற....கொ.... டி .... ....ய....பா....பி....ச....ண்....டா....ளி....ம....ரு....ந்....து....க் .... கும் .... கி....டை....க்....க....மா...ட்....டா....ர்...க....ள்.... பா ....ப....க்....கு.... வி....ய....லை....ஆ....வ....லு....ட....ன்....வா....ரி....க்....கொ....ண் .... டு உ....ல....கி....ல்....ஜெ....னி....த்....த....நா....ன்....அ....ந்...த...க்....கு வி...ய...லை...பூ....ர்....த்...தி....செ....ய்....யா....ம....ல்....இ...ற ...ப் ....பே....னா....அ ....த்....த....கை....ய ....பு....ண்....ணி....ய....மு ....ம் பா....வி....எ....ன....க்....கு....க்....கி....டை....க்....கு....மா!.... கி....டை க்....கா....து....கி....டை....க்....கா....து....சா....ரு....கா....ஸா....நீ ....இ ங்....கு....எ....வ்....வா....று....வ....ந்....தா....ய்....பா.... வி....எ....ன்.... நி....லை....அ... றி....ந்....து....வ....ந்....தீ....யா....அ....ன்.... றி.... நீ...யா....க....வ....ந்....தீ....யா....ஐ....யோ....உ....ன....து ...மு க... ம்....எ....ன்....இ....வ்....வி....த....மி....ரு....க்....கி....ன்....ற .... து வ....ன்....வ ...ரு...ந்....து....கி...ன்....றா...ய்?"....என்று பேசமாட்டாமல் துக்கம் தொண்டையை அடைப்பதால் திணறித் திணறிக் கேட்டாள்.

இந்தக் கண்ராவியான மொழியைக் கேட்ட சாருகாலனின் இதயம் வெடித்துவிடும்போல ஆய்விட்டது. "ஐயோ! நாம் வந்திருக்கும் செய்தியே இவளுக்கு இப்போதுதான் தெரிகின்றது போல விருக்கின்றதே! மூன்று நாட்களாகத் தெளிவு ஏற்பட்டதெல்லாம் சரியான தல்லவென்று இப்போது தான் தெரிகின்றது" என்று தனக்குள் நினைத்தவாறு அவளை நோக்கிப் பேசத் தொடங்கி "மணீ! உனது தேக நிலைமையைப் பற்றி எனது நண்பன் சந்திரகாலன் தந்தி படித்தான். அதைக் கண்டுதான் பாவியான் ஓடிவந்தேன். நான் இங்கு வந்து மூன்று நாட்களாகின்றன. இம் மூன்று நாட்களாக நான் உனது பக்கலிலேயே இருக்கின்றேனே! உனக்குத் தெரியவில்லையா! உனக்கு உணர்வு தற்போது தான் நன்றாக ஏற்பட்டிருக்கின்றதா! உன்னுடைய இத்தகைய நிலைமையில் மகா அதிர்ஷ்டஹீனனாகிய எனக்காக நீ வருந்தாதே! நம்மிருவருடைய வருத்தத்தை ஒருவரோடொருவர் கூறுவதற்கும், ஆறுவதற்கும் மனந் தேறுவதற்கும் இடம் பாக்கி இருக்கின்றதா! பாவும் பாழும் பணத்தின் பேரால் சீரழிந்துப் போய், நமது அன்பின் பேரழிந்து போய் விட்டதே! இனி புலம்பினால் என்ன? மனம் கலங்கினால் என்ன? ஒன்றுமில்லை. வருந்தாதே! உன்னுடைய கோரிக்கை யாது? அதைக் கூறு என் மணீ! வீணாகப் பேசி ஆயாசப் படாதே!" என்று தேறுதலாகவும் விசனத்துடனும் மொழிந்தான்.

**கங்கா.**—(நிரம்பவும் விசனத்துடன் பேசத் தொடங்கி) என் கண்மணீ! ஜெயமணீ! என் நண்பரே! ஐயோ! நான் என்ன செய்வேன்? இந்த ஜென்மத்தில் நான் செய்த பாபத்தின் கொடுமையால் ஏற்பட்ட இத்தகைய கோர சம்பவத்தைக் என் கண்ணாரக் கண்டு சகிக்கக்கூடவில்லையே! உங்களிருவரையும் பாழாக்கி விட்ட இச்சங்கடத்தை இனி நான் எவ்வாறு நிவர்த்தி செய்வேன்? ஐயோ! என் மனம் அனலிடை மெழுகென உருகுகின்றதே! என்னை யறியாத துக்கம் என்னைத் தாக்கி வதைக்கின்றதே! நீங்களிருவரும் உங்கள் மனப்படிக்கு தம்பதிகளாக இருந்து மகிழும் காட்சியைக் கண்டு களிக்கப் பெறாத பரம பாதகனாய் இவ்வித கோராமையைக்

கண்டு துடிக்கும்படியாய் விட்டதே! இந்த வினைக்கென்ன செய்வேன்?" என்று தன்னை மீறிப் புலம்பிவிட்டார். அவ்வமயம் அவ்விடத்தில் அம் மூவரைத் தவிற வேறு யாரும் இல்லாமையால் அவர்கள் மனம் போலப் பேசலானர்கள்.

ஜேயமணி:—(மெல்ல பேசத் தொடங்கி தன் பர்த்தாவின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு) நாதா! வீணாக சென்ற விஷயங்களைச் சிந்தித்து வருந்துவதால் யாது பயன்? கடவுள் ஒருவர் இல்லையா! இம் மண்ணுலகில் மானிடர் பிறக்கும் போது தாம் முற்பவத்தில் கையேந்தி வாங்கிக்கொண்டு வந்த வினையின் படியே யாவும் நடக்கின்றது—நடந்தது—நடக்கவும் போகின்றது. இவைகளுக்காக வருத்த முற்று பலன் உண்டா! ஒன்று மில்லை. நான் பூர்வத்தில் எந்த தம்பதிகளைப் பிரித்து வயிரெறியச் செய்து வேடிக்கைப் பார்த்தேனே! அதன் பலனைப் பூராவாக அனுபவித்து விட்டேன். இன்னமும் அனுபவிக்கின்றேன்........உம்........இனி அவ் வார்த்தைகளை எடுக்கவேண்டாம். பாடிய பாடலையே எத்தனை தரம் பாடுவது...வெறுப்பாகிவிட்டது. கர்மாவை எண்ணி காரியத்தைக் கவனிக்கவேண்டும். சென்றது செல்லட்டும் என் மனத்தில் வெகு நாட்களாக உள்ள ஓர் எண்ணத்தை—அவாவை—த் தாங்கள் பூர்த்தி செய்தால் அதுவே போதும். தற்சமயம் அதுதான் முக்கியம். பாழாய்ப் போன செல்வம் நம்மிடம் குவிந்து கிடக்கின்றது. இந்த பொருளை ஆளுவதற்கு இம்மையில் கனிகரப்பட்ட வார்சு கிடையாது. பங்காளிகள் பகிர்ந்துகொண்டு போவதற்கு வேண்டிய மனிதர்கள் மூன் வருவார்கள். அவ்வாறு வீணாக இறைப்பதற்கு என் மனம் சம்மதிக்கவில்லை. ஆகையால் தாங்கள் செய்யவேண்டிய காரியமாவது. இந்த பொருளில் பாதி மூலதனமாயும் பாதித் தொகையை முன்னர் ஆகவேண்டிய காரியத்திற்கும் செலவு செய்து ஓர் தர்ம வைத்யசாலையை நாம் ஸ்தாபனம் செய்யவேண்டும். அந்த வைத்யசாலைக்கு நமது சாருகாலனையும், சோமநாதனையும், லேடி டாக்டரில் பத்மலோசனவை வரவழைத்து அத்தம்மாளையும் நியமனம் செய்து, இன்னும் சில பணியாட்களையும் ஏற்படுத்தி சகலமான ஏழைகளுக்கும் தர்மார்த்தமாக வைத்தியம் செய்து, ஆகாரம் கொடுத்து

ஸ்வஸ்தப் படுத்தி அனுப்பவேண்டும். நான் இறந்தாலும் அத் தொழில் நடக்கவேண்டும். பிழைத்துக்கொண்டால் நானே நோயாளிகளின் பணிவிடைகளை என்னால் கூடிய மட்டில் கவனித்து வருவேன். இந்த கோரிக்கையை நிறைவேற்றவேண்டும். பாழாய்ப்போன எனது மேனியைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஆபரணங்களையும் விற்று பொருளாக்கி அவற்றையும் அந்த புனிதமான தொண்டில் கலந்து விடுவோம். எனக்கு இனி ஆபரணமும் வேண்டாம்! ஒன்றும் வேண்டாம். என்ன சொல்கிறீர்கள்? சாருகாஸா! என்ன சொல்கிறாய்? பத்மலோசனா எங்கு இருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்? இதற்கவள் சம்மதிப்பாளா !" என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட கங்காதரர் அதை ஆமோதித்து "என் கண்ணே! உன் விருப்பப் படிக்கு அப்படியே செய்கிறேன். நீ சற்றும் அதைரியங் கொள்ளாதே! இன்றே அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். என்னுடைய ஸ்திதி பூராவும் செலவிடத் தயாராக இருக்கின்றேன். உனது கோரிக்கை இது தானே! இத்தகைய உத்க்ருஷ்டமான காரியத்தின் மூலமாகவேனும் எனக்கும் சிறிது புண்ணியம் கிடைக்கட்டும். நண்பரே! என்ன சொல்கிறீர்?" என்றார்.

சாரு:—ஆகா! என் செல்வக்கிளியின் திருவாக்கிற்கு மறுவாக்குமுண்டோ! தாஸானுதாஸனாய்க் காத்திருக்கின்றேன். உங்களுடைய செல்வம் பாழாவது போல எனக்கும் நான் சுயமாகச் சம்பாதித்த பொருளில் வாரி இறைத்தது செல்ல மிச்சம் சிறு தொகையும், ஆஸ்பத்ரியில் என் சம்பளத்தில் இது பரியந்தம் பிடித்துள்ள தொகை (ப்ராவிடெண்டு பண்டு) யும் சேர்ந்திருக்கின்றது. அவைகளையும் தான் வாங்கி இந்த கைங்கரியத்திற்கு அர்ப்பணம் செய்யத் தயாராக விருக்கிறேன். சுமார் ஒரு லக்ஷ ரூபாய் செலவிட்டு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துவிடுவோம். ஜெயமணீ! தற்போது பத்மலோசனாவும் தனது வேலையை ராஜீநாமா செய்துவிட்டு இவ்விடமே வந்துவிட்டாள். அன்று நான் வந்த இரயிலிலேயே அவளும் ப்ரயாணம் செய்தாள். அவள் இவ்விடம் வந்

தாலும் வருவாள். உன்னைப் பார்க்கவேண்டு மென்று தெரிவித்தாள். அவளும் இந்த ஏற்பாட்டிற்குத் தடை யின்றி இணங்குவாள்

கங்கா:—கண்ணே! இந்த நமது பங்களாவின் பக்கத்துப் பங்களாவும் தோட்டமும் அதற்கடுத்த மைதானமும் நாளது 10-ம் தேதி யன்று ஏலம் போடுகின்றார்கள் என்ற விவரத்தைப் பத்திரிகையில் பார்த்தேன். அந்த இடத்தை நாமே ஏலத்தில் எடுத்துக் கொண்டு நமக்குச் சௌகரியம் போலக் கட்டி அதில் உன் விருப்பப் படிக்கு நிறைவேற்றி விடலாம். இன்று 5 தேதி யாகின்றது. நாளைய தினமே அந்த ஏல விவரத்தை நேரில் விசாரித்து வைத்துக்கொண்டு நான் எடுத்துவிடுகிறேன். நீ பயப்படாதே!

ஜேய:—ஹாஹா! பத்மலோசன இவ்விடமா வந்திருக்கிறாள்! அவளை இங்கு வரும்படியாகச் சொன்னயா! அவளை நான் பார்க்க வேண்டுமே! இங்கு வருவாளா! அல்லது நீ சென்று அழைத்துக் கொண்டு வருகிறயா!—என்று கேட்டாள். அப்போது கங்காதரருடைய சிநேகிதர் அங்கு ஜெயமணியை விசாரிப்பதற்காக வந்தார். கங்காதரர் அவரை வரவேற்று ஆசன மளித்தார். வந்தவர் கங்காதரரை நோக்கி "நண்பரே! எனது புதல்வி பத்மலோசன இவ்வூருக்கே வந்துவிட்டாள். தாங்கள், தங்கள் மனைவி. முதலியவர்களின் வரலாற்றை இங்கு வந்தபிறகே அறிந்துகொண்டாள். அது முதல் இங்கு வரவேண்டுமென்றும் உங்கள் மனைவியாரைப் பார்க்க வேண்டுமென்றும் நிரம்பவும் ஆசிக்கின்றாள். என்னோடு வண்டியில் வந்திருக்கின்றாள்; உங்கள் மனைவியாரின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு தான் தான் உள்ளே வருவதற்குப் பிரியப் படுவாளாம். அவள் வரலாகுமா என்பதைக் கேட்டுத் தெரிவிக்கவேண்டும்.?" என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட கங்காதரர், "ஆகா! இதென்ன இப்படியும் கேட்கலாகுமா! பத்மாவுக்கு நான் புதியவன! குழந்தைப் பருவம் முதல் தூக்கி வைத்திருந்தவனல்லவா நான். இப்போதே என் மனைவியும் உங்கள் புதல்வியைப் பார்க்கவேண்டு

மென்று தெரிவித்தாள். சாருகாஸனையே நேரில் சென்று அழைத்து வரும்படியாயும் கூறினுள்." என்று அவர் கூறி முடிப்பதற்குள் ஜெயமணி சாருகாஸனை நோக்கி, "சாருகாஸா! நீயே வீதியில் சென்று அந்தம்மாளை அழைத்துக்கொண்டு வா! தேடிப் போன மூலிகை காலில் சுற்றியது போல அந்தம்மாளே வந்திருப்பது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது" என்றாள்.

இதைக் கேட்ட சாருகாஸன் எழுந்து வீதிக்குச் சென்றான். அங்கு மோட்டாரில் வாடிய வதனத்துடன் வீற்றிருந்த பத்மலோசனைவைக் கண்டு நிரம்பவும் வணக்கத்துடன் பேசத்தொடங்கி, "அம்மணீ! நீ ஏன் இவ்விடம் தங்க வேண்டும்? நேரே உள்ளே வந்திருக்கலாகாதா! இறங்கி வா. தற்சமயம் என் ஜெயமணி உயிருடனிருக்கிறாள். உன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் நீயே வந்தாய்" என்று வெகு உபசாரத்துடன் கூறி யழைத்தான்.

உடனே பத்மலோசனை வண்டியைவிட்டிறங்கியவாறு, "டியர் டாக்டர்! மகா பாபிஷ்டியாகிய என் வருகை அந்தம்மாளின் மனத்திற்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்கிற எண்ணத்தினால் நின்றேன். எனக்கு நெடுநாளாகப் பழக்கமுள்ள கங்காதரரின் மனைவியே தங்களின் உயிர் என்பதை நான் என் பிதாவின் மூலமறிந்தேன். கங்காதரரின் வீட்டிற்கு நான் சாதாரணமாக அநேகந் தடவைகளில் வந்திருப்பினும் இம்மாது சிரோன்மணியார் வந்த பிறகு நான் வந்ததில்லை; ஆகையால் தியங்கினேன்" என்று கூறிக்கொண்டே சாருகாஸனுடன், ஜெயமணி படுத்திருந்த விடுதிக்கு வந்து சேர்ந்தாள்.

ஜெயமணி, பத்மலோசனவும் சாருகாஸனும் வரும் வழியையே எதிர்பார்த்த வண்ணம் படுத்திருந்தாள். பத்மலோசனை துல்லியமான வெண்பட்டுச் சேலையும், அதே பட்டினலான ஜம்பரும் தரித்திருந்ததானது அழகுக்கு அழகு செய்தவாறுயிற்று. கையில் மிகவும் சன்னமாக இரண்டு வளையல்களும், காதில் வைரத்தில் ஸ்டார் போன்ற சிறிய கடுக்கனும் அதனடியில் புதுமாதிரியான வைரக்கற்களினால் லோலாக்கும், கழுத்தில் வைர நெக்லேஸும், ஒரு

தங்க செயினும், தலையில் அழகிய பிச்சடையும் அதைச்சுற்றி நறு மணங்கமழ்ந்த ரோஜா புஷ்பமும், நெற்றியில் சாந்துப் பொட்டும் சைடு வகுடும், இடையில் அவள் பெயரின் முதல் எழுத்தாகிய ப என்ற எழுத்துக்கள் வைரத்தினுல் பதித்த தங்க பெல்டும் தரித் துக்கொண்டு, காண்போர் ப்ரமிக்கத்தக்க விதமாய் எழில் ததும்பி அசைந்தாடும் மயில் போல நடந்தவாறு அவ்விடம் வந்து சேர்ந் தாள். அவளைக் கண்ட ஜெயமணியே வியந்துப்போய், "ஆகா! வெண்மையுடை அணியப்பெற்ற வாணியே வருவதுபோல விருக் கின்றதே! இத்தகைய வனிதா ரத்தினத்தையா சாருகாலன் மணம் கொள்ளாது மறுத்தான். ஆகா! என்ன அழகு! என்ன அழகு! முகத்தின் சோபையானது அவளது பெயருக்கு ஒற்றிட் டார்ப்போல இருக்கின்றதே! உம். நான் ஒரு பாவி; நீயொரு பாவி" என்று எண்ணி விசனித்தவாறு "வாருங்கள்! வாருங்கள்! இப்படி உட்காருங்கள்" என்று தன்னருகிலிருந்த ஆசனத்தைக் காட்டி அமரச் செய்தாள்.

பத்மலோசனு ஜெயமணியின் ப்ரமிக்கத்தக்க ஜாஜ்வல்யமான எழிலைக் கண்டு ஆச்சரியப்பட்டு அப்படியே அசைவற்று ஆசனத் தில் அமர்ந்தவாறு, "ஆகா! இந்த மாது உண்மையில் மண்மீது உதித்த பெண் கிளியா, அன்றி வானுலக மங்கையா! தெரிய வில்லையே! அடாடா! என்ன ஆச்சரியம்! இத்தகைய கடுமையான நோயினுல் பீடிக்கப்பட்டிருக்கையிலும் இந்தம்மாளின் அபாரமான எழில் அமுதம் வழிந்தோடுகின்றதே! சீச்சீ! இத்தகைய மதுர மான கனியைக் கண்ட டாக்டர் என்னை ஏற்றுக்கொள்ளாதது வியப்பேயல்ல. இந்தம்மாளின் சிகையின் எழிலுக்கு நிகர் மற்ற வர்களின் முகமும் ஈடாகமாட்டாது. ஆஹா! என்ன அற்புதமான வனப்பு! தாமரை புஷ்பத்திலுள்ள மதுவை அருந்த வண்டுகள் வட்ட மிடுவதுபோல இந்த பொற்கொடியாளின் முகத்தாமரையிலுள்ள எழில் என்னும் மதுவை உண்பதற்காக விழிகளாகிய வண்டுகள் பதிந்து சுழலுவதுபோலத் தோற்றுகின்றதே! பார்வையின் எழிலுக்கு உலகமே பவ்யமாகும் சக்தி பொருந்திய வனிதையைக் காதலித்தும் கலிதீராத கட்டழகனுக்கு மற்றொரு கன்னியைக் கண்

ணெடுத்துப் பார்ப்பதற்கு மனம் தோன்றுமா! தோன்றுது! தோன்றுது! என் மனத்திற்கு இச்சாருகாஸனை இன்றி வேறு ஆடவனை மணக்கச் சம்மதி உண்டாகுமா! அதுபோலல்லவா அவர் மனமும் உறுதியிலாழ்ந்திருக்கும். சீச்சீ! இனி நாம் அவர் மீது பழிப்பது மிகவும் மூடத்தனமாகும். நமது மனமே நமக்குச் சான்றுகி விட்டது." என்று பலவிதமாகத் தனக்குள் எண்ணியவாறு பதுமை போல உட்கார்ந்திருப்பதைக் கண்ட கங்காதரர், "என்ன பத்மா! உனக்கு இவ்வீடு இன்று புதியதா! ஏன் உள்ளே வரவில்லை?" என்றூர். அதே சமயம் ஜெயமணி "அம்மா! இந்த வீடு உன் சொந்த வீடு போன்றதல்லவா! இங்கு வருவதற்கு உத்தரவும் கேட்க வேண்டுமா?" என்றுள்.

பத்ம :—(மெல்லிய குரலால் பேசத் தொடங்கி) மாமா! நான் புதிய வீடாக எண்ணி வராமலில்லை. அவ்விதம் வித்யாசமாக நினைக்கவேண்டாம். (ஜெயமணியை நோக்கி) அம்மணி! நீங்கள் இச்சித்த விலையிலாத பண்டத்தையே நானும் விரும்பியதால் தாங்கள் என்னைத் தமக்குப் பகையாளியாக எண்ணிவிடுவீர்களோ என்கிற ஓர் அச்சத்தினுல் நான் வரத் தயங்கினேன். தமது அம்ருதம் போன்ற குணத்தழகைக் கண்ட பின்னரல்லவா தெரிகின்றது. உம். யார் யார் தலைவிதி யாரை விட்டது. அனுபவித்துத் தான் தீரவேண்டும். தங்களுக்கு தேக அசுகமென்ற தந்தி வந்ததாயும் அதற்குத் தான் செல்வதாயும் டாக்டர் தெரிவித்தார். அது முதல் தங்கள் நிலைமை எவ்விதமிருக்கின்றதோ என்ற கவலை என் மனத்திலிருந்தது. தங்களைப் பார்க்கவேண்டு மென்கிற அவா உண்டாயிது. என் பிதாவின் மூலம் தங்களை இன்னுரென்று தெரிந்து கொண்டேன்; பிறகே வந்தேன். உடம்பு எவ்விதமிருக்கிறது. சற்று குணந்தானு?

ஜேயமணி :—அம்மா! சற்று குணந்தான். தாங்கள் கூறுவது எனக்கு வியப்பாக இருக்கின்றதே! நான் இச்சித்த பண்டத்தை நான் அடைந்த பிறகு நீங்கள் இச்சித்திருப்பின் ஒருக்கால் அதன் மூலம் பொருமை கொள்ளலாம். ஆனுல் நான் அவ்வாறு பொருமை கொள்ளும் சுபாவமுடையவளல்ல. நம்மைப்போல பிறரும் என்று

எண்ணி உன்னிச்சையையும் பூர்த்திசெய்து வைக்க என்னால் கூடிய வரையில் முயற்சி செய்வேன். எல்லா எண்ணங்களும் பாழாகி விட்டன. "என் தலைவிதிதான் இவ்விதமாகிவிட்டது. நீயேனும் மணந்து இன்பமாக இல்லறம் நடத்து" என்று நான் பன் முறையில் சாருகாஸனுக்குக் கூறியும் அவன் மனம் என்னவோ திரும்ப வில்லை. நான் என்ன செய்வேன்.? உன்னுடைய சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டேன். என் மனம் மிகவும் விசனமுற்றலைகின்றது. இப்போதும் உங்களிருவரின் சுகமான வாழ்க்கையைக் கண்டு களிக்க நான் தயாராக இருக்கின்றேன். நான்தான் பாவியாகி விட்டாலும் பிறரேனும் சுகிக்கலாகாதா என்பதே என்னுடைய நோக்கம். அம்மணீ! பத்மலோசனு! சாருகாஸன் சம்மதிக்கும் பட்சத்தில் நானே இவ்விவாகத்தை நடத்திவைத்துக் கண் குளிரப் பார்ப்பேன்.

பத்ம :—ஆகா! உங்களுடைய தயாளமும் கருணையும் நிறைந்த வார்த்தையைக் கேட்பதே எனக்கு ப்ரம்மானந்தமாயும் தாங்க வியலாத ஆச்சரியமாயுமிருக்கிறது. உம். இனி அவைகளைக் கூறிப் பயன் யாது? தங்களுடைய உத்தம குணத்திற்கு நீங்கள் சித்தங் கலங்கித் தவிப்பது மிகவும் விசனமாக இருக்கின்றது. இதற்குத் தான் ஊழ்வினை என்பது.

ஜெய :—வினைதான் நாம் ஜெனிக்கு முன்னரே ஜெனித்து விட்டதே! அதைக் கூறவும் வேண்டுமா! இப்போதே உன்னை நினைத்து உன் பேச்சையே பேசினேன். அதாவது நாங்கள் ஓர் வைத்தியசாலை புதியதாக நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்; அதற்கு லேடி டாக்டராக உன்னையே நான் நிர்ணயித்து, நீ வருவாயா என்று சாருகாஸனைக் கேட்டேன். அவன் நீ கட்டாயம் வருவாய் என்று கூறினன். அது விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கையிலேயே நீயும் வந்தாய். எங்களுடைய செல்வத்தை வழிபறிக் கொள்ளைப் போல சீரழியச் செய்வதை விட்டு இவ்விதமான தர்ம கைங்கரியம் செய்தால் செய்த பாபமேனும் தொலையும் என்கிற யோசனையினால் இப்படித் தீர்மானித்தோம். சாருகாஸன் அதை ஆமோதித்தான்.

தானும் பொருள் கொடுப்பதாகக்கூறினள். இவைகளைப்பற்றியே இன்று பேச்சு நடந்துகொண்டிருக்கின்றது. (சாருகாஸனை நோக்கி) "சாருகாஸா! நான் சொல்வதை சற்றுக் கேட்பாயா?" என்று கூறி மேலே சொல்வதற்குள் சாருகாஸன் பேசத்தொடங்கி "ஜெயமணி! நீ கூறப்போகும் வார்த்தை எனக்குத் தெரியும். நானும் அதைப் பற்றியே யோசித்து முடிவு செய்துவிட்டேன். என்னுடைய பிறவியில் நான் ஒண்டிக்கட்டையாகிய சன்யாசிதான். என் கண்மணியைக் காதலித்த மனத்தில் வேறு பெண்மணியின்மீது காதல் ஜெனிப்பது இனி மறு பிறவியில்தான். நான் உன்னை இன்றி வேறு கன்னியை மணம் செய்துகொள்வதில்லை என்று கடவுள்மீது ஆணையாகச் சத்தியம் செய்து சபதம் கூறிவிட்டேன். இனி எனது இன்ப வாழ்க்கையைப்பற்றி தயவுசெய்து யாரும் பேசவேண்டாம். நீ விவாகம் செய்துகொண்ட சன்யாசினி; நான் செய்துகொள்ளாத துறவி. இரண்டிற்கும் வித்யாசமில்லை. நான் செய்துவிட்ட சத்யத்தினின்று பிறழமாட்டேன். சத்யபரிபாலனம் செய்த புண்ணியமேனும் கிடைக்கட்டும். பத்மா! நான் இவ்விதம் கராகண்டிதமாகக் கூறுவதுபற்றி என்மீது வருத்தங்கொள்கிறாயா! ஜெயமணி! நீயும் என்னை வெறுக்கின்றாயா!

பத்மா:—டாக்டர்! என்பிறவியின் கேட்டிற்குக் கோபமும் வரவேண்டுமோ! அதொன்றுமில்லை. நான் இந்தம்மாளைக் கண்டவுடனே என் மனம் திருடமாகிவிட்டது. இத்தகைய ரூபவதியைக் காதலித்த தங்கள் மனம் இனிமேல் மாறுவது ஆகாத காரியந்தான் என்பதைத் தெரிந்துகொண்டேன். அபாரமான அழகும், பக்குவமான யௌவனமும் கூடிய இந்தம்மாளின் பிறவியே பாழாகிவிட்ட பிறகு இனிமேல் எதுவும் பேசுவதற்கு என் மனம் துணியவில்லை. என் மனம் தானாகவே வைராக்யத்தை அடையக்கூடிய நிலைமையிலும் வந்துவிட்டது. இனி அதைப்பற்றி என் வீண் கவலை கொண்டு மனத்திற்குச் சிரமம் கொடுக்கவேண்டும். அம்மா! நீங்கள் செய்துள்ள ஏற்பாடு மிகவும் நன்றாகவிருக்கின்றது. உங்களுடன் கூடவிருந்தேனும் நான் தொழில் செய்து மகிழும்படியான பாக்யத்தைப் பெறவிருப்பதைத் தடுப்பேனா! என் முடிவும் உங்களைப்

போலவே ஆய்விட்டதால் நானும் பெருந்தொகை இந்த தரும கைங் கரியத்திற்குத் தருகிறேன். எல்லாவற்றையும் சேர்த்து உடனே இக் காரியத்தைத் தொடங்கலாம். இவ்வகையிலாவது என் பொழுதும் தொலையட்டும். அலகிலாமல் செய்துவிட்ட பாபக் குவியலும் நீங்கட் டும். நான் தொழில்செய்யும் முறையிலாவது இந்த புண்ணிய புருஷருடன் கூடவிருக்கும் பாக்யம் கிடைக்கட்டும்.

ஜேய:—ஆகா! இதென்ன இவ்விதம் பேசுகின்றாய். நீயும் இவ்விதம் ஒண்டிக்கட்டையாகிவிடத் தீர்மானித்துவிட்டாயா என்ன? வேண்டாமம்மா! உனக்குத் தகுந்த வேறு வாலிபனை நீ ஏன் மணம் செய்துகொள்ளலாகாது? உன் வாழ்நாளை ஏன் இவ் விதம் பாழ்படச் செய்யவேண்டும்?

பத்மா:—அம்மணி! இது விஷயத்தில் தாங்களே இவ்விதம் கூறினல் ஒன்றுமேயறியாத பாமர ஜனங்கள் சொல்வதைக் கேட்க வேண்டுமா! காதலின் மகிமையைத் தாங்களறியமாட்டீர்களா! இனி அதைப்பற்றிப் பேச்சேதற்கு? நான் என்னை திடமுறச் செய்து கொண்டேன்; கொள்வேன். இனி இவ்விதமான உலகப்பற்றையே நான் நாடவில்லை. தீர வைராக்யத்தையே துணைகொள்ளத் தயா ராக ஆய்விட்டேன். அவ்வார்த்தையை அம்மட்டும் விட்டுவிடுங்கள். நான் சென்று வரட்டுமா!

ஜேய:—அம்மா! உம். இதற்குமேல் நான் என்ன சொல் வேன்? ஏதோ தீராத கன்மத்தின் பயன் இது போலும்! சரி; நீ அடிக்கடி இங்கு வந்துபோய்க்கொண்டிரு—என்றாள். பிறகு பத்ம லோசன எல்லோரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு நாளைய தினம் வருவதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

பிறகு சாருகாலன், சந்திரகாலன், சோமநாதன், கங்காதரன், ஜெயமணி ஆகிய எல்லோரும் வைத்தியசாலையின் நிர்மாணத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஜெயமணிக்கு அன்று முதற் கொண்டே சிறுகச்சிறுக உடம்பு குணப்படத் தொடங்கியது. தான் இறவாமல் பிழைத்துக்கொண்டதைப்பற்றி வருத்தமேகொண்டாள். கங்காதரர் முன்னர் தெரிவித்தபடியே அடுத்த பங்களாவை விலத்

தில் வாங்கிவிட்டார். அந்த பங்களாவின் கட்டிடமே மிகவும் நன்றாக இருந்தமையால் அதன் முன்பாகத்திலும் சில கட்டிடங்களைக் கட்டத்தொடங்கி வேலை வெகு ஜரூராக நடக்கின்றது. ஜெயமணி சாருகாலனை அவ்விடத்திலேயே இருக்கும்படியாகக் கேட்டதால் அவன் அவ்வாறே தங்கிவிட்டான்.

இவ்விதமிருக்கும் நாளையில் சந்திரகாலனுக்கு ஒரு ரிஜிஸ்தர் கடிதம் வந்தது. அதை அவன் வெகு ஆவலோடு பிரித்துப் பின் வருமாறு படிக்கலானான்.

"மகா பாபியாகிய யான் தங்களை ப்ராணநாதா என்று அழைப்பதற்கு அருகதையின்றி அழிந்துவிட்டபடியால் இம்மாதிரி மொட்டையாக இக்கடிதத்தை ஆரம்பித்து வரைகிறேன். என்னுடைய அகம்பாவத்தினால் நான் ஒழிந்திடும் காலமும் நேர்ந்துவிட்டது. எனது தந்தை என்னுடைய வியாகூலத்தினாலேயே உடல் மெலிந்து திடீரென்று உயிர் துறந்தார். அன்னவரின் பலாத்காரத்தினால் நான் இதுவரை உயிர் தரித்திருக்க நேர்ந்தது. இனி அதுவும் அகன்றது. என்னுடைய பிதாவினுடைய செல்வத்தைப் பாவி நான் வகையின்றி வாரி இறைத்து ஒழித்துவிட்டது போக மிச்சம் 50 ஆயிரம் ரூபாய் பாங்கியில் இருக்கின்றது. உங்கள் சொந்த உபயோகத்திற்கு ஒரு காசும் இதில் நீங்கள் எடுக்கமாட்டீர்களென்ற விஷயம் முதலில் நான் கொடுத்த 20 ஆயிரம் ரூபாயை வாங்கியபோது தாங்கள் கூறிய வார்த்தையிலிருந்தும் அந்தப் பணத்தை நீங்கள் செலவிட்டுள்ள விதத்திலிருந்தும் நான் அறிந்துகொண்டேன். எனது பெரிய தகப்பனாராகிய கங்காதரரின் பொன்மொழிகளை ஆதியில் அசட்டை செய்ததன் பலனை வேண்டிய மட்டும் அனுபவித்துவிட்டேன். அன்னார் எனக்குரைத்த நல்மொழிகளை இப்போது நினைத்து மனம் தவிக்கின்றேன். என்னுடைய அலக்ஷியமற்றத் தன்மையினால் என் தகப்பனாருக்கும் பெரிய தகப்பனாருக்கும் உறவின் முறையும் அற்றது. இனி எதை எண்ணிப் பயன் யாது? நான் ஒருவருடைய முகத்திலும் விழிப்பதற்கு யோக்யதையற்றச் சண்டாளியாகிவிட்

டேன். என் பெரிய தந்தையின் பொருள்களை எல்லாம் செல விட்டு ஜெயமணியம்மாள் ஓர் வைத்தியசாலை நியமிக்கப்போவ போவதாக நான் அறிந்தேன். என்னுடைய பிறவியின் கேட்டை அவர்களுக்கு எடுத்துரைத்து நான் மன்னிப்பு வேண்டுவதையும் தெரிவித்து, எனது பொருளாகிய 50 ஆயி ரம் ரூபாயையும் அந்தத் தர்மத் தொண்டில் சேர்த்துக்கொள் ளும்படி நான் வேண்டியதாகத் தெரிவித்து இதோடு உள்ள செக்கு புத்தகத்தை அவர்களிடம் சேர்த்துவிடும்படியாகப் பிரார்த்திக்கின்றேன். இக்கடிதம் தமது கைவசமாகு முன்னர் என்னுயிர் எமன் வசமாகிவிடும். நான்.......விஷத்தை யுண்ட பிறகே இதை அனுப்புகின்றேன். பாவி யான் தொலைந்த நாளை ஓர் நன்னாளாக நினையுங்கள்.

மற்றொரு முக்ய விஷயம், ஜெயமணியம்மாளின் பிறவிக் கதையை நான் முன்னரே சிறிது அறிவேன். அதைப் பிறகு நன்றாகத் தெரிந்துகொண்டேன். அந்தம்மாள் தனது சரிதை யை ஒரு புத்தக ரூபமாக வெளியிடத் தனது சினேகிதையினி டம் ஏற்பாடு செய்திருக்கும் விஷயத்தையும் நான் தெரிந்து கொண்டேன். இது விஷயமாக நான் ஜெயமணி யம்மாளுக்கே கடித மெழுத எண்ணினேன். பிறகு என் மனமே என்னை இடித்துக் காட்டியது. ஆதியில் ஓதிய நீதியான மொழிகளைக் கேளாது கெட்டழிந்த எனது பிறவிக் கேட்டை நேரில் நானே தெரிவிப்பதெனில் எனக்கு மிகவும் வெட்கமும் துக்கமும்பொங் கின ஆகையால் தமக்கே எழுதலானேன். என்னுடைய பிறவி யின் முதல் தற்போது நான் இறக்கும் வரையிலுள்ள விஷ யங்களை எல்லாம் அந்தம்மாளிடம் தெரிவித்து அவர்கள் சினே கிதியினிடத்தில் கூறி இதையும் புத்தகமாக வரைந்து உலகத் தவருக்கு என்னுடைய அவகேடான நிலைமையைக் காட்டி என் போல இனி யாரும் நாசமற்று அழியவேண்டாம் என்ற நீதி மதியை போதித்து எழுதச் செய்யுங்கள். எனது கடைசி காலத்தில் நான் கோருவது இந்த கோரிக்கை தான். இதைச் செய்தால் என் ஆன்மா சாந்தி யடையும். உலகத்தில் மங்கை

பர்கள் படிப்பது மிகவும் அவசியமானதுதான்; ஆனால் அவர்களின் படிப்பினால் அவர்களுக்கே கேடுகள் விளையும்படியான மார்க்கத்தில் இறக்கக் கூடிய—அகம்பாவம், கர்வம், அலக்ஷிய புத்தி, அற்பத் தன்மை, பெரியாரைப் பழித்தல், துர்க்குண மிகுத்தல், பொறுமை, துணிபு, ஒழுக்கமற்றத் தன்மையில் மன உறுதி முதலிய தீயத் துணைவர்களை நாடாமல்—கைப் பற்றாமல்—அகற்றிவிட்டுப் படித்துத் தம் படிப்பினால் பயனை அடையக் கூடிய நற்குணம், பொறுமை, நல்லொழுக்கம், அபாரமான அன்பு, பெரியாரைப் பேணுதல் முதலிய நற்றோழர்களைத் துணையாகக் கொண்டு நடந்தால் நங்கையர்களின் கல்வித் திறத்தையும், சீலத்தையும், மதி விசாலத்தையும், நானிலம் ஏற்றிப் போற்றும். தீதுகள் விலகி வரும். முற்காலத்திய கல்வியில் சிறந்த தாய்மார்களின் அருளுக்குப் பாத்திரமாக வாழ்வார்கள். ஆகையால் இந்த வித்தியாசங்களை விளக்கிக் காட்டும் பொருட்டாக எனது சரித்திரமே மிகவும் சான்றான தாகையால் அதை பகிரங்கப் படுத்தி சாதக பாதகங்களை போதிக்கச் செய்யுங்கள். என்னுடைய பிறவியில் நடந்த சம்பவங்களில் சிறியவற்றையும் விடாது வரைந்து விடுங்கள். இதுவே எனது கடைசிப் பிரார்த்தனை. வேணும் நமஸ்காரம். நான் செய்துள்ள அநேக குற்றங்களை எல்லாம் க்ஷமிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் அன்பிற்கு
அபாத்திரமாகிய பாவி
இராதாபாய்."

என்ற விஷயத்தைப் படித்ததும் சந்திரகாஸனின் மனமும் சற்று வருத்தத்திற்குள்ளாகி விட்டது. அவனை அறியாது கண்ணீர் உதிர்ந்தது." ஆகா! என்ன அலங்கோலமான முடிவாகிவிட்டது. அடீ, ராதாபாய்! உன்னுடைய அழகென்ன, அந்தஸ்தென்ன! ஐச்வரிய மென்ன! எல்லாவற்றையும் துர்க்குணத்தினால் பாழ் படுத்திக்கொண்டு அநியாயமான துர்மரணத்திற்கு ஆளாகி

விட்டாயே! நல்லறிவுடன் நன்னடக்கையில் பழகி இருப்பின் உனது சிறப்பு எவ்விதமிருக்கும்? உம். இனி அவைகளை எண்ணிப் பயன் யாது?" என்று தனக்குள் எண்ணியவாறு விசனத்துடன் உட்கார்ந் திருப்பதைக் கண்ட ப்ரேமாபாய் அவனை நோக்கி "நாதா! இதென்ன கடிதம்! இதைப் படித்தது முதல் கண்ணீர் விட்டுக் கலங்குகின்றீர்களே! என்ன காரணம்! இது யாரிடமிருந்து வந்திருக் கின்றது?" என்று வெகு அன்பாகவும், கனிகரத்துடனும் கேட்டாள்.

இது கேட்ட சந்திரகாஸன் நிரம்பவும் ப்ரியத்துடன் பேசத் தொடங்கி "என் கண்ணே! ப்ரேமா! உனக்குக் கூறுமலும் நீயறி யாமலும் உள்ள விஷயம் எனக்குண்டோ? இதோ இக் கடிதத்தை நீயே படித்துக்கொள்" என்று கூறிக் கடிதத்தையே அவளிடம் கொடுத்தான். கடிதத்தை வாங்கிய ப்ரேமாபாய் அதை முற்றி லும் படித்துப் பின் தானும் வருத்தமுற்றாள். "ஐயோ! இத்தனை பெருந் தொகையான செல்வத்திற்கு அதிபதியாயும், எம். எல் பட்டத்திற்கு உரிமையாகியும் இருந்த அந்தம்மாளின் கதி இப்படி யாக வேண்டுமோ?" என்று நிரம்பவும் துக்கித்தாள். பிறகு இரு வரும் அக் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஜெயமணியின் வீட்டிற்கு வந்து அதை ஜெயமணியிடம் கொடுத்தார்கள்.

ஜெயமணி அக் கடிதத்தை வாங்கிப் படித்து விஷயத்தை அறிந்துகொண்டு தன் நாயகனுக்கு அதைத் தெரிவித்தாள். கங்காதாரும் பாந்தவ்ய பாசத்தினால் கண்ணீர் விட்டுக் கலங்கினர்.

ஜெய:—நாதா! எந்த காரியமும் நினைத்தவாறு முடிவு பெறுவ தென்பது மிகவும் துர்லபம். அதுவும் என்னுடைய அனுபவத்தில் அவ்வாறு இதுபரியந்தம் ஒரு சிறிய விஷயத்திலும் அனுகூலங் கண் டதில்லை. ஆனால் எந்த ஜென்ம புண்ணியவசமோ! யார் செய்த தவத் தின் மகிமையோ! எனது பிறவியில் நான் கோரிய கோரிக்கைகளில் இந்த வைத்திய சாலையின் தர்ம கைங்கரியம் மட்டும் இனிது நிறை வேறும் என்பதற் கறிகுறியாக நாம் எதிர் பாராத இடத்திலிருந்து கடவுள் நமக்கு இத்தகைய பெருந் தொகைகளை அனுப்புகின்றார். பாவி இராதாபாயின் பொருள்கள் இதுபரியந்தம் அநியாயமாய் துர்விநியோகமாய்ப் பாழாய் விட்டதுபோல இத் தொகையும் பாழா

காமல் ஓர் சத் விஷயத்திற்குப் பயன் படும்படியாக அவள் மதியில் இவ்வெண்ணம் தோன்றி அனுப்பியது மிகவும் வியப்பாக இருக்கின்றது. இத்தகைய அடையாளங்களைக் கொண்டு நமது காரியம் என்றும் நிலைபெற்று ஓங்கும் என்பதாக என் மனத்தில் படுகின்றது. அவளுடைய கதி அதோகதியாகிவிட்ட வயிற்றெரிச்சலை நினைக்கின் மனம் துயரப்படுகின்றது. உம் அவரவர் தலைவிதிப்படிக்குத் தான் யாவும் நடக்கும்" என்று விசனித்தாள்.

* * * * *

இரண்டொரு மாதத்திற்குள் ஆஸ்பத்திரி நிர்மாணித்தாயிற்று. ஜெயமணியின் மன விருப்பப் படியே சகல காரியங்களும் நிறைவேறிவிட்டன. கங்காதரர், சோமநாதன், சாருகாஸன் ஆகியவர்கள் வைத்ய சாலையை நியமிக்க வேண்டிய சகல காரியங்களையும் செய்து, வைத்தியத்திற்கான சகலமான சாமான்களுடனும், முஸ் தீப்புகளுடனும் வேலைக்காரர்கள், கைதேர்ந்த நரசுகள் முதலியவர்களுடனும் ஓர் சுப தினத்தில் ஆஸ்பத்ரியைத் திறந்து வைப்பதற்காக முக்கியமான பெரிய மனிதர்களை வரவழைத்துத் திருவிழாக் கொண்டாடுவது போலான குதூகலத்துடன், மேள வாத்ய கோஷத்துடன் ஆஸ்பத்திரியைத் திறந்தார்கள்.

## சாருலோசனு வைத்தியசாலை.

சகலமான ஏழைகளுக்கும் தர்மார்த்தமாக வைத்தியம் செய்யப்படும். சகலமான வ்யாதிகளும் இவ் வாஸ்பத்திரியில் ப்ரபலமான மருத்துவர்களால் கவனிக்கப்படும். ஸ்திரீகளுக்குப் பிரத்யேகமான இடமும், லேடி டாக்டருடைய சம்ரக்ஷணையும் உண்டு.

என்கிற விஷயங்களை பெரிய அக்ஷரங்களினால் செதுக்கப்பட்ட (போர்டு) பலகை ஆஸ்பத்ரியின் முன் பக்கத்தில் சுபகரமான சின்னங்களுடன் மாட்டப்பட்டது. அன்று அநேக ஏழைகளுக்கு அன்ன வஸ்திர தானங்களும், ஆலய பூஜைகளும் நிரம்பவும் சிறப்பாக நடந்தேறின. அன்று முதற் கொண்டு அவ்விடத்தில் அவுஷதங் கொடுக்கவும் அவ்விடத்திலேயே வந்து படுத்துவிட்டவர்களுக்கு வெகு சிறப்பான உபசரணையுடன் சிகிச்சை செய்யவும் ஆரம்பமாயிற்று. பத்மலோசனவுடன் படித்த சிநேகிதைகளில் சிலர் நர்ஸாகவும், சிலர் டாக்டராகவும் நியமக்கப்பட்டு வெகு நன்றாக வேலை நடக்கின்றது. ஜெயமணியின் உடம்பும் முற்றிலும் குணமாகி விட்டதால் ஆஸ்பத்ரியில் ஸ்திரீகளுக்கு ஆகாரம் கொடுப்பதும், வேளா வேளையில் சென்று விசாரிப்பதும் அவ்விடத்திலேயே பிறந்த குழந்தைகளை எடுத்து வைத்துக்கொண்டு அவைகளுடன் கொஞ்சிக் குலாவித் தன் தீராத துயரத்தைச் சற்று மறப்பதற்கு முயற்சித்தும் தன் பொழுதைக் கடத்தலானாள். ஆஸ்பத்ரி ஆரம்பமாகிய இரண்டு மாதத்திற்குள்ளாக அவ்விடத்தில் சுமார் 150 குழந்தைகள் பிறந்து தாயும் சேயும் சுகமே ஸ்வஸ்தானம் சென்றனர். அலகிலாப் பிணியாளர்கள் குணப்பட்டுத் தமது மனப்பூர்வமான ப்ரியத்துடன் வாழ்த்திக்கொண்டே வீடு சென்றார்கள். தினந்தோறும் வந்து மருந்து வாங்கிக்கொண்டு போகும் நோயாளிகளின் எண்ணிக்கை அளவற்றது. இவ்விதமான தடபுடலுடன் ஆஸ்பத்ரியின் வேலை வெகு மேன்மையாயும், யாவரும் கொண்டாடும்படியாயும் நடந்துவருகின்றது. ஆஸ்பத்ரிக்கு ஏற்பட்டுள்ள பேரும் புகழும் கூறற்பாலது. தினே தினே வளர்பிறை மதியம்போல ஆஸ்பத்திரியின் கீர்த்தி பெருகுவதும், தேய்பிறை மதியம்போல பிணியாளர்களின் பிணி தேய்ந்து விலகுவதுமாக விருக்கின்றது.

எது எவ்விதமாயினும் நமது ஜெயமணியின் மனத்திற்குச் சந்துஷ்டி என்பது உண்டா! அதைத்தான் காணவில்லை. அல்லும் பகலும் அவதிக்குள்ளாகித் தவிக்கின்றது; எனினும் தனது மனோபீஷ்டம் இவ்வொன்றிலேனும் நிறைவேறியதன் நிமித்தம் அவள் அற்ப சந்தோஷம் அடைந்தாள். தன்னுடைய பெரும்பாகமான பொழுதை

யும் அந்த ஆஸ்பத்திரியின் மூலமே போக்குவாள். இவ்விதமாக விருக்கையில் சந்திரகாலனுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. பிள்ளைப் பேறால் சந்திரகாலன் அடைந்த இன்பத்திற்கு எல்லையே இல்லை. குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டவுடனே சந்திரகாலன் சாரு காலனிடம் ஓடிவந்து "நண்பா! நெடுநாட்களாக எதிர்பார்த்திருந்த ஆநந்தம் இப்போது எனக்குக் கிடைத்துவிட்டது. கடவுள் ஆண் மகவை அளித்தார். இப்போதே அக்குழந்தையை உனக்குக் கொடுக்கத்தயாராக இருக்கின்றேன். முன்னர் நீ கூறிய வார்த் தைப்படி நிறைவேற்றுகின்றேன்." என்று வெகு சந்தோஷத் துடன் கூறினன்.

இதுகேட்ட சாருகாலன் மிகவும் மகிழ்ச்சியோடு குழந்தை பிறந்த கொண்டாட்டத்தை விசாரித்துப் பின் பேசத்தொடங்கி "நண்பா! நானே மகாபாவி! பாவியிலும் உலகில் காண்பதற்கரிதான கொடும்பாவி. அச்சமயம் நீ விவாகம் செய்துகொள்ளும் பொருட் டாகவே நான் அவ்விதமாக உனக்கு ஆசைமொழி கூறினேனே யன்றி வேறல்ல. சகலமான அம்சங்களிலும் பரம சண்டாளனுகிய எனக்குக் குழந்தையா! ஐயோ! வேண்டாம். என் பெயரைக் கூறி னுலும் குழந்தைக்கு க்ஷேமம் குறைந்துவிடும். குழந்தையை கண் ணல் பார்ப்பதற்கும் அருகதையற்றப்பாவி, பரதேசி எனக்கு ஸ்வீகாரமா. குடும்ப விருத்தியா? ஒன்றும் வேண்டாம். அச்சமயம் நான் அவ்வார்த்தையை உபயோகப்படுத்தாமலிருந்தால் நீ கட்டா யம் விவாகம் செய்துகொண்டிருக்கமாட்டாய். அந்த நோக்கத்தை அறிந்தபின்னரே நான் உனது விவாகத்தை முடித்தே தீரும் பொருட்டாகக் கூறிய வார்த்தையேயன்றி உண்மையில் இதற்கு நான் பாக்யம் செய்யவில்லை. உங்களுடைய குழந்தையாகவிருப்பின் உயிருடன் சுகமே வாழும். அதைக் கண்டு களித்து நானும் சந் தோஷமடைவேன். பிறந்தநாள் முதலாக என் கண்மணியை எனக் கென்றே நினைத்து மனப்பால் குடித்துவந்த என் வாயில் மண் விழுந்ததை நீ அறியமாட்டாயா! என்னுடைய துரதிர்ஷ்ட வசத்தி னல் எனக்கென்ற எந்த பொருளும் நிலைக்காது. அது எனது அனுபவமாகிவிட்டது. எனது ஜெயமணி எனக்குக் கிடைக்காமற்

போன பிறகு இனி எனக்கென்று எப்பொருளையும் மனத்தினுலும் நினைப்பதில்லை என்கிற ப்ரதிக்ஞை செய்துகொண்டேன். என் பாவிப் பெயரைக் கூறுமல் உன் குழந்தை சந்தோஷமாக வளரட்டும். நீங்களிருவரும் குழந்தைக்குப் பெற்ருேராக வெகு காலம் வாழ்ந்து இன்னும் அநேக குழவிகளையும் பெற்று மகிழ்ச்சியாயும் நித்யாநந்தமாயும் வாழுங்கள். அந்த இன்பப்போட்டியில் நானும் கலந்துகொண்டு சந்தோஷமடைகின்றேன். எனக்கென்று வேண்டாம்; என் பெயரையே கூறவேண்டாம். எல்லாம் என் பெயரைக் கூறுமலேயே என்னுடையதாக பாவிக்கின்றேன். வருத்தமுருதே! நான் கூறுவதை வித்யாசமாக எண்ணுதே! நான் ஏதோ ஓர் காரியார்த்தமாகத்தான் கூறுவேன். நண்பா! சந்திரகாஸா! உன்னுடைய ப்ரீதி என்றும் நிலைத்திருந்தால் அதுவே எனக்குப் போதுமானது. அவ்வொன்றைத்தான் நான் எதிர் பார்க்கின்றேன். என்னுடைய சகலமான நிலையும் நீ நன்கறிந்திருப்பதால் நான் உன்னிடம் அதிகமாக எதுவும் சொல்லவேண்டியதில்லை. நான் இவ்விதம் சொல்லிவிட்டதற்கு மன்னிப்பாயாக.'' என்று சந்திரகாஸன் மேலே அதிகமாக எதுவும் பேசுவதற்கு இடமின்றித்தானே எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டான்.

இதைக்கேட்ட சந்திரகாசன் சற்று வருத்தமுற்று சாருகாஸனின் கதியையும் மனேவெறுப்பையும் எண்ணிக் கண்ணீர் விட்டான். சற்று நேரம் அவ்விஷயமாக உரையாடிப் பின்னர் சென்ருன். சாருகாஸன் ஆஸ்பத்ரியின் வேலையை வெகு கவனத்துடன் செய்கின்ருனேயன்றி, மனத்தில் பொங்கும் துயரம் அகல வழி யறியாது தவிக்கின்ருன். தன்னுல் கூடியமட்டில் தனது மனே நிலைமை பிறழா வண்ணம் நிரம்பவும் ச்ரமத்துடன் தன் காலத்தைக் கடத்துகிருன். ஜெயமணியினிடத்தில் அடிக்கடி சந்திப்பதும் பேசுவதும் தனது நிலைமைக்கும் அம்மின்ஞளின் நிலைமைக்கும் ஆபத்தென்றெண்ணி அவ்விஷயத்தில் நிரம்பவும் ஜாக்ரதையாய் நடந்துவருகிருன். சமயம் நேர்ந்தகாலை பேசுவதும் மற்றய நேரத்தில் தனது வேலையைக் கவனிப்பதும் தொழிலாகக்கொண்டான்.

சோமநாதன் ஏற்கெனவே விவாகமாகியவன்; இரு குழவிக

ளுக்குப் பிதாவாகிவிட்டவன்; ஆகையால் ஜெயமணி தனக்குக் கிட்ட வில்லை என்பதை அறிந்தவுடன் தனது சினேகிதனுக்கு த்ரோகம் செய்யலாகாதென்கிற எண்ணத்துடன் அவனும் தன்னல் கூடிய வரையில் தன் மனத்திலுள்ள எண்ணத்தை மாற்றிக்கொண்டே வருகிறன். ஜெயமணியைக் காணும்போதெல்லாம் அவளைத் தாயாகப் பாவிக்கவேண்டுமென்று மனத்தில் எண்ணுவதெல்லாம் சில சமயம் வீணுகிவிடுகின்றது. அந்த நினைவு மீண்டும் பாசிபோல படர்ந்துவிடுகின்றது. இவ்விதமான சங்கடத்துடன் ஆஸ்பத்ரியில் வேலைபார்த்து வருகிறன்.

பத்மலோசனுவோ, இவ்வாஸ்பத்ரிக்கு வந்த நாள் முதலாக தீர வைராக்யத்தையும், வெறுப்பையும் மேற்கொண்டு தான் முன்னர் அலங்காரபிம்பமாக இருந்ததை மாற்றி சன்யாசினி ஆச்ரமத்தை முற்றும் கைக்கொண்டவள்போல காஷாயக்கலர் ஸில்குப் புடவையும்,ரவிக்கையும், கையில் ஒரு வளையல், காதில் சாதாமுத்துக் கடுக்கன், கழுத்தில் ஒரே ஒரு சைன் இம்மட்டோன அலங்காரத்துடன் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்வதும், ஜெயமணியினிடம் பேசுவதும், குழந்தைகளுடன் விளையாடுவதும், பெண் பிள்ளைகளான நோயாளிகளுடன் பேசிப் பொழுதுபோக்குவதும் தன் போக்காகப் பாடுவதும், சதாகாலமும் 'ராமா! க்ருஷ்ணு! வாஸுதேவா!,' என்று தோத்திரம் செய்வதுமாகத் தன் பொழுதைக் கடத்தலானுள்.

ஜெயமணி என்கிற மின்னல் கொடியாள் தான் என்று இவ் வுலகை நீத்து அவ்வுலகம் செல்லும் பாக்யம் பெறுவோம். என்கிற ஏக்கத்திற்கு அடிமையாகிவிட்டாள். அநவரதமும் "ஈசா! என்மீ திரங்கமாட்டாயா! இம்மகா பாவியை உன்னடியில் சேர்த்துக் கொள்ளலாகாதா! இன்னும் எத்தனை காலந்தான் நான் இவ்வித இம்சைப்படவேண்டும்." என்று வேண்டிக்கொண்டே நடைச்சவம் போல உலாவுகின்றுள். இம்மனோவேதனையினுலும் முன்னர் அதிகமான நோயினுல் பீடிக்கப்பட்டுத் தேறியதால் நிரம்பவும் பலவீனமாயிருப்பதனுலும் அவளது தேகம் மெலிந்தேபோய்விட்டது. அவள் மனத்தில் தெம்பும் சந்தோஷமும் அற்றன. சாருகாஸனிடத்தில்

சிறிது நேரம் பேசவேண்டுமென்று ஒரு சமயம் நினைப்பாள். மறு சமயம் "அவனோடு நாம் ஏன் பேசவேண்டும்"? என்று அடக்கமாட்டாத வெறுப்புற்று குப்புறப் படுத்துவிடுவாள். தன்னுடைய பர்த்தாவின் பணிவிடைகளைமட்டும் தட்டாது செய்துவிட்டு மற்றயபோதை பைத்தியக்காரியைப்போலக் கழிக்கலானாள். தன்னிலை தனக்கே தெரியாதவிதம் தத்தளிப்பாள். சிலசமயம் யாராலும் சமாதானம் செய்யமாட்டாமல் தவிக்கும் வண்ணம் புலம்பிக்கொண்டே கிடப்பாள். சில சமயம் அன்னத்தை நாடாது ப்ரமைகொண்டவள்போலத் திரிவாள். சில சமயம் மனமுருகும்படியாகப் பாடுவாள். இவ்விதமான மாருட்டத்துடன் திடீர் திடீர் என்று மூர்ச்சையாகி நினைத்த விடத்திலெல்லாம் விழுவாள். இக்கோரமான காட்சியைக் கண்டவர்கள் அம்மடமயிலைத் தூக்கி எடுத்து சிகிச்சை செய்வார்கள். சித்தம் சிதறிவிட்டதோ, என்று காண்போர் ஐயுறும்படியாக ஆய்விட்டாள். அவள் வசிக்கும் பங்களாவிற்கும் பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கும் இருபக்கங்களிலும் வழிகள் உண்டு. ஆதலால் அவ்வழிகளால் ஆஸ்பத்திரிக்குச் சென்றுவருவதும், வீட்டில் கிடப்பதும் மானஸீகமாகக் கோட்டை கட்டுவதும்தான் தனது பிறவிக்கு இன்பம் என்ற தீர்மானத்துடன் இருக்கின்றாள்.

இவ்விதமே பின்னும் ஆறு மாத காலமாகிவிட்டது. சாருகாஸனின் பெற்றோர்கள் சாருகாஸன் இங்கிருப்பதை அறிந்து பல முறைகளில் அவனுக்குக் கடிதம் போட்டும், ஆள் அனுப்பியும் அழைத்ததெல்லாம் வியர்த்தமாகிவிட்டது. அவன் தன்னுடைய முகத்திலும் அவர்கள் விழிக்கவேண்டாமென்ற வார்த்தையைத் துணிவுடன் கூறிவிட்டான். அவர்களும் அவன் முன் வருவதற்குத் தைரிய மின்றி "ஐயோ! நாம் செய்த அநியாயத்தினாலன்றோ நம் மகன் இவ்விதமாய் விட்டான்" என்று வருந்திப் பேசாதிருந்து விட்டார்கள்.

வயது முதிர்ந்த கங்காதரர் ஏற்கெனவே சீக்காக திட சரீர மற்றிருந்தார். அவருக்கு காளடைவில் மீண்டும் பலமான படுக்கை ஏற்பட்டுவிட்டது. சாருகாஸனும், சோமநாதனும் எத்தனையோ முயற்சியுடன் அவருக்கு வைத்தியம் செய்து வருகிறார்கள். ஜெய

மணிக்கோ, தனது புருஷன் படுத்துவிட்ட கவலை பூர்ணமாக நிரம்பி விட்டது. "ஐயோ! என் பர்த்தாவுக்கு உடம்பு சீக்கிரம் குணமாகுமா! அவருடைய பிணி அகலுமா! எனக்கு பர்த்தா உயிருடன் இருக்கும் பாக்யமேனும் கிட்டுமா! அவ்விஷயத்திலும் எனது துரதிருஷ்டம் வந்து சேர்ந்துவிடுமோ! என்ன செய்வேன்? படுத்திருப்பதோ பயங்கரமாக விருக்கிறதே! ஏ, தீனபந்தோ! என்னை எல்லாவிதத்திலும் தான் சிக்ஷித்துவிட்டாய். என் பர்த்தா விஷயத்திலும் எனக்குக் குறை ஏற்படாது காப்பாற்றமாட்டாயா! என் மனமென்னவோ தபிக்கின்றதே! என்னை பறியாத சங்கடம் ஏதோ செய்கின்றதே! ஹா! பாவி இவ்வுலகில் பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரையில் துன்பந்தானு துணையாகிவிட்டது! என்ன பிறவி! என்ன பிழைப்பு! இவ்விதமான சங்கடங்களை அனுபவிக்காது என்னுயிர் நீங்கி இருக்கலாகாதா! இனியேனும் நீங்கலாகாதா! அதற்கு விமோசனமே காணப்படவில்லையே! என் விஷயத்தில் கடவுளுக்கும் கண் தெரியாது போய்விட்டதே! ஏ, சண்முகா! உனக்குப் பன்னிரு கண்கள் இருந்தும் என்னுடைய பரிதாபத்தை அறியக் கண்ணில்லையா! பாவி யான் என் மனச் சாக்ஷிக்கு விரோதமாக ஒருவருக்கும் ஒரு சிறிய தீங்கும் இப் பிறவியில் செய்தறிய மாட்டேனே! பூர்வ ஜென்மாந்திரத்தின் பாவம் இன்னமும் என்னை விட்டு நீங்கவில்லையா! என் பர்த்தா உயிருடன் இருப்பதனுலேயே நான் ஓர் சிறிய மதிப்புடன் உலாவுகின்றேனே! அதற்கும் பங்கம் வந்துவிடுமோ! என்னப்பனே! சர்வலோக சரண்யா! நான் படுந் துன்பத்தை நீ அறியாயா! அதை அறிந்தும் நீ பேசாது மவுனம் சாதிப்பது தான் உனது தீனதயாளன் என்கிற பெயருக் கழகாகுமோ. எனது குறையை எத்தனை முறைதான் ஓலமிட் டழுவேன்?

தன்யாசி ராகம்

"இன்னமும் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியும் மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்கழகுதானே

என்னேன்ன மோகமோ இதுவேன்ன சோபமோ
இதுவேயுன் செய்கைதானோ
இருபிள்ளைதாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவேனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனான்
உனையடுத்து கெடுவேனோ
ஓஹோ விதுன்குற்ற மேன்குற்ற மொன்றுமில்லை
யுற்றிபார் பேற்றவையா
என்குற்றமாயினும் உன்குற்றமாயினும்
இனி யருளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.''

உன் பாதமே தஞ்சமென்ற எனக்கு அஞ்சேல் என்ற அபயம் தாராது நெஞ்சழுத்தக்காரனாய் வஞ்சகத் தன்மையாய் வீற்றிருந்து உன்னுடைய கேளிகா விலாசத்தினால் கொஞ்சி விளையாடி பஞ்சணையில் சயனித்து மகிழ்ந்தால் பேதை யான் செல்லும் வழி வேறுண்டா! என்னப்பனே! ஐயோ! கொடிய பாபத்தைச் செய்து புவியில் செனித்துப் படும் துன்பம் போதா வென்று உன்னையும் நிந்தித்து பாப மூட்டையைத் தேடிக்கொள்கின்றேனே! ஈசா! பேதை என் பர்த்தாவின் நோயைக் குணம் செய்யும் வரனை யளித்து என்னைக் காப்பாற்றினால் போதும்.'' என்று தனக்குள் தீராத விசனத்துடன் வேண்டிக்கொண்டு, தன் பர்த்தாவின் பக்கலிலேயே அமர்ந்து மிகவும் கனிகரத்துடன் அவருடைய பணிகளைச் செய்து வருகிறாள். சாருகாஸனையும், சோமநாதனையும் அடிக்கடி "என் பர்த்தாவுக்குக் குணமாகிவிடுமா! பயமில்லையா!'' என்று பரிதாபகரமாகக் கேட்பாள்; கண்ணீர் விடுவாள். இருவரும் அனுகூலமாகிவிடும் என்கிற தைரிய மொழியே கொடுத்துவந்தார்கள். கடவுளை எப்பொழுதும் வணங்கித் தோத்திரம் செய்வாள். இவ்விதமே 5-6-நாட்களாய்விட்டன. கங்காதரரின் நிலைமை சற்றும் குறைவு படக்காணோம். ஜெயமணியின் கவலையோ அதிகரித்துக் கொண்டே;வருகின்றது.

அன்று பௌர்ணமியாகையால் எங்கும் வெள்ளியை உருக்கி வார்த்ததுபோல சந்திரன் துல்லியமாகப் பிரகாசிக்கின்றது. எந்தப் பக்கம் நோக்கினும் சிலுசிலுப்பான காற்று வீசுகின்றது. இரவு சுமார் 10 மணிக்கு மேலிருக்கலாம். ஜெயமணியின் மனம் கட்டுமீறிய துயரத்தினால் கலங்கிவிட்டது. அபாரமான திகிலும் பீதியும் மனத்தில் தோன்றி திடும் திடும் என்று வதைக்கின்றன. அந்நிலைமையில் கங்காதரர் சற்று நித்திரை செய்தார். இது கண்ட ஜெயமணி அவருடைய நிலைமையை சாருகாஸனிடத்தில், நன்றாக விசாரித்தறியும் பொருட்டு அவனிருக்கும் இடத்திற்கு வெகு துரிதமாக வந்தாள். அவனுடைய அறையில் சாருகாசன் காணாமையால் எங்கிருப்பான் என்று தேடிக்கொண்டே தோட்டத்திற்கு வந்தாள். அங்கு விதவிதமான செடிகள் வரிசையாயும், நேர்த்தியாயும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அற்புதமான எழிலைக் காண்போர் மனம் களிப்புற்றிலகும்படியாக அமைந்துள்ளவிடத்தில் ஓர் ஆசனத்தின்மீது சாருகாஸன் உட்கார்ந்திருக்கிறான். அங்குள்ள நறுமலர்களின் பரிமளம் கமகம வென்று வீசி நாசியில் சென்று ஆநந்தமுறச் செய்கின்றது. ஆனால் அத்தகைய மனோகரமான வனப்பும், பரிமளமும், மந்தமாருதமும் நமது சாருகாஸனுக்கு ஒரு சிறிதும் ஆநந்தத்தை அளிக்கச் சக்தி யின்றி அவனுடைய துயரத்தையும், பொறுமையையும், உத்தம குணத்தையும் கண்டு மனமுருகி "ஐயோ! உன் கதி இவ்விதமாக ஆய்விட்டதா!" என்று துக்கப்படுவது போலாய் விட்டன.

அங்குள்ள மரங்களின் இலைகளும், தழைகளும் காற்றினால் அசைந்தாடும்போ துண்டாகும் ஓசையானது சாருகாஸனுக்கு உபசார வார்த்தைகளைக் கூறுவது போல விருக்கின்றது. நிலவு நிறைந்திருப்பதால் அவ்வப்போது சில பக்ஷிகள் கூவுவதானது "சாருகாஸா! நீ பயப்படாதே! உனக்குத் துணை நாங்களிருக்கின்றோம்" என்று கூறுவது போலத் தோற்றுகின்றது. இத்தகைய நிலைமையில் சாருகாஸன் அங்கு அமைக்கப்பட்டுள்ள ஆஸனத்தில் சாய்ந்தவாறு படுத்துவிட்டான். அவனுடைய இரு கரங்களும் தலைமீது ஒன்று சேர்ந்துவிட்டன. உடல் அங்கிருக்கின்றதே

யன்றி உயிரும் எண்ணமும் எங்கிருக்கின்றதோ! பெருத்த சுவாசம் அவன் மார்பை விம்மி விம்மி வடிக்கின்றது. வாயில் ஏதோ வார்த்தைகள் முணு முணு என்று வருகின்றன. நமது ஜெயமணி அந்தப் பக்கம் வந்து சாருகாலன் படுத்திருப்பதையும் அவன் வாயினின்றும் ஏதோ சொற்கள் வருவதையும் கண்டு அப்படியே பதுமைபோல நின்றுவிட்டாள். சாருகாலனின் சோகம் நிறைந்த வதனத்தையும் அவன் படுத்திருக்கும் கண்ராவியையும் கண்ட ஜெயமணியின் உயிர் துடிக்கின்றது. அவள் மனத்தில் ஏற்கெனவே போராடிக்கொண்டிருக்கும் சங்கடத்துடன் இந்த பரிதாபமான காக்ஷி மனத்தில் தைத்து அவளை நிலை புரளச் செய்துவிட்டது. சாருகாலன் என்ன விஷயத்தை முணுத்துக் கூறுகிறுன் என்கிறதை அறியும் பொருட்டாக மெல்ல நடந்து வந்து சாருகாலன் படுத் திருக்கும் ஆலனத் தருகில் அவன் சிரம் வைத்திருக்கும் பாகத்தின் பக்கமாக அவனைக் கவனித்தபடியே நின்றுள்.

சாருகாலனே, இவ்வுலகத்திலேயே இல்லாதவன் போலத் தன்னையே மறந்து விழிகள் நீரைக் கக்கி, அருகில் ஆறுப்ப பெருக "இறைைய தேதி எனக்கோர் சண்டாள நாளலலவா? என கண்மணியின் திருமணத்தைக் குறித்துக் கடிதம் எனக்கு வந்த நாளல்லா இது! ஆகா! அனறே எனது முடிவு யாவும் தீர்ந்த தெனினும் என கணணாமுதைக் கண்டு களிக்கும் பொருட்டாக வனறோ அங்கிருந்து ஓடோடியும் வந்தேன்! அடடா! எனது புததி எனக்கறிந்த நாள் முதலாக என்னுடைய சொந்த விஷயமாக நடநதுள்ள யாவும் ஓர் நிமிடத்தில் மறையக்கூடிய கனவாகவன்றே ஆயவிட்டது. சீச்சீ! என்ன ஜென்மம் எடுத்தோம். நான் மனோ ராஜ்யம் செய்து மகிழ்ந்ததே எனக்கு முடிவாகிவிட்டதே! என கண்மணியை நான் காதலித்த அருமையை அக்கடவுளல்லவா அறி வார். அறிந்த அவரோ 'என்னைப் பாழ்ப்படுததிவிட்டார் என்றுல நான் யாரிடம் கூறி முறையிடுவேன். ஐயோ! என ஜெயமணியை மறக்கவேண்டி நான் படும் முயற்சி எல்லாம் என்னை ஏமாற்றி வஞ சிதது விடுகின்றதே! பாழும மனத்தை நான் இன்னும் எவவிதம தான அடக்குவேன். என்னுடைய திறன் பூராவும் உபயோகித்

தானும் தானே தோல்வி யடையவும், மனவலிமை இன்றி பழைய பாசத்தின் மீதே ஊசலாடி என் ஆசைக்கிளியை நேசமுடன் தாவி இறுதியில் மோசமடையவும், நாசமடையவும் செய்கின்றதே! என்ன செய்வேன்? ஏ, மனமே! சென்ற நாட்களை ஏன் சிந்திக்கச் செய்து என்னுயிரை வாட்டுகின்றாய். நான் உன் கையிலகப்பட்ட பொருள் என எண்ணி என்னை உன் விருப்பப்படிக்கெல்லாம் ஆட்டத் தலைப் பட்டாயோ ஏ, மனமே!

மனமேனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியேனிற் சுகமா
யிருந்திடுநீ என்சொல்வழி யேற்றிலையா னாலோ
தினையளவுன் னதிகாரஞ் செல்ல வொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளாற் கணத்தே
கனைவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே.

—திருவருட்பா

என் வசம் நீயா! உன் வசம் நானு! என்பதை உணர்ந்திடமாட் டாத விதமாக என் கதியாய்விட்டதே! சிற்சில சமயம் மனத்தை அடக்கிபாளலாம் என்கிற ஓர் தைரியம் சிறிது பிறக்கின்றது. அந்த தைரியம் நிலைத்து நிற்பதற்கு யான் முயற்சிப்பதற்குள் என்னை அம்மனமே முற்றிலும் பித்தனாகச் செய்து முடிவிலாத துயரத்தி லாழ்த்தி என்னை வதைத்துவிடுகின்றதே! ஹா! இதென்ன மாயம், இதென்ன விசித்திரம்! இவ்வுலக மயக்கத்தை ஒன்றையும் அறியக் கூடவில்லையே! எதை நோக்கினும் நம்பக்கூடாத விதமான பூடக மாகவன்றோ இருக்கிறது. எந்த விஷயத்தையும் உணர்த்துவதும், உணர்வதும், மறப்பதும், மறுப்பதும், சிந்திப்பதும் சகலமும் இப் பாழும் மனமல்லவா? இம்மனத்தின் தன்மையையே அறியக் கூடாமல் தவிக்கையில் உலகவியலை அறிவது எங்ஙனம்? எல்லா வித துயரங்களையும் உண்டாக்குவதும் மனமே; விலக்குவதும் மனமே! ஆகா! மனம் செய்யும் கூற்று ஒன்றா பிரண்டா! என் கண்ணான ஜெயமணியை இச்சித்ததுவும் மனமே! அதை படை

பாது தவிப்பதுவும் மனமே! ஏ, மனமே! என்னை நீ சித்திரவதை செய்வது போல இவ்வுலகில் வேறு எதுவும் செய்யாது. அந்தோ! நான் தற்சமயம் பாக்குவெட்டியின் முனையிலிருப்பதுபோலன்றே இருக்கின்றேன். என் கண்ணுன ஜெயமணியின் வாக்கைத் தட்ட மாட்டாமல் நான் இவ்விடம் வருவதற்கிசைந்து வந்துவிட்டேன். எனது கட்டை அயலூரிலிருக்கையில் நான் பட்ட இம்சையை விட தற்போது இவ்விடத்திலிருக்கும் சங்கடம் சகிக்கக்கூடவில்லையே! கண்ணுல் பார்க்காமல், மனத்தினுல் சிந்தித்து வருந்துகையில் என் னிலை எனக்கறிந்திருந்ததே இப்போதோ! என் கண்மணியை அடிக்கடிப் பார்ப்பதால் என்னுடைய பேய் மனம் என்னை ஏமாற்று கின்றதே! அந்த மின்னுளைக் காணும்தோறும் அவளுடன் பேசி னுல் போதும் போலான தோற்றம் உண்டாகின்றது. அவ்வாறு பேசினுல் பிறகு அதைவிட ஒரு படிக்கட்டு மேலே போக மனம் தாவுகின்றது. இவ்விதமே பாபக்கிணற்றில் என்னைத் தள்ளிவிடும் வழியைப் பார்க்கின்றதே! நான் என்ன செய்வேன்? இனிமேல் இவ்விடம் விட்டுச் செல்வதற்கும் கூடவில்லை. நான் இவ்விடத்தி லேயே இருந்து என் காலத்தைத் தொலைப்பதுவும் அனுபவத்தில் பெருத்த கஷ்டமாகிவிடுகின்றது. ஐயோ! எல்லாவற்றையும் நான் சகித்துக்கொண்டு என் கண்ணுர்மணியைக் கண்ணுல் கண்டு மனங் களிப்புற்றிருக்கும் பாக்கியமும் இனிமேல் கிடைக்கமாட்டாதுபோ லிருக்கிறதே!

ஜெயமணியின் புருஷர் உயிருடனிருக்கையில் அவளுடன் நாம் பேசவோ, நமது துக்கத்தை உரைக்கவோ ஒருவிதமான சங் கோஜமுமின்றி—பயமின்றி—இத்தனை நாளும் கழிக்க முடிந்தது. அவருடைய நிலைமையை நோக்கின் இனி அந்த பாக்கியமும் பாவி எனக்கு அற்றுவிடும்போல விருக்கின்றதே! அவர் இவ்வுலகில் இன் னும் இரண்டு நாட்கள் இருப்பதுகூட துர்லபம்போலத் தோன்று கின்றதே! அவருடைய பிரியத்தினுலும், ஆதரவினுலும் நான் இவ் விடத்திலிருக்கும் சுதந்திரத்தை இழந்துவிட்ட பின்னர் இங்கு எவ்வாறு இருக்கக்கூடும்? அந்த கதிக்கு ஆளாகிவிட்ட பிறகு என் கண்மணியை எவ்விதம் பார்க்கக்கூடும்? ஐயோ! அதன் பிறகு

210023



என் கதி என்ன ஆகுமோ! அடாடா! என்ன அநியாயம் நடக்கின்றது. நான் எனது பிறவியின் கேட்டினாலுண்டாகும்; சம்பவங்களில் எதைத்தான் எண்ணி வருந்தி அழுவேன்? ஒன்றுமே எனக்குத் தெரியவில்லையே! கேவலம் என்போன்ற துராத்மாக்கள் உலகில், கடவுள் சிருஷ்டியில் இதுபரியந்தம் இருந்ததுண்டா! இருக்காது என்றே கூறவேண்டும். சீச்சீ! உலகத்தில் மானிடராகப் பிறப்பது புண்ணியமா? இந்த உலகில் நான் பிறந்து படும் துன்பத்தைப் புண்ணியமென்று யாரேனும் நினைக்கக்கூடுமோ? மானிடர் என்பது மகத்தான இடர்களுக்கு இலக்காகும் பொருட்டு இம்மண்ணில் பிறப்பதாகவே எண்ணவேண்டும். பிரமன் கைத்திறத்தைக் காட்டும் பொருட்டாக என் தலையில் தீட்டிவிட்டான் போலும். ஆகா! இவ்வானந்தமயமான உலகத்தில் பாவி, ;பரதேசி, அபாக்யவான், அதிர்ஷ்டஹீனன் நான்தானா பிறந்தேன். சதா மனம் நொந்தழுவதற்கு நான்தானா கையேந்தி வரம் பெற்றேன். ஐயோ! எனக்கு பொருள் வேண்டாம்; புகழ் வேண்டாம்; செல்வம் வேண்டாம்; சிறப்பு வேண்டாம்; என் கண்மணியாகிய ஜெயமணிப்பாவை கிடைத்துவிட்டால் போதும். அம் மணியைப் பெற்றால் என் பிணி அற்றுவிடும், — என்று நான் பலகாலும் கடவுளை வேண்டி செய்த தவமெல்லாம், தோத்திரமெல்லாம், பஜனை எல்லாம், பக்தி எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போலாகிவிட்டதோடு என் விழியில் சதா நீர் இறைக்கும்படியாக ஆய்விட்டதே! என் மனத்தில் சதா சர்வகாலமும் "தீனபந்தோ! என் தீஞ்சுவையை எனக்களிப்பாயா! கருணாகரா! என் தருணீமணியை எனக்களிப்பாயா! பரம்பொருளே! என்னருங்கிளியை எனக்களிப்பாயா! ஆதிமூலமே! என் காதல் கிளியை எனக்களிப்பாயா! அநாதரக்ஷகா! என் மனோரஞ்சனியை எனக்களிப்பாயா! என்னப்பனே! என் ஒப்பிலா மாமணியை எனக்களிப்பாயா! கமலநாதா! என்னமுதச்சுடரை எனக்களிப்பாயா! விண்ணுலகரசே! என் கண்ணின்மணியை எனக்களிப்பாயா! எதுகுலதிலகா! என் மதுரமொழியாளை எனக்களிப்பாயா! என் மனத்தைக் களிக்கச்செய்வாயா! என்னுயிரை இன்புறச்செய்வாயா! என்னிதயத்தை மகிழச்செய்வாயா! என் பிறவியை ஆனந்தமயமாக்குவாயா?" என்று நான் நினைத்த நோமெல்

லாம் மண்டியிட்டு உட்கார்ந்து உன் திக்கு நோக்கி வணங்கி ஓலமிட்டு வேண்டுவேனே! என் வேண்டுகோளெல்லாம் உனக்கு வீணாகிவிட்டதே! என்னை எந்த மட்டும் வதை செய்ய எண்ணினாயோ, அந்த மட்டும் பூர்ணமாக வதைத்து விட்டாய். இவ்விதம் செய்ததும் போதாதென்று என் கண்மணியை நல்ல அலங்காரத்துடன், சுதந்திரத்துடன் பார்ப்பதற்கும் நான் அருகனல்லன் என்று எண்ணி அவளுக்கு அளித்த இத்தனை விசனங்கள் போதாவென்று பெரும் பாறையைத் தலையில் புரட்டவும் முன்வந்துவிட்டாய். ஐயோ! இந்த சங்கடத்தை என் கண்மணி எவ்வாறு சகிப்பாள்? அதைக் கண்டு நாம் எவ்விதம் பொறுப்பது? ஆகா! என்ன செய்வேன்? என் கண்ணே! ஜெயமணீ! உன் நாமாவைப் பன்னிப் பன்னிப் பல காலும் சொன்னாலும் என்னாவிக் கோர் ஆநந்தம் உண்டாகின்றதே! அத்தகைய நாமத்தை நான் இனி பகிரங்கமாகக் கூறியழைக்கவும் பாக்கியமற்று விட்டேனே! உனது பர்த்தாஎதிரில் உன்னுடன் பேசும்போதே நீ பயப்பட்டு நடுங்கினாயே! களங்கமற்ற மனத்துடன் இனிமேல் நானும் நீயும் தனித்துப் பேசுவது உன் தலைக்குத் தீராத ஆபத்தாக வன்றோ முடியும். நமது மனத் தூய்மையை அந்த சர்வேசனன்றி பிறர் அறியக்கூடுமோ! அக்ரம வழியில் புகுவோராயின் நாம் என்றைக்கோ கெட்டழிந்திருக்கலாகுமே! கடவுளுக்கும், சத்தியத்திற்கும், உலகத்திற்கும், நியாயத்திற்கும், பாபத்திற்கும் மனச் சாக்ஷிக்கும் பயந்து பயந்து எத்தனையோ நெறியுடன் நடந்து, படாத துன்பங்களை அனுபவித்துக்கொண்டு அபாரமான சோகமே நமக்கு சொர்க்கம் என்று காலத்தைக் கடத்துகையில் அநியாய உலகம் வாயடைத்துக் கொண்டு இருக்கமாட்டாதே! இனி உனக்கு நாதனில்லை என்ற கொடுஞ் சொல் தாங்கி நின்ற காலையில் என் பொழுதை எவ்விதம் கடத்துவேன்? என்னவிதமாக நான் உயிர் தரித்திருப்பேன்? என் அன்பான ஜெயமணீ! உனக்கு இப் பெருங் குறை ஏற்பட்டுவிட்ட பிறகு நான் உயிரையேனும் விடவேண்டும்; அன்றி இவ்வுலக மனிதர்களின் கண்முன் படாது கானகத்தே சென்று காட்டு மனிதனாகத் திரிந்து 'ஜெயமணீ! ஜெயமணீ! ஜெயமணி!' என்ற

நாமத்தை என்னாவல் தீரப் பிதற்றிக்கொண்டே திரிந்து இப் பாப உடலைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கி விடவேண்டும். இதுவே எனது கடைசி முடிவு. நாம் ஜெனித்த இதுகால பரியந்தம் நெருப்புப்போல தூய்மையான—களங்க சிந்தை யற்ற— மனத்துடன் இருந்துவிட்டு இனி கெட்டுவிடுவதற்கு இருமனமும் இடந்தராது. ஆகையால் என் முடிவு இதுதான், இதுதான், இதுதான்! ஆகா! இம் மாய உலகில் ஜெனித்து நான் பட்ட துன்பம் ஒன்றா, இரண்டா! அடாடா! நினைத்தால் என்னெஞ்சம் பகீர் என்கிறதே! நான் எனது காதலியுடன் களித்திருக்கப் போவதாக ஆதியில் கனவு கண்டதெல்லாம் இறுதியில் கானகத்தில் கொடிய மிருகத்திற்கு இரையாகப் போவதற்கே யாயிற்று. மகா பாவி இவனை பக்ஷிக்கலாகாதென்று என்னை மிருகமும் விலக்கிவிடுமோ! ஆ! அவ்விதம் நேரிட்டாலும் நேரிடலாம். என்வினை என்னை ஆட்டத் துணிந்ததில் இதுவும் ஒன்றாகும். எந்தெந்த விதமான கோலத்திற்கும் ஆளாகத் தயாராக இருக்கையில் இனி பயம் எது? என் ஜெயமணி! நீ உன் பர்த்தாவின் தேக நிலையைப் பற்றி கேட்கும் போது உனக்கு நான் அவருடைய ஆபத்தான நிலைமையை எவ்விதம் கூறுவேன்? என் மனத்தே வருந்துகின்றேனே! அவருடைய ஆயுள் இன்னும் இரண்டு நாட்களுக்கு இவ் வுலகில் தங்குவதும் சந்தேகமாக வன்றோ இருக்கின்றது. உம்........ எந்த விசனத்தைக் குறித்து வருந்துவது. எதை எண்ணி வருந்தினால் தீரும்? இனி தீருவதேது, ஆறுவதேது?....ஈசா! நீ என்னை எத்தனை விதத்தில் வருத்தி என்னைச் சோதிக்க வேண்டுமோ அத்தனையும் செய்து விட்டாய். என் பாப வினையால் என்னுடைய பழவினையின் பாச பந்தம் என்னை இறுக்கிப் பிடிக்கின்றதே யன்றி உனது நாமத்யானத்தை இடைவிடாது செய்யும் பக்குவம் பெறவில்லையே! இனியாவது அந்த விதத்தில் சிறிது அருள் பாலித்து சந்ததமும் உந்தன் நாமத்தை அந்தமுடன் ஓதி சந்துஷ்டி யடையும்படிக்குச் செய்யலாகாதா! இனிமேல் என்னைச் சோதிக்கவேண்டியது பாக்கி யொன்று மில்லை யல்லவா! இனி சோதியாதே! சோதியாதே! பரதேசி என்னைப் பரிசோதியாதே! பித்தன் என்னைச் சோதியாதே! கைவிடாதே! நான் செய்த குற்றங்கள் குன்றெனத் தகும்.

அவைகளை க்ஷமித்துக் குணமாகக் கொண்டு என்னை ஆதரிக்கத் தருணமிதுவே அபயம் தந்தாள்வாய் நடனத்தரசே!

சகானு ராகம்.

அப்பாநான் பற்பலகா லறைவதேன்னே அடியேன்
அச்சமெலாந் துன்பமெலா மறுத்து விரைந் துவந்தே
யிப்பா ரிலிதுதருண மென்னையடைந்தருளி
எண்ணமெலா முடித்தென்னை யேன்றுகொளா யேனிலோ
தப்பாமலுயிர்விடுவேன் சத்தியஞ்சத் தியநின்
தாளிணைக ளறிகவிது தயவுடையோயேவாக்குந்,
துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணையே
சுத்தசிவானந்த வருட் சோதிநடத் தரசே
—திருவருட்பா.

என்னப்பனே! பாழுலகமாயையில் மனத்தை விட்டு உன்னினை வற்ற உதவாக் கட்டையானேன். மனத்தில் நின்னினைவு ஒரு சார்பு இருப்பினும் அதனையே முதன்மையாகக் கொண்டு உன்னடி தொழுதேற்றும் திறனறியாது உழன்றேன். இப்பாவி பிறப்பில் எனக்களித்ததெல்லாம் துன்பமே யன்றி இன்பம் இன்னதென் றறியும் வண்ணம் நீ எனக்கருளவில்லை. அங்ஙன மிருப்பதால் அறியாமைக் கடலில் துளைந்து உன்னை நிந்தித்து உனக்கும் உனதடி யார்க்கும் பெரிய அபராதியாகிவிட்டேன். பட்டதெல்லாம் துன்பம், தொட்டதெல்லாம் துயரம். இட்டமுடன் எண்ணிய தெல்லாம் இருளாகிவிட்டது. கட்டப்பட்டுக் காலத்தைக் கடத்தும் தொழிலை வகித்தும் உனது மட்டற்ற மாட்சியை திட்டமாயறியாது கெட்டேன். இனி பற்றுவிட்டேன். உன் பாதம் தொட்டேன். பக்தி விதை மனத்தில் நட்டேன். உன் சரணமே தஞ்சமென்று இரு கையையும் விட்டேன்; இவ் வுறுதியைத் தட்டேன். இனி மேல் ஒருக் கணமும்

நாத நாமக்ரியை ராகம்

உன்னைமறக் கிடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை யிதுநீ,

என்னை மறந்திடுவோயோ மறந்திடு வாயெனில் யான்
என்னசெய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே னெந்தாய்,
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தாயெனினு
அகில மெலாமளித்திடுநின் னருள்மறவா தென்றே,
இன்னுமிகக்களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இது தருணமருட்சோதியெனக்குவிரைந் தருளே.

—திருவருட்பா.

"சிவாய நமா வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மில்லை." என்ற படிக்கு இனிமேலாவது அபாய மில்லாமலும், மனக் கிலேச மில்லாமலும் இருக்கும்படியான அருள் செய்வாய் என்னப்பனே! இதுகால பரியந்தம் என்னுடைய பாழ்ப் பிறவியில் நான் என் மனக் கவலையை யன்றி வேறு ஒருவிதமான நலனையும் அறியேன். முத்தி பெறும் மார்க்கத்தை சித்தத்திலறியாப் பித்தனுனேன். ஏற்றித் தொழுதிடும் ஆற்றலைப் பெற்றிலேன். என்னப்பனே! உன்னைத் தேடி,

கமால் ராகம்

பணிந்தறியே னன்புடனே பாதேவு மறியேன்
படித்தறியேன் கேட்டறியேன் பத்தியிற்பூ மாலை
அணிந்தறியேன் மனமுருகக் கண்களினீர் பெருக
அழுதறியேன் தொழுதறியேன் அகங்காரஞ் சிறிதுந்
தணிந்தறியேன் தயவறியேன் சத்தியவா சகமுந்
தானறியே னுழுந்தடித்த தடியது போலிருந்தேன்
துணிந்தெனக்குக் கருணைசெய்த துரையேயென் னுளத்தே
சத்தநடம்புரிகின்ற சித்தசிகா மணியே

—திருவருட்பா.

என் மந்தமதி இதுபரியந்தம் அந்தகாரமாக விருந்ததெல்லாம் நீங்கவும், இனி உன்மீது பக்தி பிறக்கவும் உன் பதத்தை நாடிப் பாடி ஆடி இரு கரங் குவித்துத் தோத்திரம் செய்து உலகப் பற்றை அறவே யொழித்து, மாயா விலாசத்தில் மயங்கா தொழிந்து முத்தி நெறி அறிந்து, சித்த மிகத்தெளிந்து, கதி யளிக்கும் கர்த்தன் நீ

என உணர்ந்து, அநவரதமும் அநன்ய பாவமாய் உன்னுமாவையே உச்சரித்து மெய்ம் மறந்து ஆநந்தப் பரிதனுய் உன்மீதே நினைவு கொண்டு, உன்னையே உள்ளத் தெண்ணி, உன் பணியே செய்து உன்னடியே தொழுது, உன் சரிதையே கேட்டு, உன் மகிமையை அறிந்து உய்யும் பேறு பெறுவது என்னுளோ! ஆசைக் கடலை விட்டகன்று நின்தாளாகிய கரை சேருவதென்னுளோ! மாயா விலாசத்தின் மயக் கொழிவதென்னுளோ!

ஆங்காரமென்னும மதயானை வாயிற் கரும்பா
யேங்காமலெந்தையருளெய்து நாளெந்நாளோ
சித்தமெனும் பௌவத்திரைக் கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலையாதருளினிற்கு நாளெந்நாளோ

—தாயுமானவர்

கருணுகரா! சஞ்சலோசனு! இனி என்னை மண்ணில் பிறக்கும்படியாகச் செய்யாதே! பிறக்கும் வரமருளின் என் கண்மணியையே மணக்கும் வரமருள்வாய். கண்ணு! கார்முகில்வண்ணு! சங்கரா! சம்போ! மகாதேவா!

அரசே யுன்னை யணைக்க வெனக்குள் ளாசை பொங்குதே,
அணைப்போமென்னு முண்மையா லென்னுவி தங்குதே,
விரைசேர் பாதம் பிடிக்க வென்கை விரைந்து நீளுதே,
மேவிப் பிடித்துக் கோள்ளுந் தோறு முவகை யாளுதே.

—திருவருட்பா.

இம்மனக்குரங்கை ஓர் வழியில் நிலைக்கச் செய்வாய். என்னப்பனே! பரமபுருஷா! என்னுல் கூடியமட்டில் உன்மீதே இனி என் மனத்தை நிலைக்கச் செய்யவேண்டுமென்று நான் முயற்சித்து வருகையில் இடையிடையே என்னையறியாதவிதமாக என் கண்மணியின் உருவமல்லவா கண்ணெதிரில் திடீரென்று வந்து நிற்கின்றது. அவ்வாறு வந்து நிற்கும் காலையில் என்னையறியாதவிதமான மாறுதல்களுக்கு நான் அடிமையாகி மீண்டும் பழயமாதிரியான கோர நிலைமைக்குள்ளாகிவிடுகின்றேனே! இதென்ன மாயம்! இதென்ன விந்தை!............ ஆகா! ஏ மதிமன்னு! இந்த பரந்த உலகில் நீ ஏகாதிபத்யமாகத் தனியரசு செய்துகொண்டு சிறிதும் கவலை இன்றிச் சந்தோடமாகச்

செல்கின்றாயே! உன் முன்னால் கேவலம் பித்தன்போல நான் புலம்புவதைக்கண்டு நீ ஏளனமாக எண்ணி நகைபுரிகின்றாயா? ஆகா! அவ்வாறு நீ நகைபுரிந்திட்டாலும் நான் உன்னை வெறுக்கவோ, கோபிக்கவோ மாட்டேன். ஏனெனில் என் ஜெயமணியின் திருமுகத்தின் சாயலைப்போலவே உன்னுருவம் காணப்படுவதால் உன் மீதும் நான் ஓர் மதிப்பை வைத்து ஆசிக்கின்றேன். என் கண்மணியின் சாந்த குணம்போல உனது சாந்தமான—குளிர்ந்த—கிரணம் அமைந்துள்ளது. அவ்வனிதையின் இனிமையான பார்வையின் சிலுசிலுப்புப் போன்ற உன்னுடைய தோற்றமும் குளிர்ச்சியாகவிருக்கின்றது. அவளுடைய ஆத்மாவும் மனமும் சுத்தமாயும் தூய்மையாயும் இருப்பதுபோல உனது ஜோதியும் துல்லியமாயும், ஜாஜ்வல்யமாயுமிருக்கின்றது. அவளுடைய கீர்த்தி நாடெங்கும் ஜொலிப்பதுபோல உன்னுடைய ப்ரகாசம் உலகெங்கும் ஜொலிக்கின்றது. அவளைக் கண்ட சிறு குழந்தைமுதல் பெரிய விருத்தர் வரையில் மதிப்பும் காருண்யமும் கொண்டு அன்பு பாராட்டுவதுபோல உன்னைக் கண்ட சகல ஜீவராசிகளும் ஆநந்தமடைகின்றன. அவளுக்குத்துரோகம் செய்ய நினைப்போரும் அவளுடைய நற்குணத்திற்கு அடிமையாகி விடுவதுபோல களவு, கொலை, முதலியன புரியும் துஷ்டர்களும் உன்னைக் கண்டு அஞ்சி விலகிக்கொள்கிறார்கள். உன்னிடத்திலாவது உன்னுருவம் சில நாளைக்குத் தேய்ந்துவிடும் ஒரு குறை இருக்கின்றது. அந்த கட்டழகியினிடத்தில் அந்த குற்றமும் இல்லை; ஆயினும் உன்னை நான் வெறுக்கமாட்டேன், நீ நன்றாகப் பரிகஸிக்கலாம்........ஹா!........என்ன இது. இதுபரியந்தம் ஈச்வரத்யானம் செய்து தொழுததென்ன, இப்போது மனம் மாறுபட்டலைவதென்ன! சீச்சீ! பேய்மனமே! பித்துகொண்ட மனமே! துஷ்ட மனமே! என்னை வதை செய்யாதே! இனி நானுனக்கு அடிமையல்ல..................ஜெயமணி! ஜெயமணி! உன்னை மறப்பதா! உலகிலிருப்பதா! ஆகா! இதென்ன ஆச்சரியம்!"....என்று வாய்விட்டுக் கதறியவாறு துக்கிக்கின்றான்.

இவனுடைய சகலமான உரைகளையும் மறைந்து கேட்டுக்கொண்டிருக்கும் நமது வனிதாரத்தினத்தின் சித்தம் எத்தகைய நிலைமையில்

தத்தளித்திருக்கும் என்பதை நாம் கூறவேண்டுமா? இந்த வார்த்தைகளாகிய அக்னியினுல் அவள் தகிக்கப்பட்டுப் பாதி உயிரையும் பறிகொடுத்துவிட்டாள். தன்னுயகனின் முடிவு தெரிந்துவிட்ட செய்தியைக் கேட்டதும் அவளுடைய உயிரில் பெரும்பாகமும் விலகிவிட்டதென்றே கூறலாம். அதற்கு மேலும் தான் அங்கில்லாதுபோய்விட எண்ணினுள். எனினும் சாருகாஸனின் வார்த்தையைக் கேட்காதுபோக மனம் வரவில்லை. அவன் இன்னும் என்ன சொல்கிருன் பார்ப்போம் என்ற ஓர் ஆவலுடன் புலம்பியவாறு நின்றுகொண்டே சகலமான விஷயங்களையும் அறிந்துகொண்டாள். அவனுடைய உன்னதமான குணத்தைக்கண்டு அபாரமாக வியந்தாள். அவனது சித்த சுத்தி அவளைப் பரவசமுறச் செய்தது. அவனுடைய விலையிலாத காதலின் தன்மையை நோக்கி அலகிலாத ஆச்சரியமடைந்தாள். "ஆ! என்னப்பனே சாருகாஸா! உன் கதி இவ்விதம் முடிந்ததா!" என்று எண்ணியவாறு சற்று அங்கு நின்ருள். அப்போது சாருகாஸன் ஏதும் பேசாது மவுனமாகக் கண் மூடியவாறு படுத்திருந்தான். இந்தக் காட்சியைக் கண்ட ஜெயமணி அவன் எதிரில் சென்று "சாருகாஸா!" என்று கூவியழைத்துத் தன் துக்கம் தீரக் கதறிவிடலாகுமா! என்று நினைத்தாள். உடனே மனத்தை தைரியமுறச்செய்துகொண்டு, "ஆகா! சாருகாஸா! மகா பாவியாகிய என்னைக் காதலித்ததின் பயனல்லவா உன் கதி இவ்விதம் அதோகதியாகிவிட்டது. உம். இனிமேல் எதை எண்ணியும் பயனில்லை. வீணுக நாம் அவன் முன் சென்று இன்னும் வருத்தத்தையுண்டாக்கலாகாது." என்று தீர்மானித்தவண்ணம் அவனை இமைகொட்டாமல் சில நிமிஷங்கள் பார்த்துவிட்டு கண்ணில் நீர் சொரிய, சடக்கென்று அவ்விடம் விட்டு வேறுபக்கம் சென்ருள்.

சாருகாஸன் உட்கார்ந்திருந்த இடத்திற்கும் அவ்விடத்திற்கும் சிறிதும் சம்மந்தமேயில்லை. அவ்விடத்தில் சோமநாதன் தலைமீது கை வைத்துக் கொண்டு பார்ப்பதற்குப் பரிதாபகரமாக உட்கார்ந்து புலம்பிக்கொண் டிருக்கக் கண்டாள். அந்த கண்ராவியைக் கண்டு வருந்தியவாறு சில நிமிஷங்கள் அங்கு நின்று பார்த்தாள். "ஆ! ஜெயமணி! உன் கதி அதோகதி

பாகிவிட்டதே! உனது காதனும் உன்னை மோசம் செய்ய எண்ணிவிட்டாரே! என்ன செய்வது?" என்ற வார்த்தைகளை இடை இடையே சற்று உரத்துக் கூறுவதும், கண்ணீர் பெருக்கு வதுமாக வீற்றிருப்பதைக் கண்டாள். அவள் மனந்துடித்ததற்கு எல்லையே இல்லை, "உம். இந்த சங்கடமும் பாக்கி இருந்ததா! ஐயோ! பாவி நான் என்ன பிறவி பிறந்தேன்!" என்று எண்ணிய வாறு துயரத்துடன் அவ்விடத்தைவிட்டு மற்றொரு பக்கம் சென் றாள். அங்கு பத்மலோசனு தேம்பித்தேம்பிப் புலம்பிக்கொண்டே குப்புறப்படுத்திருப்பதைப் பார்த்தாள். "ஆகா! என்னென்ன கோர சம்பவங்கள் நிகழ்கின்றன! இவ்வளவு சங்கடத்திற்கும் பாவி நானல்லவா காரணம்! என் ஒரு உயிருக்காக எத்தனை மனிதர்கள் இவ்விதம் வருந்தித் தவிக்க நேர்ந்துவிட்டது. சிச்சி! பாவி யான் ஏன் பிறந்தேன்?" என்று தனக்குள் எண்ணியவாறு ஆஸ்பத்திரி யில் நோயாளிகள் படுத்திருக்கும் (வார்டு) பக்கமாக வெளிப்புறம் ஜன்னலண்டையில் பார்த்துக்கொண்டே வந்தாள். அங்கு சில நோயாளிகளும் ஆஸ்பத்ரிப் பணியாளர்களும் ஒன்றுகக்கூடி "அந்த எஜமானியம்மாளாகிய ஜெயமணி என்ன அழகு! என்ன அழகு! அந்தம்மாளை எவ்விதமாயினும் வசம் செய்துவிடவேண்டும்" என்று அதுவிஷயமாகவே பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டாள். அதை யும் செவியில் வாங்கிக்கொண்டு "ஆகா! இதுவும் தலைவிதியா! என் கர்மா இவ்விதமும் வ்யாபித்துவிட்டதா!" என்று எண்ணி வெறுப் புற்று அவ்விடம் விட்டு ஸ்திரீகளின் (வார்டு) பக்கம் சென்றாள். அங்கு ஆஸ்பத்ரியின் நரசும் ஒரு நோயாளி ஸ்திரீயும் பின்வருமாறு பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

நரசு.—அம்மா! நீ இன்னும் ஒரு மாதம் சென்றால்தான் நன் ருக எழுந்து நடக்கலாம். இவ்விடத்திலிருந்து பத்து தினஞ் சென்றபின்னர்தான் செல்லவேண்டும். ஏன் அவசரப்படுகிறாய்?

நோயாளி—அம்மா! நான் உண்மையைக் கூறிவிடுகிறேன்; கேளுங்கள். எனது நோயின் நிமித்தம் என்னை இங்கு கொணர்ந்து விட்ட என் கணவனாரின் கருத்தே வேறு. அதாவது, அவர் இந்த ஆஸ்பத்ரியில் முன்பு ஒருமுறை தனது வைத்தியத்திற்காக வந்

திருந்த காலையில் மகா உத்தமியாயும் குணபூஷணியாயும் விளங்கும் ஜெயமணியம்மாள்மீது துர் எண்ணங்கொண்டு அவர்களை அடைய எண்ணினாராம். அந்த எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு என்னுடைய நோயை அதற்கு அனுகூலமாக்கிக்கொண்டு என்னை இங்கு கொணர்ந்து விட்டுவிட்டார். இந்த கபடத்தை நான் நேற்று வரையில் அறியமாட்டேன். நேற்று எங்களுக்குள் நடந்த சம்பாஷணையிலிருந்து அன்னவர் கருத்தை அறிந்தேன். நான் இங்கு இன்னும் தங்குவேனாயின் துர்க்குணமுடைய என் பர்த்தாவினால் அந்தம்மாளுக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ என்கிற எண்ணத்தினால் நான் நாளையே வீட்டிற்குச் செல்லத் தீர்மானித்துவிட்டேன். அந்தம்மாளின் நலனைக் கோரி நான் செல்வதே உசிதம். ஆகையால் என்னை அனுப்பிவிடக்கூடிய ஏற்பாடு நீங்களே செய்யவேண்டும். அதை உங்களிடம் தெரிவித்தேன்." என்றாள்.

இந்த கர்ண கொடூரமான மொழியைக் கேட்டுக்கொண்டு தாங்கமாட்டாத துக்கத்தை யடைந்து, கண்ணீர் பெருக்கியவாறு ஜெயமணி அவ்விடத்தை விட்டு நேரே தன்னாயகன் படுத்திருக்கும் இடத்திற்கு வந்தாள். அப்போது கங்காதரரின் அருகில் வாடிய முகத்துடன் கண்ணீர் பெருக்கியவாறு சாருகாஸன் வீற்றிருக்கக் கண்டாள். கங்காதரனின் நிலைமை கவலைக் கிடமாகிவிட்டதென்பதை நன்கறிந்து விட்டாள். ஆகையால் அவ்விடத்திலும் அதிக நேரம் தங்காது தன்னுடைய விடுதிக்கு வந்தாள். தனது மஞ்சத்தில் தடாலென்று விழுந்தாள். தான் சாருகாசனிருந்த இடத்திற்குச் சென்றது முதல் அங்கு வந்து சேரும் வரையில் நடந்த சம்பவங்கள் முற்றும் அப்படியே அகக் கண்ணில் தோன்றி தாண்டவமாடத் தொடங்கின.

அவ்வாறு உண்டான தோற்றத்தினால் அவளுடைய துக்கம் தங்கு தடையின்றி பொங்கி வந்துவிட்டது. அங்கம் குலுங்கப் புலம்ப வாரம்பித்துவிட்டாள். "ஆ! சர்வலோக சரண்யா! தீர்ந்தது; என் முடிவு தீர்ந்தது; யாவும் ஒழிந்தன. இனிமேல் யான் எதற்கு இப்புவியில் உயிர் தரித்திருக்கவேண்டும்? ஐயோ! பாவி ஜென்மம்

என் போன்று எவரேனும் எடுத்திருப்பார்களா! பலவிதத்திலும் இடுக்கண்களும், துன்பங்களும் வந்து சூழும் மூலப் பொருளாகவா நான் ஜெனித்தேன். பாவி என் பொருட்டல்லவா சாருகாஸனின் கதி அதோ கதி யாயிற்று. பத்மலோசனுவின் கதியும் அதோகதியாகிவிட்டது. சகல விதத்திலும் சந்தோஷமாக இருக்கக்கூடிய சோமநாதனின் கதி சதா வருந்தும்படியாயிற்று. இவை எல்லாம் போதாவென்று ஆஸ்பத்ரியில் வரும் நோயாளிகள் கூடவா என்னைக் கண்டு இச்சிக்கவேண்டும்! என்ன அநியாயம்! அவ் வார்த்தைகள் என்ன பயங்கரமாக இருக்கின்றன. என்னுடைய கணவர் வயோதிகராயினும் அன்னவரின் பாதுகாப்பில், மதிப்பில் இருக்கையிலேயே என்மீது இத்தகைய நோக்கங்களிருக்கையில் அவர் காலத்திற்குப் பிறகு நாம் எவ்விதம் அபாயமின்றி வாழக்கூடும்? அதோடு இதுபரியந்தம் விருத்தராயினும் என் பர்த்தாவின் பொருட்டாக உயிர் தரித்து இவ் வூனைச் சுமந்தேன். இனி நான் யாருடைய போஷணைக்காக உயிர் வாழவேண்டும்? ஐயோ! கைம்பெண் என்கிற பட்டம் பெற்று இவ்வுலகில் நான் வாழுவேன்? சீச்சீ! இனி உயிர் தரியேன்; உயிர் தரியேன். சாருகாஸனின் ஒவ்வொரு வார்த்தையும் என் மனத்தைத் துளைக்கின்றது. கண் காணாத தேசத்தில் கலங்கிக்கொண்டிருந்தவனை நாமாக வலுவிலழைத்து தீராத மனச் சோர்வையும், சங்கடத்தையும் உண்டுபண்ணிவிட்டோம். நான் படும் துன்பத்தையும் பெருக்கிக்கொண்டேன். பாவி என் பிறப்பால் பலருக்கும் துன்பமும் சங்கடமுமே யன்றி யாருக்கேனும் ஒரு சிறு மகிழ்ச்சியுண்டா! இல்லை; இல்லை. சண்டாளி நான் ஜீவகோடிகளை வதைக்கும் பொருட்டாகவே உலகில் ஜெனித்தேன். ஜெனித்த காரியம் இம்மட்டும் ஒருவாறு முடிவு பெற்றது. இனிமேல் இவ்வுலகத்திலிருந்து விடுதலை படையும் வழியைத் தேடவேண்டும்! மகா சாதுக்களாக இருக்கும் மனிதர்களுக்கும் என்னுடைய பாழ் வினையினுல் என் மீது தீய எண்ணம் உண்டாகின்றதே யன்றி அவர்கள் மீது குற்றமில்லை. ஆ! என் புருடர் இன்னும் இரண்டொரு நாட்கள் தானு இப் புவியிலிருப்பார்! அவர் காலமும் ஆய்விட்டதா! ஐயையோ! இனி எனக்கிவ்வுலகில் யாது காரியம் இருக்கின்றது.

ஒன்றுமில்லை; என்றுமில்லை. நாசமாய்ப் போன பகையின் மூல மாயும், பணத்திற் கடிமையாயும் என்னை ஓர் கிழவருக்குத் தொலைத் தார்கள். அக்கிழவரே உலகை விட்டுச் செல்கையில் அவருக்கு அடிமையாக்கிய நான் ஏன் இனி மனிதர் முன் உலாவ வேண்டும்! வேண்டாம், வேண்டாம்! தக்ஷணமே எமனிடத்தில் சென்று அவனுக் கடிமையாகி என் பிறவியைத் தொலைக்கின்றேன். என் கவலையினின்று விடுபடுகின்றேன். இவ்வநியாய உலகத்தி னின்றும் விடுதலை யடைகின்றேன். ஏ பூமிதேவி! என் தாயே! மகா கொடிய பாவியாகிய என்னை இது பரியந்தம் தாங்கிச் சுமந்த தற்காக நான் உனக்கு என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின் றேன். என் வந்தனத்தையேனும் ஏற்றருள்க" என்று கூறிய படியே தடாரென்று கீழே இறங்கி மூன்று தரம் சுற்றி வலம் வந்து பாதாதிகேசம் வரையில் படியும்படியாக சாஷ்டாங்கமாகப் பூமியில் விழுந்து "என் தாயே! லோகமாதா! பூமாதேவி! என்னைச் சுமந்த அன்னாய்! என் கண்ணீரைத் தாங்கிய தேவி! என்னை இக் கதிக்கு ஆளாக்கிய கொடிய பாதகர்களைத் தாங்கிய, தாங்கும் அன்னையே! எனது குற்றங்களை எல்லாம் பொறுத்து என்னை இவ் வுலகிலிருந்து விலக்கிவிடுவாய் என்னம்மணீ! பணப் பேராசைப் பிடித்த பேய்களா! பெற்றோரென்ற பெயர் தாங்கிய பிரம ராக்ஷஸர்களா! பாழும் பணத்திற்கு ஆசைகொண்டு அடிமையாகி செய்த காரியத்தின் முடிவு இதுதான் என்பதை எனது முடிவினாலாவது தெரிந்துகொள்வீர்களா! இனியும் இத்தகைய கொடுமைகளையே உலகில் நடத்தத் துணிவீர்களா?

பெண்களைப் பெற்ற பெற்றோர்களே! எத்தனையோ வித கஷ்டங்களுக்கு இலக்காகி அரும் பாடுபட்டுப் பெற்ற உங்கள் பெண் மணிகளை, கண்மணிகளை அநியாயமாய் மூன்றாந் தாரமாயும், நான் காம் தாரமாயும் மடித்து ;என் பெற்றோர்களைப் போல உயிருடன் வதைக்க முன் வராதீர்கள். "மக்களுக்கு சத்ரு மாதா பிதா!" என் பதை நிலைநாட்டாதீர்கள். கிழங்களாகிய கிணற்றில் கிளிகளைத் தள்ளத் துணியாதீர்கள். காதலின் உணர்ச்சிகளை மக்கள் அறிந்த பிறகு இத்தகைய கொடிய மணத்தைச் செய்து உங்கள் மக்களைப்

பிணமாகக் கண்டு கலங்காதீர்கள். இதற்கு எனது சரிதையை உன்னிப் பாருங்கள். ஐயோ, அநியாய உலகமே! அக்ரம ஜனங்களே! மணம் என்பது பணத்தின் பேரால் நடக்கின்றதே யன்றி காதல், அன்பு முதலிய அரிய பொருள்களின் பேரால் நடக்கவில்லையே! பாழும் பணத்தின் மூலம் எங்களைப் பரிபவம் செய்து விட்ட நீங்கள்தாம் அடைந்த சுகம் என்னே! வயிறெரிந்து தவிப்பதைத் தவிர வேறு விதி யுண்டா! ஒரு மகனுக்குப் பெற்றோராயும் நிறைந்த செல்வத்திற்கு அதிபதியாயு மிருக்கும் சாருகாஸனின் பெற்றோர் என்ன வாரிக்கொண்டார்கள். உயிருடன் மகனை இழந்த துக்கந்தான் சம்பவித்தது. மக்களின் சுகமான வாழ்க்கையைக் கண்டல்லவா பெற்றோர் மனமகிழவேண்டும். இவ்விதம் பாழ்ப்படுத்திவிட்டதால் என்ன நன்மையை அடைந்தார்கள்! ஐயோ! என்னுடைய இவ்விளம் பிராயத்தில் என்னைப் பறிகொடுத்துவிட்டுத் தாம் செய்துவிட்டக் கொடுமைகளை எண்ணித் துக்கித் துருகப்போகின்றார்களே அதுதான் பணப் பேராசையின் பலன்' என்று கூறிக் கண்ணிர் விட்ட வண்ணம் சடக்கென்று எழுந்தாள்; தன் பெட்டியைத் திறந்தாள். "என்னை ஈன்ற தாயே! என்னால் நீ அடைய விருந்த ஆநந்தமாவது ஆளை மயக்கும் பணமே யாகும். இதோ இப் பையிலுள்ள உன் பணத்தையும் எனது பூஷணத்தையும் வாரி கை நிரம்ப வைத்துக்கொண்டு மகளால் அடையப்போகும் சுகத்தை அனுபவிப்பாய். இதுதான் உனக்கு நான் கூறவேண்டிய மொழி—ஜெயமணி'; என்று ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி அதை ஒரு பையில் ஆபரணங்கள், பணம் முதலியவற்றுடன் வைத்தாள்.

அப் பெட்டியில் வைத்திருந்த ஓர் சிறிய பாட்டிலை எடுத்தாள். அதைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். அதற்கே தனது அமுதம் நிறைந்த முத்தங்களை இட்டாள். கண்ணீரால் அப் பாட்டிலை நீராட்டினாள். ஏ, நஞ்சே! எனக்கு அஞ்சேலென்று அபயங் கொடுக்கும் துணை நீ தான். என்னுடைய சுகத்தையும் துக்கத்தையும் கவனித்து உதவி புரியும் தாய் நீதான். ஆஹா! நான் பிறந்த பிறவி என்ன! வளர்ந்த பெருமை என்ன! நான் மான வீகமான கோட்டையில் மன மகிழ்ந்த மகிழ்ச்சி என்ன! பிறகு

என்னுடைய உயிரை மாய்ப்பதற்கு ஒப்பாக என்னை ஓர் கிழவருக்குத் தள்ளி வருத்தியதென்ன! நான் அதுமுதல் இது பரியந்தம் பட்ட துன்பமென்ன! இப்போது உன் மூலம் சகலமான துக்கமும் நீங்கப் பெற்று சுகமடையப் போகும் விசித்திரமென்ன! அடாடா! இவைகளை நினைத்தாலும் மனம் நிலை இடங்கொள்ளவில்லையே!

பாவி என் மனத்தில் சாருகாஸனே எனக்குத் துணைவன் என்று எனது விவாக காலத்திற்கு முன்னுல் நினைத்தேனே! "உனது நெஞ்சில் அந்த எண்ணம் எதற்கு? உனக்குத் துணை நஞ்சுதான்" என்ற ஆக்கினையை அஞ்சாமல் அந்தக் கடவுள் விதித்துவிட்டாரே! ஹா, விஷமே! உன்னையே நான் எனது விவாககாலம் முதல் நம்பியிருக்கின்றேன். மகா பாவி இவள் என்று நீ உனது வீரத்தைக் காட்டாது என்னைக் கைவிட்டுவிடுவாயோ! அவ்விதம் செய்தால் அக்னி பகவானுக்கு இரையாவது திண்ணம். நீயும் என்னைச் சோதியாதே! எனது பரிதாபத்தைக் கண்டு நீயேனும் இறங்கி எனக்குதவி செய்து இவ்வுலகத்தினின்று என்னை ஈடேறச் செய்குவாய்.

பெற்ற தாய்தந்தையர்களும் சத்ருவானுர்கள். உற்ற உறவினர்களும் விலகி நின்ருர்கள். வேண்டித் தொழும் கடவுளும் தாண்டிச்சென்ருர். அதற்குமேல் பேதையான் யாது செய்வேன்? கடவுளை நோக்கிப் பலகாலும் துதித்தேன்; தொழுதேன்; புலம்பினேன். ஒன்றுக்கும் பலன் கிடைக்காதொழிந்தகாலை இந்த விஷமேனும் என்னைக் காப்பாற்ற அன்று முதல் துணைபுரிவதுதான் என் பிறவியில் நான் கண்ட பலன்போலும். ஹா! சாருகாஸா! இத்தனைநேரம் நீ புலம்பிய விஷயங்களையே நானும் கூறக்கூடிய நிலைமையிலிருப்பதால் நான் என்னதான் சொல்லுவேன்? என்னுல் நான் துன்பப்படுவது போதாதென்று இன்னும் எத்தனை பெயர்கள் உயிர் வதைகின்ருர்கள். இதை நினைக்க என்னுடைய இருதயம் பிளக்கின்றது. உம். இனிமேல் கவலையே வேண்டாம். யாவும் தீர்ந்தது.

ஒளியே யொளியி னுணர்வே யுணர்வினுவகை போங்கும்
களியே களிக்குங் கருத்தே கருத்தைக் கவளங்கொண்ட

வெளியே வெளியின் விளை சுகமே சுகர் வீறு கண்டே
தெளியேன் தெளிந்தவரைப் போற்றிடே னென்ன செய்குவேனே.

—தாயுமானவர்.

அன்பருக்கன்பனே! ஆதிமூலப்பொருளே! என் பாழ்ப் பிறவியில் என்னால் ஒரு எறும்புக்கேனும் துரும்புக்கேனும் ஒரு சிறிய உதவியுண்டா! நன்மையேனும் உண்டா! அந்தோ! அலகிலாத புண்ணிய கருமங்களில் அணுவளவும் அறியாத கேவலம் ஓர் உபயோகமற்ற கட்டையாகிப் பிறந்துவிட்டேனே! என்னுடைய சொல்ப காலத்தில் நான் கண்டதெல்லாம் துன்பமேயன்றி இன்பம் கண்டறியேன். இயன்றவளவு பிறர்க்கு உதவியும் செய்தறியேனே! ஆகா! இத்தகைய சண்டாளப் பிறவி என் பிறந்தேன்? நான் இம்மானிட ஜென்மமெடுத்து மனந்தாங்கக்கூடாத துயரத்தைத் தாங்கி வதைப்பட்டு இறுதியில் அநியாயமாக உயிர் நீக்கப்போவதைவிட, கேவலமாக மதிக்கக்கூடிய

சகாரு

மண்ணாய்ப் பிறந்தாலும் மாதவனின்னடியார்
    மிதித்திடும் மாண்பெய்துமே!
வளமைதரு பயிர்களும் கனியுதவு தருக்களும்
    மலர்ச்செடியும் வளர்ந்தோங்குமே!

கானடா

வண்ணானின்பொதி சுமக்கும் வாலேயமாயினும்
    மக்களுக்குதவியாமே!
வாஞ்சையுடன் காவல்செயும் ஞமலியாய்ப்பிறப்பினும்
    வளர்த்திடும் மேன்மை பெறுமே!

காபி

தண்ணீர் பெருக்காகித் தங்காது ஓடிடில்
    சகலர்க்குமுதவியாமே!
சாலையோரந்தனில் கல்லாயிருந்திடில்
    சலித்தோரை இளைப்பாற்றுமே!

OFFICE OF THE REGISTRAR
16 MAR 1931

### மத்யமாவதி

எண்ணாத நன்மையில் எள்ளளவும் பயனிலா
ஈனமாம் ஜென்மமுற்றேன்
கண்ணா! நீ இனியேனும் கருணைபுரிந் தேழையென்
கவலையைப் போக்குவாயே!

இவ்வுலகத்தில் உன்னால் படைக்கப்பட்ட ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு நன்மைக்கு உபயோகமாகின்றதே! பாவி என் பிறவிதானா பாழுற்றுவிடவேண்டும். ஆகா! நான் என்னுடைய இத்தகைய இளம்பிராயத்தில் அகாலமரணத்தை அடைவதற்குக் காரணங்கள் பணம், பகைமை இரண்டுமிருப்பினும் அவற்றோடு வயது முதிர்ந்து விட்ட கிழங்கள் மணம் செய்துகொள்ளும் அக்ரமமும் சேர்ந்து விட்டதல்லவா? ஐயோ! அநியாய உலகத்தில் இக்கிழவர்கள் பாலியர்களைப்போல சிறிய பாலகிகளை மணம் செய்துகொள்ளும் கொடிய வழக்கத்தைத் தடுப்பதற்கு ஒருவருடைய கண்ணிற்கும் படவில்லையா! இவ்வக்கிரமத்தைப் போக்க ஒரு புண்ணியவானும் முன்வரவில்லையா! இவ்விதமான ஈடற்ற மணத்தின் முடிவு பிணந்தான் என்பதை யாரும் அறியவில்லையா! எத்தனையோ சட்டங்களும், திட்டங்களும், சீர்திருத்தங்களும் புதிது புதிதாக ஏற்படும் இக்காலத்தில் வயதுசென்றவர்கள் இளம்பாவைகளை மணந்து மடியச்செய்வது கூடாதென்கிற சட்டத்தை நியமிப்பதற்கு இவ்வுலகில் யார் மனத்திலும் புகவில்லையா! இந்த அக்ரமம் ஒருவருக்கும் தெரியவில்லையா! ஆண்மகன் அறுபது வயதாகிவிடினும் சிறிய பெண்ணை மணப்பதும் அந்த மணமென்ற கொலையினால் அம்மணமகள் இறக்கவும் இத்தகைய கொடிய, சதியான பழக்கங்கள் எத்தனைவிடத்தில் நடந்திருக்கின்றனவோ! என்போன்ற பாவிப்பெண்கள் எத்தனை பேர் உயிர்விட்டனரோ! ஐயோ! இவ்வித அநியாயமான மணத்தினால் தற்கொலை, விபசாரம், களவு, கொலை, பொய், பித்தலாட்டம் முதலிய தீமைகள் ஏற்படுவதை இனியேனும் உலகத்து ஜனங்கள் ஆராய்ச்சி செய்துப் பார்க்கலாகாதா! வயோதிகரை மணந்துவிட்டுத் தமது மனந் தவித்து சங்கடமுற்று பாப புண்ணியத்திற்கு சிறிது அஞ்சி நீதிநெறியுடன் இருக்கும் நங்கைகள் ஆயிரத்திற்கு

ஒருத்தி கிடைப்பதரிது. தமது மனத்தை அடக்கியாளும் திறனற்று அன்னிலைமையில் துன்மார்க்க வழியில் செல்ல மனமிசையாது தமது தலைவிதி என்ற ஓர் தீர்மானத்தைக்கொண்டு தற்கொலை புரிந்து கொள்ளும் மங்கையர் எத்தனையோ! பாபபுண்ணியமென்பதை விலக்கிவிட்டுத் தமது மனம்போனவாறு கிழவரை சாக்ஷிக்கு வைத்து விட்டு துன்மார்க்கத்தில் இறங்கித் தாமும் கெட்டுத் தமது வம்சத் தார்க்கும் அபகீர்த்தியைத் தேடிக்கொண்டு அவமானத்திற்கும் ஆபத்திற்கும் ஆளாகி பாபத்தை மூட்டை கட்டிக்கொண்டு அண்ட இடமின்றி யாரும் மதிக்காது பரிகஸித்து 'சிச்சி!' என்று தூற்றும் படிக்குத் தெரிவிலலையும் பெண்கள் எத்தனைபேரோ! "சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறன் அரிது" என்று மகான்கள் எல்லாம் பாடி இருக்கையில் கேவலமானவர்கள் தமது பருவகாலத் தில் பாழாகாமல் தம்மைத்தாம் காப்பது உலக அனுபவத்தில் எத் தனை ச்ரமமானது. வாய்ப்பேச்சளவில் பேசிவிடுவது மிகவும் சுலப மேதான். அனுபவத்தில் நடத்திக்காட்டுவதல்லவோ கஷ்டம். தன்னுடைய கற்பையுங்காத்து, மனத்தையும் தீரவைராக்யத்தில் செலுத்தி தீய சிந்தை சிறிதுமின்றி மண்மீது வாழவேண்டுமென் றால் கிழவர்கள் விவாகம் செய்துகொள்ளும் கொடிய, சண்டாள பழக்கம் அறவே அழியவேண்டும். கிழவனை மணந்த நங்கை தன் இச்சைப்படிக்குச் சோரநாயகனுடன் இருக்கையில் பிறர் பார்க்க நேரிடின் உடனே அவர்களைக் கொல்லவோ, வேறுவிதமான தீங் கிழைக்கவோ சோரத்தன்மை அவர்களுக்கு ஓர் துணிகரமான தைரியத்தை அளித்துவிடுகின்றது. பின்னும், கிழவர்கள் மணம் செய்தபின் பிணமாகச் சென்றுவிட்டால் அப்பெண்களின் கதியைக் கூறவேவேண்டாம். அவர்களுடைய மனத்தை அடக்கியாள வகையின்றி சோரம் செய்யவும் அதன்மூலம் சிசுஹத்தி செய்யவும் அவர்கள் தொழிலாகிவிடுகின்றது. அத்தகையோர் பிறகு எதற் கும் உதவாப் பண்டமாகி, அநாதையாய் தெரிவிலலைந்து மடிய நேரு கின்றது. இன்னும் இதுபோன்ற அநியாயங்களும் அட்டூழியங்க ளும் அளவற்றவை உலகத்தில் வ்யாபித்துவிட்டன. இப்படிப் பட்ட அநியாயங்களுக்குக் கேள்விமுறை இல்லையா? இத்தகைய கொடுமையான—கோரமான—சம்பவங்களுக்குக் காரணம் பெரும்

பாகம் பணப்பேராசையும், கிழப்பிணங்களின் விவாகக்கொடுமையு மல்லவா! ஐயோ! இவ்வாருன கேடுகளே வேரறுக்கும் தர்ம பிரபுக்கள் இனிமேல், என் காலத்திற்குப் பிறகேனும் தலைப்படுவார்களா! இத்தகைய துர்க்கிருத்யங்களை யொழித்து அநியாயமாக சிரழிந்தும், உயிரிழந்தும் போகக்கூடிய பெண்களை அவ் வாபத்திலிருந்து காப்பாற்றுவார்களா! ஆடவர்கள் இத்தனை வயதுக்கு மேல் யௌவன வனிதைகளை மணக்கலாகா தென்ற சட்டத்தை ஏற்படுத்தி புண்ணியம் சம்பாதிக்கும் புனிதாத்மாக்கள் இனியேனும் தோன்றுவார்களா! ஈசா! உலகத்திற்கெல்லாம் சட்டம் தீர்க்கும் நியாயகர்த்தனுகிய நீ கிழவர்கள் மணம் செய்துகொள்ள வேண்டு மென்கிற இச்சை அவர்கள் மனத்திலுண்டாகாதிருக்க வரமருள்வாய் என்னப்பனே! பாவி என்னுடைய முடிவைப்போல முடிவடைந்த நங்கையர்களேயும், கெட்டழிந்துவிட்ட காரிகையர்களேயும் கண்ணுல் கண்டது கணக்கிட வியலாது. இன்னும் காணுதது எத்தனை கோடிக் கணக்கில் உள்ளதோ! இப் பாழுலகில் பெண்ணுய்ப் பிறக்கவே வேண்டாம். பிறந்தால் கிழவனுக்கு மாலேயிடவேண்டாம். மாலேயிட்டால் உயிர் தரித்து வாழ வேண்டாம். வாழ்ந்தால் ஆபத்துத் தான். ஆபத்துத்தான்.

ஐயோ! இனிமேல் நான் எவ்விதம் கதறினுலும் முட்டிக் கொண்டாலும், புரண்டழுதாலும் என் முடிவு நேர்ந்த வயிற்றெரிச்சல் மாறுமா! தீருமா! துயர் ஆறுமா! ஒன்று மில்லேயே! ஹா! என்னுடைய முடிவு இவ்விதமாகவா ஆய்விட்டது! பாழாய்ப் போன எனது மேனி தங்கத்தை நிகர்த்தாக ஏன் இவ்விதம் அமையவேண்டும்! இத்தகைய தேகத்தைத் தீய்க் கிரையாகவா செய்யப் போகிறுர்கள். அவ்வாறு எரியிட்டுப் பார்க்கும் பொருட்டல்லவா என்னே இத்தகைய பாழ்ங் கிணற்றில் தள்ளினுர்கள். உம்; பாபிஷ்டி தேகம் திகி திகி என்று நன்றுக எரியட்டும். எரியும் வேடிக்கையைக் கண்டு களிப்போர் களிக்கட்டும். துடிப்போர் துடிக்கட்டும். இனி ஏன் கால தாமதம் செய்யவேண்டும்? நமது தற்கொலையை முக்கிய காரணத்துடன் போலீலாருக்கு எழுதி வைத்து விட்டு நமது கடமையைச் செய்வோம்,'' என்று எண்ணி

எழுந்து எழுதத் தொடங்கி தன் மனம் போனவாறு இதுகாறும் கதறியதில் முக்கியமாகக் கிழவர்கள் மணப்பது பற்றிய விஷயத்தையும், இன்னும் தனக்குத் தோன்றியவற்றையும் எழுதிப் பிறகு "நான் இதுகாறும், வ்ருத்தராயினும் என் பர்த்தாவின் பாதுகாப்பில் உயிர் தரித்திருந்தேன். அன்னாருடைய மரணத்தை நான் தெரிந்துகொண்டபடியால் இனிமேல் உலகத்தில் இருந்தால் பலவித விபத்திற்கும், ஆபத்திற்கும் இலக்காக நேரும். இதுபரியந்தம் என்னுடைய துயரங்களையும் சகித்துக்கொண்டு என் கற்பைக் கடவுளுக்குப் பொதுவாகக் காத்து அன்னவர் பாதத்திற்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இனி உலகத்தில் ஜீவித்திருக்கப் பிரியமில்லாமையால் தற்கொலை புரிந்துகொள்கிறேன். இவ்வுலகில் இனியேனும் என் போன்ற சிறுமிகள் இத்தகைய துர் மரணத்தை அடையும்படியான அநியாயம் நடக்காதென்று நம்புகிறேன். ஜெயமணி"

என்ற கடிதத்தை எழுதி முடித்து, போலீஸார் விலாசத்திற்கே கவர் எழுதி அதில் கடிதத்தை வைத்து மேஜைமீது வைத்துவிட்டாள். அங்கு மாட்டப்பட்டிருந்த கடவுளின் படத்தருகில் சென்று விழுந்து நமஸ்கரித்து "என்னப்பனே! பேதையான் செய்துள்ள பாபங்களை அளவிட்டுக் கூற வியலாது. அவைகளை எல்லாம் க்ஷமித்து என்னை யாட்கொள்ளவேண்டும்.

கண்ணாநீர்மல்கி யுள்ளநெக்குருகாத
கள்ளனேனானுமோ
கைகுவித்தாடியும் பாடியும்விடாமலே
கண்பனித்தாரைக்காட்டி
யண்ணபரஞ்சோதி யப்பாவுனக்கடிமை
யானெனவுமேலெழுந்த
வன்பாகிநாடக நடித்ததோகுறைவில்லை
யகிலமுஞ்சிறிதறியுமேற்

16 MAR 1931

தண்ணருநின்னதரு ளறியாததல்லவே
சற்றேனுமுனிதிரங்கிச்

சாசுவதமுத்திநிலை யீதென்றுணர்த்தியே
சகசநிலைதந்துவேறொன்

றெண்ணுமலுள்ளபடி சுகமாயிருக்கவே
யேழையேற்கருள்செய்கண்டா

யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
எங்குநிறைகின்றபொருளே.

—தாயுமானவர்.

ஜகத்ரக்ஷகா! பக்தி யறியேன்; முக்தி யறியேன். இவ்வுலகிலுள்ள வற்றில் துன்பந் தவிர வேறென்று மறிகிலேன். தற்போது நான் தற்கொலை புரிந்துகொள்வதும் பெருத்த பாபமேயாகும். எனினும் நான் என்னுடைய காப்பாளர் இறந்தபின் இவ்வுலகில் வாழுங் கால் நேர விருக்கும் ஆபத்திற்கு ஆளாகி மாள்வதைவிட என்னையே நான் பரிசுத்தாத்மாவாகத் தற்கொலை செய்துகொள்வதே உசித மென்று தோன்றியதால் துணிந்தேன். எத்தகைய பாபத்தையும் க்ஷமித்து உன் பொன்னடி தந்தாள்வாய். என்னிறைவா!

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதிமிக்க

உருவேயென்னுறவே யென்னூனே
யூனி னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற

கருவேயென் கற்பகமே கண்ணே
கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்

அருவாயவல்வினைநோ யடையாவண்ண
மாவடுதண்டுறையுறையு மமரரேறே.

—தேவாரம்.

சர்வேசா! தீர்ந்தது. மணியும் 3 அடித்துவிட்டது. இனிமேல் வெட்டிப் பொழுதை ஏன் கடத்தவேண்டும்? ஏ, நஞ்சே! விஷமே! உன்னை யன்றோ நம்பி நான் உயிர் வாழ்ந்தேன். என் பிறவியில் நீ எனக்குதவி செய்தது போல வேறு யாரும் செய்திருக்கமாட்டார்கள். என்னுடைய கவலையை நீக்கும் கண்மணி நீ யல்லவா? என் வருத்தத்தைப் போக்கும் வைர மணி நீ யல்லவா! என் துன்ப மகற்றும் தூயமணி நீயல்லவா! என்னுள் நீ புகுந்து என்னை உன் வயமாக்கி என்னுயிரை எமனிடத்தில் ஒப்புவித்துவிடுகின்றாயா! என்னை மோசம் செய்யமாட்டாயே! என்னைக் கைவிட மாட்டாயே!" என்று பித்து பிடித்தவள் போலக் கூறிக்கொண்டே அந்த விஷம் இருக்கும் பாட்டிலை உற்றுக் கவனித்தாள். அதில் சாருகாலனுடைய பிம்பம் அப்படியே கண்ணெதிரில் தெரிவது போலான உரு வெளித் தோற்றத்தைக் கண்டு, "ஹா! சாருகாலா! நீ ஏன் இங்கு வந்தாய்? பாவி யான் இருந்தும் உன்னை வருத்தினேன். இறந்தும் வருத்தப்போகின்றேன். உன் முகம் ஏன் வாட்ட மடைந்திருக்கின்றது? எனது மரணத்தை நீயும் தெரிந்துகொண்டாயா! ஐயோ! என்னசெய்வேன்? சீசீ! இது உருவெளித் தோற்றமே! சாருகாலனல்ல. இது எனது அருந்துணையாகிய விஷம். ஏ! விஷமே! சீக்கிரம் என் வயிற்றில் சென்று மறைந்துவிடு. ஹா! என் முடிவு இவ்வளவுதானா! இதற்கா நான் பிறந்தேன், வளர்ந்தேன்! இதுபரியந்தம் பூமியிலிருந்தேன்? ஐயோ! சர்வலோக சரண்யா! இதுதான் உன் திருவுள்ளமோ? இவ்விதம் என்னைக் காண்பதுதான் உனக்குக் களிப்போ! என்னை இவ்விதம் வதைப்பதற்கே பிறப்பித்தாய் போலும். உன்னாணையின்றி எதுவும் நடைபெறாது! இதுவும் உன்னாணையே. இதோ இவ் விஷத்தையேனும் இப் பாவிக்குத் துணையாக அளித்ததற்காக சந்தோஷமுற்று உன் பாதத்திற்கு வந்தனம் செய்து இதைக் குடிக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே கடவுளை வணங்கிய க்ஷணத்திலேயே கையிலிருந்த விஷத்தை இளநீர் பருகுவது போல மடமட வென்று குடித்துவிட்டு "ஹா! ஹா! கருணாநிதே! கமல லோசனீ! தீன தயாளா! என்னப்பனே! பார்த்தஸாரதே! இனியேனும் என் துன்பம் அகலுமா! என் ஆன்மா சாந்தி பெறுமா? என் மனம்

மகிழுமா? என் பாபம் அகலுமா! என் மனப் பிணி நீங்குமா! என் பாழ்ப் பிறவி தொலையுமா! என்னப்பனே! சாருகாஸா! என் பொருட்டாக உயிர் வாழ்ந்துவரும் உன்னை அதோகதியாக்கித் தீராத துக்கத்திற்கு ஆளாக்கிவிட்டேன். நம்முடைய சந்தோஷம் என்றோ மடிந்து விடினும் இதுவரை பூபாரமாக வாழ்ந்து வந்தோம். அவ் விஷயத்திலும் கைவிட்டேன். மோசம் செய்துவிட்டேன். நான் மறு உலகம் சென்று உன்னையே மணக்கத் தவம் செய்கின்றேன்.......ஐயோ! என்னவோ சங்கடம் செய்கின்றதே! கண் பஞ்சடைகின்றதே! தேகம் முற்றும் எரிகின்றதே! ஹா! என்னை மணம் செய்த நாதா! நான் தங்கள் பாலிழைத்த குற்றங்களைப் பொறுத்து ஆதரிக்கவேண்டும். இனி இத்தகைய வயோதிக விவாகம் உலகத்தில் ஓடி ஒளியவேண்டும்.......ஐயையோ!....நாக் குழறுகின்றதே! மரணாவஸ்தை என்பது இது தானோ!....என் ப்ரிய தோழி சின்னா! நீயும் இச்சமயம் ஊரிலில்லாது சென்று விட்டாய். உன் முகமும் பார்க்காது செல்கிறேன்.......ஹா....தேவ .......கீ......பா.......லா!.......தீ.......ன.......தயா.......ளா.......என்னை .......யா.......ட்... ....கொ.......ள்.......எ.......னை...யா....ட்.....கொள் அ......ப்.......ப.......னே.......”என்று கூறியவாறு பூமியில் விழுந்து கட கட வென்று புரளுகின்றாள். மரணாவஸ்தையினால் அறிவு பிறழும் சமயமாகிவிட்டது. இதுபரியந்தம் அவள் கதறியதெல்லாம் மெல்லிய குரலால் கதறிவிட்டாள். இப்போது விஷம் அவள் உட் சென்று நன்றாக வேலை செய்து தனது பூரண வீரியத்தைக் காட்டத் தலைப்பட்டதும் தனது நிலை புரண்டவாறு அவளுடைய சுய தொனி பூராவும் வெளிக் கிளம்பிவிட்டது. ஹா!....ஹா! .......ஆய்விட்டது; என் முடிவு தீர்ந்துவிட்டது. மக்களைப் பெற்றோர்களே.....ஐயோ! பணப் பேராசை மணத்தை நடத்தாதீர்கள். காதலற்ற கடி மணத்தைச் செய்யாதீர்கள். ஈடற்ற...வயோதிகனுக்கும் சிறிய நங்கைக்கும் பாழாய்ப்போன விவாகத்தை நடத்தாதீர்கள். அவ்வாறு நடக்கும் விவாகத்தின் முடிவு இதுதான். இதுதான், இதுதான்.......சாருகாஸா! நான் செல்கிறேன்....என்னை மணந்த வயோதிக நாதா! நான் செல்கிறேன், செல்கிறேன். என்னைப் பணத்தின் நிமித்தம் கிணற்றில் தள்ளிய தாயே!....இனி

பாவது எனக்குப் பின்னுள்ள என் தங்கைகளை என்னைத் தள்ளியதுபோல் தள்ளாது இன்ப மணம் செய்துவைக்கும்படியான அறிவுடன் வாழ்வாய். என்னன்பான சின்னு!........பத்மலோசனு! டாக்டர்! சோமநாதா!....சாருகாஸா!....சாருகாஸா! சாருகாஸா! கருணாநிதே! ஆ! ஹா! ஹா!.......ஹா!........என்று பெருத்த யானை வீறிடுவதுபோல கத்திக் கதறிப் புரளுகின்றாள்.

அந்த நிசப்தமான வேளையில் இவளுடைய குரலையும் இத்தகைய சொற்களையும் கேட்டவுடனே ஜெயமணியின் தாயார், சோமநாதன், பத்மா, பணியாளர்கள் எல்லோரும் திடுக்கிட்டு நடுநடுங்கிப்போய் தலைகால் தெரியாமல் ஓடிவந்தார்கள். ஜெயமணியின் இத்தகைய கோரமான காட்சியைக் கண்டு எல்லோரும் அலறுகிறார்கள். அப்போதே ஜெயமணி தன்னிரு கரத்தையும் சிரமேல் தூக்கி வணங்கியவாறு .........ஹா! சாருகாஸா!..........என்னப்பனே!........ கீதாசார்யனே! ருக்மிணீலோலனே! சரணம். சரணம். சரணம்.... என்று மூன்று முறை கூறினாள். ஹா! என்ற ஓர் கர்ஜனை செய்தாள். அதே நிமிடத்தில் நமது மங்கையர்மாமணியின்—அன்பார் அமுதமணியின் ஆவி, எல்லாம் வல்ல இறைவனின் திருவடியில் சென்று ஐக்கியமாகிவிட்டது. அச்சமயமே சாருகாஸன் கட்டுமீறிய பதைப்பும், அபாரமான நடுக்கமுங்கொண்டு அவ்விடத்திற்கு வந்து ஜனக்கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஜெயமணியின் அருகில் சென்றான். அங்குள்ளோர்கள் "ஐயோ ஜெயமணி! மோசம் செய்துவிட்டாயே!" என்று கத்துவதும், சாருகாஸனின் செவியில் விழுந்தது. அவன் தன்னிலை யழிந்தவாறு ஜெயமணியை உற்றுக் கவனித்தான். அவளுடைய சவமே அங்கிருப்பதை பரீக்ஷித்தறிந்துகொண்ட தக்ஷணமே, "ஆ! ஹா!.......என் ஜெயமணீ! கண்மணீ! நீயோ விண்ணுலகம் புக்கினை.......நீயோ, உயிர் நீத்தாய்! ஐயோ! என் செல்வக்கிளியே! ஹா! இதோ, என் காதல்கனி சென்றவிடத்திற்கு நானும் வருகிறேன். வந்துவிட்டேன். வந்துவிட்டேன். கண்மணி! உன்னைப் பிரியேன்; உயிர்தரியேன்." என்று கரைபுரண்ட சோகத்தால் கூறியவாறு வெட்டிச் சாய்த்த மரம்போல எல்லோரும் ப்ரமிக்குமாறு தடாரென்று கீழே விழுந்தான்.

அங்குள்ள மற்றவர்களுக்கு ஒரே திகிலும் ப்ரமையும் பிடித்து விட்டது. மனம்போனவாறு கதறுகின்றார்கள். சோமநாதன் தன்னைச் சற்று தேற்றிக்கொண்டு ஜெயமணியைச் சோதித்தான். உயிர் நீங்கியது அறிந்து, சாருகாஸனைப் பரீக்ஷித்தான். அவன் தனது உயிரையே வைத்திருந்த ஜெயமணியின் மரணத்தைக் கேட்ட— கண்ட—தக்ஷணமே இத்துக்கம் தாங்காமல் ஹ்ருதயம் வெடித்து (Heart failure) உயிர் நீங்கிவிட்டதையும் அறிந்த சோமநாதனின் வியப்பிற்கும், துக்கத்திற்கும் எல்லேயே இல்லை. கரைபுரண்டு வந்து விட்டது. பத்மலோசனுவும் கல்லாக நின்றுவிட்டாள். ஹா! என்னப்பனே! சாருகாஸா! உனது காதலல்லவோ காதல்! சத்தியத்தைப் பரிபாலித்த உத்தமன் நீயல்லவா! இத்தகைய காதலை அடைந்துள்ளவர்களை இவ்வுலகத்தில் கண்டதுண்டா! ஐயோ! இதென்ன கொடுமை....ஜெயமணி ஏன் தற்கொலை செய்துகொண்டாள்? ஹா! சாருகாஸா!'' என்று சோமநாதன் கதறுகிறான். 'என் கண்மணியுடன் நானும் இறப்பேன். என்னுடைய காதலையும் ஆழ்ந்த அன்பையும் மனதீரத்தையும் பிறகுதான்:என் பெற்றோர்கள் அறிவார்கள்,' என்று வாய்க்குவாய் சொல்லுவாயே! என் அன்பான தோழா! என்னைக் கைவிட்டுச்சென்றாயே! என்னப்பனே! உன்னைப்போல ஒருவரை உலகில் காணமுடியுமா!'' என்று சந்திரகாஸன் சாருகாஸன்மேல் விழுந்து புலம்புகின்றான். ஒருவரையொருவர் சமாதானம் செய்யக்கூடிய நிலைமையேயற்றது. அங்குள்ள எனையோரும் கதறுவதைத் தவிர மற்றதை மறந்தார்கள். அந்தோ! ஜெயமணியும் சாருகாஸனும் சவமாகப் படுத்திருக்கும் காட்சியைக் கண்ட எத்தகைய கல்லுதான் கரையாது! இரும்புதான் உருகாது! இங்குள்ள மனிதர் கதறுவது வியப்பா! ஜெயமணியின் தாயார் தன் பெண்மீது விழுந்தாள்; முட்டிக்கொண்டாள். தலையிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டாள். "ஐயோ! என் கண்மணீ! ஜெயமணீ! உன்னைச் சண்டாளி நானே பாழ்ப்படுத்திவிட்டேனே! உன்னுயிரை மடியச்செய்துவிட்டேனே! என் செல்வக் குழந்தாய், ஜெயமணீ! ஜெயமணீ! ஐயோ! உன்னைக் கிழவனுக்குக் கொடுத்து உயிரிழக்கச் செய்துவிட்டேனே! காதலின் தன்மையை அறியாது உன்னை சாதலுக்ிலக்காக்கிவிட்டேனே! உன்னுயிர் நீங்கிய உடனே உயிர்

துறந்த உத்தமனுடைய மனத்தின் ப்ரீதியை அறியாது பாழாகிவிட்டேனே! என் கண்ணே! ஜெயமணி! சாருகாலன் உயிர் தக்ஷணத்தில் நீங்கிவிட்டதே! உன்னைப் பெற்று வளர்த்து அரும்பாடுபட்ட என்னுயிர் இன்னும் நீங்கவில்லையே! இதிலிருந்தே யாருடைய அன்பு மேன்மையானதென்று விளங்குகின்றதே; ஐயோ! இனி யான் என் செய்வேன்? என் தங்கத்தை இழந்தேனே! என் கண்மணியை இழந்தேனே!'' என்று புலம்பிக் கதறி மூர்ச்சையாகிவிட்டாள்; சந்திரகாலனும் சோமநாதனும் சாருகாலனின் மீது விழுந்து புரண்டு மூர்ச்சையாகிப் பின் தெளிந்தார்கள்.

இதற்குள் உதயமாய்விட்டது இந்த அநியாயச் செய்தி ஊர் முற்றும் பரவிவிட்டது. கங்காதரருக்கும் தெரிந்து அப்படியே மூர்ச்சையாகிவிட்டார். இந்த தடபுடலில் அவரைக் கவனிக்கின்றவர்கள் யாருமில்லை. ஆஸ்பத்ரியிலுள்ள ஜனங்களும், ஊரில் உள்ள ஜனங்களும் திரள் திரளாக வந்து ஜெயமணியும், சாருகாலனும் இருக்கும் கண்ராவியைக் கண்டு அதிசயிக்காதவர்களும், கதறிக் கண்ணீர் சொட்டாதவர்களும் மிச்சமில்லை. தம் தம் வாயில் வந்தவாறெல்லாம் கூறிப் புலம்பினார்கள். அடையாறே அவ்வமயம் பெருத்த துக்கத்திலாழ்ந்துவிட்டது. இதற்குள் போலீஸாருக்கு இச் செய்தி தெரிந்ததும் அவர்கள் வந்து தமது சட்டப்படிக்கு விசாரணை செய்து ஜெயமணியின் கடிதத்தைக் கண்டு இது தற்கொலை என்று ருசுவாகி விட்டதால் பேசாது போய்விட்டார்கள். அப்போதே சாருகாலனின் பெற்றோருக்குச் சந்திரகாலன் தந்தியடித்தான். அன்று அந்த பங்களாவில் கூடியிருக்கும் ஜனத்திரளுக்கு எண்ணிக்கையே இல்லை. ஜெயமணியையும் சாருகாலனையும் போட்டோ எடுப்போரும், பேப்பர்காரர்கள் வந்து இவர்களின் செய்தியை அறிந்து அன்றைய பத்ரிகையிலேயே வெளியிடத் தீர்மானிப்போரும் அளவிட இயலாது. சாருகாலனின் பெற்றோர்கள் தந்தியைக் கண்டு ஓடோடியும் வந்தார்கள். சின்னம்மாளுக்கு ஒரு தந்தி சென்று அவளும் வந்தாள்.........இனிமேல் நடக்கவேண்டிய கண்ராவிகளையும், எல்லோரும் புலம்பும்—கதறும்—கோராமையையும் வாசகர்களே யூகித்தறியவும். இது பரியந்தம்

நமது கரமும் எழுதுகோலும் நடுங்கியதையும், கண்ணீர் தாரை தாரையா யோடியதையும் இனிமேல் சற்றுத் தடை செய்துகொள் கிறோம்.

* * * * *

மேற்குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து சுமார் ஒருமாத கால மாய்விட்டது. அவ்வொரு மாதமும் நமது அருங் குணபூஷண மணியாகிய ஜெயமணியினுடையும், சத்தியசந்தனாகிய சாரு காலனுடையவும் புகைப் படங்களும், அவர்களுடைய சரித்திரச் சுருக்கமும் சகல பேப்பர்களிலும் பறந்தன. கங்காதரருடைய உயிருக்குப் பதிலாக இரு உயிர்கள் (கிளிகள்) பறந்துவிட்டதால் அவருக்கு தினே தினே நன்றாகக் குணப்பட்டுவிட்டது. தனது சுய உணர்வைப் பெற்றவுடன் கங்காதரர் கதறியதைக் கூறச் சாத்யமன்று. தான் முட்டாள் தனமாக சிறிய நங்கையை மணந்து விட்ட மடமையைப் பலகாலும் கூறி வருந்திக் கண்ணீர் உதிர்க் கிறார். அவருடைய துக்கத்திற்கு ஆறுதல் கூறுவோரே இல்லை. கங்காதரரின் உயிர் நீங்கிவிடுமென்ற நிலைமையிலிருந்தவர் பிழைத்து விட்டார் என்பதைக் கேட்ட யாவரும் வெறுத்தார்கள். அவரே தன்னைத் தானே நொந்துகொண்டு பட்ட சங்கடம் கூறற்பாலது. எழுந்து உலாவக் கூடிய சக்தி வந்தவுடன் தான் சன்னியாசி யாகி காஷாயத்தைத் தரித்தார். பத்மலோசனா ஏற்கெனவே வைராக்யத் துட னிருந்தவள் இந்த சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு முற்றுந் துறந்த சன்னியாசினியாகி அந்த கோலமே பூண்டாள். ஜெய மணியால் நியமிக்கப்பட்ட ஆஸ்பத்திரியின் வேலையை நிறுத்தி விடாது எல்லோரும் விருத்தி யடையச் செய்துகொண்டே வந் தார்கள். ஜெயமணியுடையவும், சாருகாலனுடையவும் புகைப் படங்களை ஓர் ஆள் உயரத்தில் பெரியதாக எழுதி அதை ஆஸ்பத் ரியில் ஒரு ஜோடியும், பங்களாவில் ஒரு ஜோடியும் மாட்டிவிட் டார்கள். கங்காதரர் ஆதியில் ஜெயமணி தன்னை மணப்பதற்குமுன் 'இந்த கிழவரையா நான் மணப்பேன்?' என்று கூறிய வார்த்தை முதல் அவள் கடைசி வரையில் பேசிய ஒவ்வொரு வார்த்தை களையும் நினைத்துப் புலம்பிக் கண்ணீர் வடித்து ஜெயமணியின்

படத்தருகில் சென்று தன் வயிற்றெரிச்சல் தீரக் கதறுவார். "சாருகாஸ! உத்தமன் என்றால் நீ யல்லவா உத்தமன். சத்ய சந்தன். உன் காதலே அறியாது உங்களைக் காலனுக்கு அடிமை யாக்கிய பாவிகளுள் நானும் ஒரு பங்காளியாய்விட்டேன். உன் காதலி இறந்ததைக் கேட்டவுடன் உன்னுயிர் நீங்கிற்றே! என்னுயிர் நீங்கியதா! நீங்களிருவரும் அவ் வுலகில் ஒன்றாகச் சென்று நித்தியா நந்தமாக இருக்கிறீர்களா? ஐயோ! இந்த சங்கடங்களைச் சகித்துக் கொண்டு நான் உயிர் வாழ வேண்டுமா! என் கண்மணியின் மனந் துணிந்து அவள் பரமனடியில் சேர்ந்தாள். என் மனம் துணிய வில்லையே! பாவி நான் இறந்துவிடப் போவதாக வன்றோ பயந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். நான் இவ்வாறு பிழைத்து விடுவேன் என்பது தெரிந்தால் இன்னும் சில காலம் உலகிலிருப் பாளோ! ஆ! என் கண்ணே! ஜெயமணி! என்னுடைய மடத் தன்மையல்லவா உன்னை மடித்தது. சிச்சி! இனி இவ் வுலகத்தில் என் போன்ற கிழப் பிணங்கள் அநியாயமாக மணம் செய்து கொள்ளக் கூடாதென்றதை சட்டமாக்கும் பொருட்டாக ஓர் சங்கம் ஏற்படுத்தி அதில் இவ் விஷயங்களைப் பற்றிப் பிரஸங்கம் செய்து இந்த திட்டத்தைச் சட்டமாக்குவதற்கு இன்றே முயல வேண்டும்" என்று பலவிதம் எண்ணியவாறு ப்ரயத்தனம் செய்து, விருத்த விவாகத் தடை சங்கம் என்ற பெய ருடன் ஓர் சங்கம் நிர்மாணித்து அதற்கு அநேக பெரிய மனிதர்களை அங்கத்தினராகச் செய்து அச் சங்கத்தில் தானே தனது விஷயங் களையும், தனக்குத் தெரிந்த இதுபோன்ற விஷயங்களையும் வெளிப் படையாக உடைத்துப் பிரசங்கங்கள் செய்து வரத் தொடங்கினார். ஜெயமணியின் சரிதையை எழுதுவதற்கு ஏற்கெனவே தெரிவித் திருப்பதால் அவளுடைய மற்றய விஷயங்களையும் குறிப்பு வரைந்து அதோடு தன் தம்பியின் மகளின் (ராதாபாய்) சரிதையையும் கலந்து ஒட்டினார்ப்போல வரையும்படியாக ஏற்பாடு செய்தார். அவ் வாறே சில மாதங்களுக்குள் வரையப்பட்ட புத்தகத்தை தாம் நிர்ணயித்துள்ள சங்கத்தின் மூலம் வெளியிட்டுப் பிரசாரம் செய்து, தனது வரம்பு மீறிய செய்கையால் படித்தும் அறிவற்றத் தன்மை யாக நடந்துவந்த இராதாபாயின் முடிவையும், காதலர்களைப்

பிரித்துக் கிழங்களுக்குக் கடிமணம் செய்யும் கன்ராவியால் நேரும் கதியையும் விரிவாகப் பிரசங்கம் செய்தார். இச் சங்கத்திற்கு நூற்றுக் கணக்கில் அங்கத்தினர்கள் சேர்ந்து ஆதரிக்கத் தலைப் பட்டு இன்ன வயசுடையவர்கள் இன்ன வயது மாதர்களை மணக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஆமோதித்து அதைச் சட்டமாக்கு வதற்குத் தக்க பிரயாசை எடுத்துக்கொண்டார்கள். சாருகாஸனின் பெற்றோர்கள் தமது புத்திர சோகத்தினல் மனம் வெறுத்துத் தமது ஆஸ்தி பூராவையும் ஆஸ்பத்ரிக்கே அர்ப்பணம் செய்து விட்டு "இனிமேல் காதலர்களைப் பிரித்துப் பரிபவம் செய்யாதீர்கள்" என்று கூக்குரலிட்டுத் தமது செய்கையை எண்ணித் தாமே வருந்திக் கண்ணீர் சிந்தியவாறு மெலிந்து நாளடைவில் தமது மகனிடம் போய்ச் சேரும் வழியைத் தேடிக்கொண்டே துடிக்கின் றூர்கள். தமது மகனுக்குத் தாமே சத்துரு என்பதை நன்ருக அறிந்துப் படும் துன்பம் அளவிட இயலாது. ஜெயமணியின் தாயைப் பற்றிக் கூறவேண்டுவதே இல்லை ஜெயமணி ஓர் பையில் கடிதமும் நகையும் வைத்திருந்ததைக் கண்டு மனம் பதறி தான் செய்துவிட்ட தப்பிதத்திற்காக வருந்தியவாறு அன்றே தன் மற்றய மக்களுடன் அவ் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டாள். உயிர் மட்டும் நீங்கவில்லையே யன்றி நடைச் சவமாகிவிட்டாள். அந்தியகாலத்தில் ஆதரிப்பாருமற்று விட்டது. பணமும் சூனியமாகிவிட்டது. தனது மக்களும் அதி பால்யர்களாக விருக்கின்றூர்கள். அவர்களை வைத்துக்கொண்டு ஆதரிக்கச் சக்தி யற்று தத்தளிக்கின்ருள்! "ஐயோ! நாம் ஜெயமணிக்குச் செய்த பாதகமே நம்மை இவ்வித மாக்கிவிட்டது என்று நொந்தழுகிருள். அவர்களுடைய பரிதாபத் திற்கு இரங்கி கங்காதரர் அவர்களை அழைத்தும் அவ்விடம் செல்ல மனமில்லாது தனித்த வாசத்திலேயே நிலைத்துவிட்டாள். "ஐயோ! நமது குடும்பத்திற்கு பூரண ஆதரவு கிடைக்கு மென்று செய்த காரியம் இவ்விதமாகியதோடு நாமே சந்தியில் நிற்கலாயிற்றே" என்ற ஏக்கத்தினல் நொந்து அவ் வூரையே விட்டு வெளியூர் சென்று இரண்டு வீட்டில் சமயல் செய்யும் வேலையை மேற் கொண்டுத் தனது மக்களை வளர்க்கலானுள். தாம் செய்த வினை

யைத் தாமே யனுபவிக்கும் விதி இதுதான் போலும். குழந்தை களும் இலவசக் கல்லூரியில் படிக்கின்றனர்,

*  *  *  *  *

ஆஸ்பத்ரி விருத்தியாகிக்கொண்டே இருக்கின்றது. சங்கமும் செழித்து மும்முரமாக நடைபெறுகின்றது. சாருகாஸினியும், ஜெயமணியையும் வாழ்த்தாதோர் கிடையாது. சந்திரகாஸனும், ப்ரேமாமணியும் தமது முதல் குழந்தையுடன் பின்னும் இரண்டு வருடங்கள் மகிழ்ந்த பயனாக மற்றொரு பெண் குழந்தைக்குப் பெற்றோராகி களிப்பெய்துகின்றார்கள். சோமநாதனும் தனது குழந்தைகளுடனும் மனைவியுடனும் அவ்வாஸ்பத்ரியை வெகு ச்ரத்தையுடன் கவனித்துக்கொண்டு கிழவனாரை ஆதரித்துத் தருமம் பிறழாமனும், தூய்மையான சித்தத்துடனும், கடவுளிடத்து பக்தியுடனும், சந்திரகாஸனைப் பிரியாத நேசத்துடனும் ஆநந்தமாக வாழ்ந்துவருகிறான். சதாசிவ முதலியாரும் தனது துர்க்கிருத்யங்கள் அகன்ற நாள்முதல் சத்புத்திராயும், தன் மனைவியின்மனம் மகிழக்கூடிய கணவனாயும், சில குழந்தைகளுக்குப் பிதாவாயும் சந்திரகாஸனை மறவாத சினேகிதராயும் சுகமாகவிருக்கிறார். சகல மானவர்களும் ஏகோபித்த மனத்துடனும் அந்தரங்க ப்ரியத்துடனும் தமது கடமையைச் சரிவரச் செய்துகொண்டு சந்தோஷமாய் நித்தியகல்யாண வைபவத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

"தன்மனத்துக்கு ஒவ்வாத் தலைவனையே தான் மணக்கப்
புன்மனத்தைப் பெற்றோர் புரிகுவரேல்—நன்மகளும்
போற்பழிந்து மாயும் புருடனுடன்; இவ்விழிவை
இற்புடையார் எய்துவரோ இங்கு."

சுபம்! சுபம்!! சுபம்!!!

"சாருலோசனா" முற்றிற்று.

ஓம் தத் ஸத்

# ஜகன்மோகினி.

இது ஒரு தமிழ் மாதாந்த நாவல் சஞ்சிகை இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட அற்புதமான நாவல்களும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள் நாடு வெளி நாடு இரண்டிற்கும் தபாற் கூலி யுள்பட ரூ. 1-8-0 தான்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

# "HINDU"

(26—2—1930)

## SUGANDA PUSHPAM

*This is an interesting novel depicting the faithfulness of a Hindu wife.* The hero Pushpavanam, heir to an immense fortune is kept by his near relations ignorant of it and they consume all his patrimony. When he comes of age, he settles down as a cultivator and marries the heroine Sugandavalli. The sufferings of the loving couple in poverty are described vividly. When the story opens, the ruler of the country celebrates his 6_th birthday and the hero and the heroine go to the capital to share in the largesses distributed on the occasion. The heroine has a fine musical voice and her music and her beauty attract the attention of the crown prince who decoys her into his harem. The prince's wife however comes to the rescue and releases the heroine by clever strategy. After several other dangers which face the hero and the heroine in their separation, they are ultimately re-united. *The plot gives considerable opportunities to the authoress to introduce devotional songs and passages in praise of chastity and morality, and these add considerably to the attractiveness of the book.*

## VEERA VASANTHA.

16—4—1930

In this novel this well-known authoress has gone out of her usual track in search for a plot. *The novel is written with a purpose; the purpose is to emphasise the dangers to which Indian society would be exposed if the women movement of the western countries is allowed to gain a foot-hold in India.* The hero is a young educated man about to start life as a medical practitioner. He is anxious to marry an educated girl. On the eve of his marriage with a girl who has passed her Intermediate Examination, he finds that that girl is not a virgin. His next marriage with a girl who is a graduate and becomes a teacher, is not more happy. For the third time he marries a girl-wife in the traditional fashion and she proves a willing helpmate in the difficulties that face him and demonstrates her love and faith in a critical hour. *The novel contains several interesting incidents and is written in very fine style.*

சென்னையில் வெளியாகும் "அமிர்த குணபோதினி"
யின் மதிப்புரை:

210023

# மாதவமணி

அல்லது

## மாகிலாக் காதல்

"உண்மைக் காதலின் உயரிய தத்துவங்களை நன்கு விளக்கியுள்ளது. இனிமை பொருந்திய நடை. பணமொன்றையே கவனித்துக் கல்வி மணத்தை அலக்ஷியம் செய்யும் பெண்வீட்டாரது பேதமையை இக்கதையில் காணலாம். மாதவன், ஸ்ரீமணி இவர்களின் ஆழ்ந்த காதலும், வாழ்க்கையும் வாசகர்களின் மனத்தைக் கவரச்செய்யும். கதை சிறிதே யெனினும் மிகச் சுவையுடையது."

(இதழ் 42- புரட்டாசி மீ".)

## கோபாலரத்னம்

இப்புஸ்தகத்தை வாசிக்கத் தொடங்கியபின் கீழே வைக்க மனம் வரவில்லை. அவ்வளவு அழகாய் ஸ்வாரஸ்யமாய் நம் கண்ணெதிரிலேயே நடப்பதுபோன்றும் அர்த்த புஷ்டியுடன் அநுபவமயமாய் வரைந்துள்ளார். தாய்தந்தையர்கள் நன்கு கற்ற அறிஞர்களான தம் மக்களை மிருகத்திலும் கேடாக நடத்தி வசைமாரிகளை வாரித்தூற்றி அவர்களின் மனத்தைப் புண்ணாக்குவதைக் குறித்து இந்த நாவலில் காணப்படும் ஸம்பவங்களை நாம் உண்மையென்றே வற்புறுத்துவோம். என்னதான் தாம் பெற்ற குழந்தைகளாயினும், அவர்கள் இப்பொழுது பால் குடிக்கும் குழந்தைகளல்லவென்பதை மனதிற்கொண்டு, அவர்களிடம் ஒரு கௌரவத்தையும் மதிப்பையும் வைத்து நடத்திவரவேண்டியது பெற்றோர்களின் கடமை. வீணாகத் தமது குமாரர்களைத் தூற்றி அவர்கள் வெந்து சாகும்படி செய்வதில் இவர்கள் வாரிக்கொள்ளும் லாபமென்னவோ? இந்தப் பாகத்தை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். மருகியர் படும் பாடும், வரதக்ஷிணையின் கொடுமையும், சாந்தி முகூர்த்தத்திற்குப் பணம் கேட்கும் நாசமாய்ப்போன வழக்கமும் இதில் அநுபவபூர்வமாய்க் காட்டப்பட்டுள்ளன. கோபாலன் வேலை கிடைக்கப் பெறுமல் படும் துயர் ஒரு கண்ராவி. பிராமணரல்லாதாரின் கிளர்ச்சியில் பிராமணர்களுக்கு வேலை கிடைக்கப்பெறுமல் அலையும் அவதிகளை வாசித்து மனமுருகி நின்றோம். கதாநாயகியான இரத்னம்பாள் ஒரு தங்க விக்கிரகம். அவ்வனிதாமணியின் பதிபக்தியும் பொறுமையும், புத்தி தீக்ஷண்யமும் இந்த நாவலை உயர்தரமுள்ளதாக்குகின்றது. பெண்மணிகள் படிக்கத்தகுந்த நூல். இதன் ஆசிரியர் பல நாவல்களின் பிரபல கிரந்தகர்த்தா ஆவர்.

(இதழ் 50—வைகாசிமீ".)

---

மேற்கண்ட இரண்டு நாவல்களும் ஒரு ரூபாய் முன்பணமனுப்புவோருக்குத் தபால் செலவின்றி அனுப்பப்படும். இதனுல் ஐந்து அணு லாபமென்பதைக் கவனியுங்கள்.

# சாருலோசனை

(இரண்டாம் பாகம்)

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது.

பிரசுராலயம் :

''ஜகன்மோகினி'' ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

1930.

காபிரைட்] [விலை ரூ. 1-8-0

PRINTED AT
THE TATA PRESS,
5, THAMBU CHETTY STREET,
G. T. MADRAS.

# "ஜகன்மோகினி" யில்

## வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார்

எழுதிய

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மலர் 1. | காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) | | ரூ. | 4 | 0 | 0 |
| மலர் II. | விலாஸவதி (2-பாகங்கள்) | | ரூ. | 3 | 0 | 0 |

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| கனகசபை | ரூ. | 1 | 8 | 0 |
| கோகிலம் | ரூ. | 0 | 6 | 0 |

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மலர் III. | வைதேகி (2-பாகங்கள்) | .... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் IV. | பத்மசுந்தரன் (2-பாகங்கள்) | ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் V. | ராதாமணி (2-பாகங்கள்) | ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் VI. | நவநீதகிருஷ்ணன் | ... | ரூ. | 2 | 0 | 0 |
| | சண்பக விஜயம் .... | .... | ரூ. | 1 | 12 | 0 |
| | கௌரீ முகுந்தன் | .... | ரூ. | 1 | 12 | 0 |
| | சுகந்தபுஷ்பம் | .... | ரூ. | 1 | 0 | 0 |
| | கோபால ரத்னம் | ... | ரூ. | 0 | 14 | 0 |
| | வீரவஸந்தா | .... | ரூ. | 0 | 8 | 0 |
| | மாதவமணி .... | .... | ரூ. | 0 | 3 | 0 |

### "ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வைதேகி ... | ... | ரூ. | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் .... | .... | ரூ. | 2 | 0 | 0 |
| ராதாமணி .... | .... | ரூ. | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் .... | .... | ரூ. | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் .... | .... | ரூ. | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் — | .... | ரூ. | 1 | 8 | 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி பொதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதனசிங்கர் | ரூ. | 1 | 0 | 0. | மர்மமுகி | ரூ. | 0 | 12 | 0 |
| சுந்தரவதனி | ரூ. | 0 | 12 | 0 | வஸந்தசமுத்ரம் | ரூ. | 0 | 12 | 0 |
| மஞ்சுளா | ரூ. | 0 | 6 | 0 | அமிருதமாலினி | ரூ. | 0 | 4 | 0 |

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

# அமிர்தாஞ்சனம்




எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

**40 வருஷங்களாக**

**“ஜகன்மோகினி” யாய் விளங்குவது**

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.